# அபிவிருத்திப் புவியியல்

## உலகப்பாங்குகள்




1

க. குணராசா - கமலா குணராசா.

ஸ்ரீ லங்கா வெளியீடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Miss S. Ramasamy
G. C. E A/L

# அபிவிருத்திப் புவியியல்

## 1

### உலகப்பாங்குகள்


க. குணராசா; B.A. Hons. (Cey). C.A.S.

முன்னாள்: புவியியல் உதவி விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை-கொழும்பு. புவியியல் ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி; பகுதிநேர விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி. யாழ்ப்பாணம். அதிநிப் போத ஆசிரியர், ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை. ஆலோசக ஆசிரியர் 'புவியியல்', காரியாதிகாரி, கிண்ணியா. உதவி அரசாங்க அதிபர், துணுக்காய்.

கமலா குணராசா, B.A Cey.

ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி.



ஸ்ரீலங்கா வெளியீடு

காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O முதற்பதிப்பு:- ஓகஸ்ட் 1980.
O (C) Mrs. K. Kunarasah, 82, Brown Road Jaffna.
O அச்சுப்பதிப்பு:- சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம்.

விலை: 8/50

விற்பனையாளர்

ஸ்ரீலங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கல்விப்பொதுத் தராதரப்பத்திர உயர் தர வகுப்புப் புவியியல் மாணவர்களின் புதிய பாடத்திட்டத்திற்கு இணங்க, அபி விருத்திப் புவியியல் - 1 உலகப் பாங்குகள்' என்ற இந்நூலாக்கப்பட்டிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து 'அபிவிருத்திப்புவியியல்-2 தனி ஆய்வுகள்' என்ற நூல் வெளிவரவுள்ளது. புதிய பாடத்திட்டத்திற்குரிய 1. பௌதிகச்சூழல் - நிலவுருவங்கள், 2. பௌதிகச்சூழல் – காலநிலையியல், 3. படம் வரை கலை ஆகிய நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. அத்துடன் புதியபாடத்திட்டத்தின்படி பயிலும் புவியியல் மாணவர்களுக்கான 'புவியியல் புள்ளி விபரவியல்' என்ற நூலும் வெளிவந்துள்ளது. இந்நூல்கள் மாணவர்களுக்குச் சிறந்த புவியியல் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன என நம்புகின்றோம். இந்நூல்களைக் கல்வியுலகு உவந்தேற்கும் என்பதில் ஐயமில்லை.

வணக்கம்

யாழ்ப்பாணம்.
10-9-1980

— பதிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்

## அபிவிருத்திப்புவியியல்

1. உலகப்பாங்குகள்.

   (அ) அபிவிருத்தி எண்ணக்கரு.

   (ஆ) அபிவிருத்தியில் இடவேறுபாடுகள்.

   (இ) நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல், பிரதேசவாதம், சர்வதேசவாதம்.

   (ஈ) உலகின் முக்கிய அரசியல் முறைமைகளும், சமூகப்பொருளாதார முறைமைகளும், அவற்றின் புவியியல் அடிப்படையும்.

2. தனி ஆய்வுகள்.

   (அ) அபிவிருத்தியடைந்த நாடுகள் சம்பந்தப்பட்டவை.

   (ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் சம்பந்தப்பட்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திப் புவியியல்

# 1 அபிவிருத்திப் புவியியல்

## ஓர் அறிமுகம்

பூமியைப்பற்றிய அறிவியலைப் புவியியல் எனலாம். ஆதியில் பூமியின் பௌதிகவியல்புகளை மட்டும் விபரிக்கின்ற துறையாகப் புவியியல் விளங்கியது. ஆனால், நவீன புவியியல் மனிதனுக்கும் பூமிக்கும் இடையிலான பிணைப்பைக் காரண காரியத்தொடர்புடன் விபரிப்பதாக உள்ளது, புவிச்சரிதவியல், தரைத்தோற்றம், காலநிலை, மண், இயற்கைத்தாவரம் முதலிய பௌதிகவியல்புகளையும், மக்கள் தொகை, நிலப்பயன்பாடு, கைத்தொழில்கள், அரசியல், வர்த்தகம் முதலிய பண்பாட்டுவியல்புகளையும் புவியியல் விபரிக்கின்றது. அதனால், ஒவ்வொரு இயல்பையும் சிறப்பாக விபரிக்கின்ற தன்மை கருதி, புவியியலில் பல பகுதிகள் உருவாக்கப்பட்டன. பௌதிகப் புவியியல், மானிடப் புவியியல், பிரதேசப் புவியியல், பொருளாதாரப் புவியியல் வணிகப் புவியியல், அரசியல் புவியியல் என்பன அவ்வாறு உருவானவையே

பூமியின் புவிச்சரிதவியல், தரைத்தோற்றம், காலநிலை முதலிய இயல்புகளை விபரிப்பது பௌதிகப் புவியியலாகும். மக்கள், அவர்களது முயற்சிகள், பழக்கவழக்கங்களை மானிடப் புவியியல் விபரிக்கும், மனிதரின் பொருளாதார நடவடிக்கைகள், உற்பத்தி நுகர்வு முதலியனவற்றைப் பொருளாதாரப் புவியியல் விபரிக்கும் மக்களது வர்த்தக நடவடிக்கைகளையும் பங்கீட்டையும் வணிகப் புவியியல் ஆராயும். ஒரு இயற்கைப் பிரதேசத்தின் புவியியல் விபரங்களைக் கூறுவது பிரதேசப் புவியியலாகும். உலகின் அரசியல் பிரிவுகள், மக்கள் குடியிருப்புகள் முதலியவற்றை அரசியல் புவியியல் விபரிக்கின்றது, எவ்வாறாயினும், இப்பகுதி ஒவ்வொன்றும், புவியியல் என்ற ஆதாரத்தின் அடியொற்றி, தம் சிறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியல்புகளே விபரிப்பனவாகும். இவ்வகையில் உருவான புதிய தொரு துறையே அபிவிருத்திப் புவியியலாகும்.

பொருளாதாரப் புவியியலின் வளர்ச்சியுற்ற ஒரு துறை என அபிவிருத்திப் புவியியலைக் கூறலாம். நாங்கள் வாழ்கின்ற புவி மாறிவரும் தன்மையைக் கொண்டது. புவியின் முகம், மனித னது விஞ்ஞான, தொழில் நுட்ப விருத்தியால் அடிக்கடி மாறி வருகிறது. சூழலை வெற்றி கொள்ள முடியாத பண்டைய மனிதன் இயற்கைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தான். சிறிது சிறி தாக அவனுடைய அறிவின் எல்லை விரிவடைந்தது. சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றி அமைத்துக் கொண்டதுடன், சூழலைத் தனக்கு ஏற்ப மாற்றி அமைக்கவும் அறிந்து கொண்டான். புவியின் எல்லாப் பகுதிகளிலும் இந்த முன்னேற்றம் நிகழ்ந்து விடவில்லை. ஒரு சில பகுதிகளில் ஆரம்பமான இந்த முன்னேற் றம், மெதுவாகப் புவியின் ஏனைய பகுதிகளுக்கும் பரவ ஆரம் பித்தது. இதன் காரணமாகப் புவியின் பல பாகங்களிலும் பொருளாதார வளர்ச்சி ஏற்படலாயிற்று.

எனினும் உலகின் எல்லா நாடுகளும் ஒரே கதியில் பொரு ளாதாரத்தில் வளர்ச்சியடைந்து விடவில்லை. மாறுகச் சில பகுதி களில் வளர்ச்சி அதிகமானதாகவும், சில பகுதிகளில் வளர்ச்சி குறைவானதாகவும் ஏற்பட்டது. பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையிலும், வாழ்க்கைத்தர அடிப்படையிலும் உலக நாடு களிடையே பெரும் வேறுபாடுகள் உருவாகின. பொருளாதார அபிவிருத்தியின் ஆதாரத்தில், உலக நாடுகளில் இரு வகை களைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவை:

1. சில நாடுகள் விருத்தியுற்ற நாடுகளாக விளங்கு கின்றன.

2. பல நாடுகள் விருத்தி குறைந்த நாடுகளாக விளங்கு கின்றன.

எனவே புவியியலின் பிரதேச வகுப்பாய்விற்குப் புதியதொரு குறிகாட்டி உருவானது. தரைத்தோற்ற அடிப்படையில் உலகத் தைப் பிரித்து ஆராய்வது போல, காலநிலை அடிப்படையில் உலகத்தை வகைப்படுத்தி ஆராய்வது போல, அபிவிருத்தி அடிப்படையிலும் உலகத்தைப் புவியியல் ஆதாரத்தில் ஆராய முடிந்தது. அவ்வகையில் உருவான புதிய தொரு துறைதான் 'அபிவிருத்திப் புவியியல்' ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திப் புவியியல் எனும் இப்பகுதி, அபிவிருத்தி, புவியியல் ஆகிய இரண்டு இயல்புகளின் பண்புகளையும் தன்னகத்தே கொண்ட ஒன்றாகும். இடத்திற்கு இடம் மாறுபடும் அபிவிருத்தி நிலைக்குரிய புவியியற் காரணிகளை இது ஆராயும். சில நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்குச் சாதகமாக அமைந்த புவியியல் காரணிகளையும், சில நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக் குறைவுக்குப் பாதகமாக அமைந்த புவியியல் காரணிகளையும் இப்பகுதி ஆராயும். இன்றைய நிலையில் ஒரு நாட்டின் அபிவிருத்தியின் அளவைச் சரிவர மதிப்பீடு செய்வதற்கு வாய்ப்பு வசதிகளுள்ளன. புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரிப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அவற்றினைக் கையாள்வதிலுள்ள நவீன இயந்திரங்கள் (கணணிகள்) போன்றவை அபிவிருத்தி அளவீட்டிற்குப் பெரிதும் உதவுகின்றன.

## அபிவிருத்தியில் புவியியலின் பங்கு

ஒரு நாட்டின் அபிவிருத்தி இயற்கையாலோ அல்லது மக்களாலோ ஏற்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். பௌதிகச் சூழலையும் மனிதரையும் இணைத்து விபரிக்கின்ற ஒரேயொரு துறை புவியியலாகும். பௌதிகச்சூழல் மனிதனின் வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கின்றது.

மனிதன் ஒரு பௌதிகச்சூழலிலேயே வாழ்கிறான். சிலவிடத்து முற்றாகப் பௌதிகச் சூழலிற்குக் கட்டுப்பட்டவனாகவும், சிலவிடத்து அதன் செல்வாக்கிற்குட்பட்டவனாகவும் வாழ்ந்து வருகிறான். மக்களின் உணவு, உடை, இருப்பிடம் என்ற தேவைகளைப் பௌதிகச்சூழலே நிர்ணயிக்கின்றது. மக்களின் எண்ணங்கள், மதம், பண்பாடு, நாகரிகம் என்பனவற்றையும் பௌதிகச் சூழல் நிர்ணயிக்கின்றது. மனிதனது பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவில் பௌதிகச் சூழலினால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனவே மனிதனது பண்பாட்டு, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றிற்குப் பௌதிகச்சூழல் முக்கிய காரணியாகின்றது. மனிதனால் நுகரப்படுகின்ற மூலாதாரப்பொருட்களின் களஞ்சியவீடாக இயற்கைச்சூழல் விளங்குகிறது. அத்துடன் மக்களது நுகர்ச்சி, உற்பத்தி, பொருள்மாற்றம் என்ற செயல்களுக்கு பௌதிக, உயிர்ச்சூழல் தன்மைகள் துணையாகவுள்ளன. ஓரிடத்தில் அபிவிருத்தியை விபரிப்பதற்கு இயற்கைச்சூழலின் தன்மைகள் அறியப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைச்சூழல் என்பது யாது? புவியின் நிலப்பரப்பு, நீர்த் தொகுதிகள், வளிமண்டலம் என்பனவே இயற்கைச்சூழலை உருவாக்குகின்றன. வளி, நீர், நிலம் ஆகிய மூன்றின் இணைப்பால பூமியில் உயிரினங்கள் தோன்றின. பௌதிகச் சூழலை முக்கியமாகப் பின்வருவன உருவாக்குகின்றன.

| | |
|---|---|
| 1. புவியியல் நிலையம் | 2. தரைத்தோற்றம் |
| 3. காலநிலை | 4. கனிப்பொருள்வளம் |
| 5. நீர்வளம் | 6. மண் |
| 7. இயற்கைத்தாவரம் | 8. விலங்குகள். |

## புவியியல் நிலையம்

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் புவியியல் நிலையம் மிக முக்கியமானது. புவியியல் நிலையத்தினைப் பொறுத்தளவில், தனி நிலையம், சார்பு நிலையம் என்ற இரண்டும் முக்கியம் பெறுகின்றன. தனிநிலையம் என்பது அகல நெடுங்கோட்டு நிலையத்தினைக் குறிக்கும். சார்பு நிலையம் என்பது குறித்த ஒரு நாடு எக் கண்டத்தை அல்லது எந்த நீர்ப்பரப்பைச் சார்ந்திருக்கின்றது என்பதைக் குறிக்கும் உதாரணமாக இலங்கை மத்திய கோட்டையடுத்து அமைந்திருக்கின்றது என்று கூறும்போது அது தனிநிலையமாகும் இத்தனிநிலைய அமைப்பினால் தான் இலங்கையின் காலநிலை நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் தென்கிழக்கே இந்துசமுத்திரத்தில் இலங்கை அமைந்திருக்கின்றது என்று கூறும் போது அது சார்பு நிலையமாகும் இலங்கையின் இத்தகைய அமைவின் காரணமாகத்தான் வரலாற்றுப்பாதிப்புகளும், பொருளாதார மாற்றங்களும் ஏற்பட்டன. இந்தியாவின் கலாச்சாரம் (மதம், மொழி, குடிப்பெயர்ச்சி) இலங்கையில் நிலைபெறவும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையைக் கேந்திரத்தானமெனக்கருதிக் கைப்பற்றவும் முடிந்தது. இலங்கையில் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை நிலைபெற்று பொருளாதார மாற்றம் ஏற்படவும் ஏதுவாயிற்று. மேலும் இமயமலைப் பாகத்தில் அமைந்திருக்கும் நேபாளம் விருத்தியுறாதிருப்பதற்கும், சிங்கப்பூர் விருத்தியுற்றிருப்பதற்கும் காரணம் அவற்றின் அமைவிடமேயாகும். குறித்த ஒரு பிரதேசத்தை அடைவதற்குரிய வாய்ப்புகள் இவ்விடத்தில் மிக முக்கியம் பெறுகின்றன. புவியியல் நிலையத்தின் சார்பு நிலையத்தால் பண்பாட்டுப் பொருளாதார மாற்றங்கள் உருவாகின்றன. தொழில் வளர்ச்சியுற்ற ஒரு நாட்டிற்கு அருகில் அமைந்திருக்கும் நாடும் காலக்கிரமத்தில தொழில் வளர்ச்சி அடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரைத்தோற்றம்

தரைத்தோற்றம் மனிதர்களது பொருளாதார நடவடிக்கைகளைப்பாதிப்பதில் அதிக பங்கினை வகிக்கின்றது. மலைப்பிரதேசங்கள் மக்களது செயற்பாட்டையும் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்துகின்றன. சமவெளிகளில் இடநெருக்கடி ஏற்பட்டதாலும் போட்டி ஏற்பட்டதாலும்தான் மக்கள் மலைப்பிரதேசங்களில் வாழ்கின்றனர். மிகவுயர்ந்த மலைப்பிரதேசங்கள் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு உகந்தனவாகவில்லை. இப்பிரதேசங்களின் கரடுமுரடான மண்ணும், வளங்குறைந்த மண்ணும் பயிர்ச்செய்கைக்குகந்தனவாகவில்லை. மண்ணை உயர்மலைப்பிரதேசங்களில் உழுது பண்படுத்துவதும் கடினம். ஆஸ்திரியா, சுவிர்சர்லாந்து, திபெத், அந்தீஸ் பிரதேசங்கள் என்பன இத்தகையனவாகும். மலைப்பிரதேசங்கள் தொழில் வளமுடையனவல்ல. கனிப்பொருள் வளம் கொண்டனவுமல்ல எனவேதான் சமவெளிகள் உலகின் சிறந்த பயிர்ச்செய்கைப் பிரதேசங்களாகவும் அதிக குடித்தொகை கொண்டனவாகவும் விளங்கி வருகின்றன. மனிதனின் நடவடிக்கைகளுக்குச் சமவெளிகள் உகந்தனவாகவிருப்பதால், வடசீனச் சமவெளி, இந்துகங்கைச சமவெளி, அமெரிக்கப் பிறேயறீஸ் என்பன சிறந்த பயிர்சசெய்கைப்பிரதேசங்களாக விளங்கி வருகின்றன. தாழ்நிலங்களில் பண்ணரிப்புக் குறைவு. அதனுல் அவை வளமான மண்ணைக்கொண்டனவாகவிருக்கின்றன. ஒரு பிரதேசத்தின் நீர்வளமும் தரைத்தோற்றத்தைப் பொறுத்ததாகும். மலைப்பிரதேசங்கள் காணப்படும்போது மழைபொழிவும் அதிகரித்து, நீர்வளம் கொண்ட நதிகளும் பாய்கின்றன. போக்குவரத்துப் பாதைகளும் தரைத்தோற்றத்தினுல் நிர்ணயிக்கப்படுகின்றன. வீதிகள், புகையிரதப்பாதைகள், கால்வாய்கள் என்பன சமவெளிகளில் அமைப்பது இலகு. மலைப்பிரதேசங்களில் அமைப்பது கடினம். மேலும் கடற்கரையோரங்களைக் கொண்டிருக்கும் நாடுகள் மீன்பிடித்தல், நகர அபிவிருத்தி, வெளிநாட்டுத் தொடர்பு, துறைமுகவிருத்தி என்பவனவற்றில் முன்னேறியுள்ளன. கடற்கரையோரங்களைக் கொண்டிருக்காத நாடுகளின விருத்தி குன்றந்திருக்கின்றது.

## காலநிலை

மனிதன்மீது ஆதிக்கம் செலுத்துகின்ற பௌதிகக்காரணிகளில் காலநிலை முக்கியமானது பௌதிகச் சூழலில் காலநிலையின் ஆதிக்கமே அதிகமாகும். மனிதரது உடலமைப்பு, உணவு, உடை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிவிடம் என்பனவற்றினைக் காலநிலையே நிர்ணயிக்கின்றது. வெப்பவலய நாடுகளில் வாழ்கின்ற மக்களின் உடல் நிறம் கறுப்பாகும் இடைவெப்பப்பிரதேச நாட்டு மக்களின் உடல் நிறம் வெள்ளையாகும். இந்த வேறுபாட்டிற்குச் காரணம் வெப்பவலயத்தில் நிலவும் உயர் வெப்பநிலையும், இடைவெப்பப்பிரதேசத்தில் நிலவும் குளிர்ந்த காலநிலையுமாகும் அயனமண்டலப் பிரதேச மக்கள் அரிசியையும் (ஆசிய நாட்டு மக்கள்), சோளத்தையும் (ஆபிரிக்க நாட்டு மக்கள்) பிரதான தானிய உணவாகக் கொள்கின்றனர். இடைவெப்பப்பிரதேச நாட்டுமக்கள் கோதுமையைப் பிரதான உணவாகக் கொள்கின்றனர் இவ்வேறுபாட்டிற்குக் காரணம் அவ்வப்பிரதேசங்களில் இந்தத் தானியங்கள் நன்கு பயிராகக்கூடிய காலநிலை நிலவுவதாகும். வெப்பவலய மக்கள் பருத்தி ஆடைகளை அணிவதற்கும், இடைவெப்பப்பிரதேச மக்களும் குளிர்ப்பிரதேச மக்களும் கம்பளி ஆடைகளையும் தோலாடைகளையும் அணிவதற்கும் காரணம் காலநிலையாகும். நாங்கள் விருந்தை, கலைவாசல் என்ற திறந்த அமைப்பில் வீடுகளைக் கட்டிக்கொள்கின்றோம் ஆர்க்டிக் பிரதேசத்தில் வாழ்கின்ற எஸ்கிமோவர்கள் 'இச்ளூ' என்ற பணிக்கட்டி வீட்டைக்கட்டிக் கொள்கின்றார்கள். இவற்றிற்குக் காரணம் காலநிலையாகும். இன்று காலநிலையின் ஆதிக்கத்தை மனிதன் சிறிது குறைத்திருக்கிறான். ஆடை அணிவது, வீட்டில் வசிப்பது, நெருப்பை உபயோகிப்பது, செயற்கை வெளிச்சங்களை உண்டாக்குவது, நீர்ப்பாசன வசதிகளை அமைப்பது என்பன அத்தகையனவாகும். சடுங்குளிர்ப்பிரதேசமான ஆர்க்டிக், அந்தாட்டிக் பகுதிகளில் மனிதன் ஐதாக வாழ்கின்றமைக்குக் காரணம் காலநிலையின் உவப்பற்ற தன்மையாகும். அதேபோல வறண்ட பாலைநிலங்களில் மனிதன் ஐதாக வாழ்வதற்குக் காரணம் வறட்சியும் நீரின்மையுமாகும். எனவே மனிதனின் சகல செயல்களிலும் காலநிலை அதிக ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

## கனிப்பொருள்வளம்

பாறைகளின் அமைப்பு, அவை கொண்டிருக்கும் கனிப்பொருள் வளம் என்பன பௌதிகச்சூழலில் முக்கியமானவை. இவை புவிச்சரிதவியல் அமைப்பைப் பொறுத்தன உவப்பற்ற காலநிலை, பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பற்ற மண் என்பன ஒரு பிரதேசத்தில் காணப்பட்டாலும், அப் பிரதேசத்தில் கனிப்பொருள் வளம் இருக்கில் அப் பிரதேசத்தில் மனிதன் குடியேறி வாழத்தலைப்பட்டுவிடுகிறான், பெற்றோலிய அடையற்படைகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்ற மத்திய கிழக்கு வரண்ட நாடுகள், இன்று விருத்தியடைந்து வருகின்றன. காரணம் பெற்றோலிய வளமாகும். நிலக்கரிப்படுக்கைகளையும், இரும்புத்தாதுப்படிவுகளையும் கொண்ட பாறைப்படைகள் ஐக்கிய அமெரிக்காவில நன்கு அமைந்திருக்கின்றன. அதனால் தான ஐக்கிய அமெரிக்கா கைத்தொழில் ஆக்கங்களில் உலகிலேயே சிறந்த நாடாக வளரமுடிந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் விருத்திக்கு ஒரே காரணமாக விளங்குவது சுண்ணும்புக்கல்லும் அதனால் காணப்படும தரைகீழ் நீருமாகும்.

## நீர்வளம்

உலகின் பண்டைய நாகரிகங்கள் நதிக்கரையோரங்களில் உருவாகியிருக்கின்றன. யூப்பிரட்டீஸ் - ரைகறிஸ், சிந்து, நைல் நதிக்கரையோரங்களில் மக்கள் நிலையாகக் குடியேறி வாழத்தலைப்பட்டமைக்குக் காரணம் நீர்வளமாகும். நீர்வளம் பௌதிகச் சூழலில் முக்கியமானது நீர்வசதியுள்ள வரண்ட பகுதிகளிலும் மக்கள் வாழ்வர். பாலைநிலங்களில் பாலைவனபசுஞ்சோலைகளில் மக்கள் வாழ்வதற்குக் காரணம் நீர்வசதியே. இலங்கையில் உலர் வலயத்தாழ்நிலததில் நீர்ப்பாசனக் குளங்களை அமைத்து மக்கள் குடியேற்றங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைகீழ் நீரை ஆதாரமாகக்கொண்டே மக்கள் சீவிக்கின்றனர். அந்தாட்டிக் பனிக்கட்டி மலைகளைக் கலகாரிக்கு இழுத்து வந்து உருக்கி நீர்பெற முடிந்தால் வறள் கலகாரியும் மனிதன் வாழ உகந்த நிலமாக மாறிவிடும். கஸ்பியன் கடலிற்கும் ஏரல் கடலிற்கும் இடையிலுள்ள பாலைநிலத்தில் 3000 அடிகளுக்குக்கீழிருந்து தரைகீழ் நீர் பெறப்படுவதால் இன்று அப்பிரதேசத்தில் குடியேற்றங்கள் உருவாகிவருகின்றன.

## மண்

மண்ணே மனிதனின் மூலவளமாகும். இயற்கை வழங்கிய செல்வம் மண்ணாகும். "ஒரு பிரதேசத்தின் நாகரிகச் சரித்திரம் மண்ணில இருந்து தோன்றுகிறது" என வில்காஸ் என்ற அறிஞர் கூறியிள்ளார். "மண் அழிந்ததென்றால் அங்குள்ள மக்களும் அழிவர்" என ரூஸ்வெல் கூறியுள்ளார். ஒரு பிரதேசத்தின் செழிப்பை அப்பிரதேசத்தின் மண்வளத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மண்ணைப்பொறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழிப்பான வண்டல்மண் பயிர்செய்வதற்கு மிகவும் ஏற்றது. இந்தியாவின் இந்துகங்கை வண்டற்சமவெளியில் பயிர்ச்செய்கையும் விருத்தியுற்று அதிக மக்கள் அடர்த்தியாக வாழ்வதற்கும் காரணம் அச்சமவெளியின் வண்டல் மண் வளமாகும். மக்கள் அதிகம் தங்கி வாழ்வது பயிர்ச்செய்கையிலாகும். அதனுல் உலகில் எங்கு மண் அதிக வளமானதாக இருக்கின்றதோ அங்கு மக்கள் செறிவாக வாழ்கின்றனர். பயிர்ச்செய்கைக்கு உவப்பற்ற உலர்மண் பிரதேசத்திலும், உவர்மண்பிரதேசத்திலும் மக்கள் விரும்பி வாழ மாட்டார்கள்.

## இயற்கைத்தாவரம்

பௌதிகச்சூழலில் இயற்கைத்தாவரம் ஒன்ருயினும், பௌதிகச்சூழலைச் சரியாக இனங்காட்டும் குறிகாட்டி இயற்கைத்தாவரமாகும். காலநிலைக்கும் மண்ணிற்கும் இணங்க இயற்கைத்தாவரம் அமைகின்றது. இயற்கைத்தாவரத்தைப்பொறுத்தே ஒரு பிரதேசத்தின் உயிரினம் அமைகின்றது. தாவரங்கள் மக்களுக்கு உணவு வழங்குகின்றன. மரங்களைத் தருகின்றன. மேய்ச்சல் நிலங்களாக விளங்குகின்றன. மண்ணரிப்பைத் தடுகின்றன. காலநிலையை ஓரளவு நிர்ணயிக்கின்றன. தாவரங்கள் அடர்ந்து வளர்கின்ற சேரலிப்பான அமேசன் பகுதியிலும், தாவரங்கள் அரிதாகக் காணப்படும் வறண்ட பிரதேசங்களிலும் மககள் வாழவிரும்பார்.

## விலங்குகள்

வேட்டையாடுகின்ற மக்களும் மந்தைமேய்க்கின்ற மக்களும் விலங்குகளில் தங்கியுள்ளனர். இறைச்சி, பால், தோல், மயிர், தந்தம், கொண்டு செல்லற் சாதனம் என விலங்குகள் மனிதனுக்கு உதவுகின்றன. அவுஸ்திரேலிய சுதேசிகள், கலகாரி புஸ்மன்கள், மத்திய ஆசிய நாடோடிகள் ஆகியோர் விலங்குகளில் தங்கியுள்ளனர். துருவமான்கள் இல்லாவிடில் எஸ்கிமோவர் உணவின்றி அழிய நேரிடும். மனிதன் தான் வளர்க்கத்தக்க விலங்குகளைத் தேர்ந்தெடுத்து வளர்த்து வருகிருன். நோய்களைப் பரப்புதல், பயிர்களை அழித்தல் என்பனவற்றிற்கும் விலங்குகள் காரணங்களாகின்றன.

இவ்வாருன பௌதிகச் சூழலிலேயே மனிதன் தன் வாழ்வை நடாத்தி வருகிருன். மனிதனும் இச்சூழலின் ஒரு அங்கமேயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான். "மனிதன் புவியில் வாழ்பவன் மட்டுமல்லன். அவன் புவியின் புற அமைப்பை மாற்றி அமைக்கின்ற சிற்பியுமாவான்" என ரஸல் சிமித் கூறியுள்ளமை இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

இவ்வாருன புவியியற் சூழலிற்கு இணங்கவே, உலக நாடுகளின் அபிவிருத்தி நிலைமைகள் அமைந்திருக்கின்றன. இவற்றிலிருந்து அபிவிருத்திப் புவியியலில் இயற்கைச் சூழலின் பங்கே அதிகம் என்ற முடிவிற்கு வந்துவிடக்கூடாது. ஏனெனில், அபிவிருத்திப் புவியியலில் கலாச்சாரச் சூழலின் பங்களிப்பும் அதிகமாகும். விஞ்ஞான அறிவு, தொழில்நுட்பவிருத்தி நாகரீக நிலை என்பனவும், மொழி, மதம், இனம் எனும் உணர்வுகளும் கலாச்சார நிலையை உருவாக்குகின்றன. உலக மக்கள் அனைவரும் ஓரே மாதிரியான கலாச்சாரத்தைக் கொண்டிருக்கவில்லை. அதனுல் தான் பொளாதாரச் செய்கைகள் நாட்டிற்குநாடு மாறி அமைகின்றன. எனவே, கலாச்சார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தியை நிர்ணயிக்கின்ற ஏதுவாகிறது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: இரண்டு

# அபிவிருத்தி எண்ணக்கரு

உலக மக்களை இன்று எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினைக ளில் மிகவும் முக்கியமானது, பல்வேறு நாட்டு மக்களின் வருமானத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வாகும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் ஆள்வீத வருமானம் 3980 டொலர் ஆகும். அதே வேளை சீனவில் ஆள்வீத வருமானம் 90 டொல ராகும். இவ்வாருன வருமான ஏற்றத் தாழ்விஞல், உலகமக்க ளின் வாழ்க்கைத்தரத்திலும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின் றன. உலகின் ஒருபகுதி மக்கள் மிக்க வசதிகளோடு வாழ, இன்னெரு பகுதி மக்கள் வசதிக்குறைவுகளோடும் பிரச்சினைக ளோடும் வாழ்ந்து வருகின்ருர்கள். எனவேதான், பொருளா தாரத்துறையில் ஏற்கனவே மிகுந்த விருத்தியடைந்த நாடுக ளின் வளர்ச்சிவீதத்தைவிட, விருத்தியடையாத நாடுகளின் வளர்ச்சிவீதம் குறைந்து காணப்படுகிறது.

ஒரு நாட்டின் குறைந்த அபிவிருத்திற்குப் பல காரணங் கள் இருக்கின்றன. வசதிக்குறைவான புவியியல் நிலையம், வசதி யற்ற தரைத்தோற்றம், உவப்பற்ற காலநிலை, குறைவான இயற்கை வளங்கள், சமூகக்காலாச்சார முன்னேற்றம், கட்டுப் பாடு செய்யும் மதநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என்பன ஒரு நாட்டின் குறைவிருத்திக்குக் காரணங்களாக அமைகின்றன. இக்காரணிகள் யாவும் அந்த நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க விடாமல் தடைப்படுத்துகின்றன. மேலும், அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்த நாடுகளின் அபிவிருத்தியும் பாதிப்ப டைந்திருக்கின்றது. இலங்கை, இந்தியா, பர்மா, தாய்லாந்து, பிரேசில் முதலிய நாடுகள் மேலைத்தேய நாடுகளின் குடியேற்ற நாடுகளாக இருந்துள்ளன. இந்த நாட்டிலுள்ள வளங்களை, மேலைத்தேய நாடுகள் தமது கைத்தொழில்களுக்குப் பயன்படுத் தியுள்ளன. அதனுல், இந்நாடுகளின் அபிவிருத்தி பாதிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு நாட்டிற்கு நாடு, பிரதேசத்துற்குப் பிரதேசம் பொருளாதார அபிவிருத்தி வேறுபாடுகள் காணப்படுகின்றன, இந்த வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராயும்போது. பேராசிரியர் மிர்டால் (Myrdal) என்பவரின் கோட்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிக்கத்தக்கது. ''ஒரு பிரதேசம் வறியதாக இருப்பதற்குக் காரணம், அது வறியதாக இருப்பதே'' என்றார், மிர்டால், வறிய ஒரு பிரதேசம் மக்களுக்கு உணவையும், வேலைவாய்ப்புகளையும் அளிக்க முடியாது. அதனால், திறமைசாலிகளும் மூளைசாலிகளும் அத்தகைய பிரதேசத்தை விட்டு வெளியேறிவிடுகிறார்கள். அதனால், அபிவிருத்தி பாதிப்படைகிறது.

எனவே, உலகநாடுகள் அனைத்தினதும் அபிவிருத்தி, மனிதகுல சுபீட்சவாழ்விற்கு அத்தியாவசியமானதென இன்று உணரப்பட்டிருக்கின்றது. வாழ்க்கைத்தரத்தில் உயர்ந்த ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனுபவிக்கின்ற வசதிகள் யாவும், உலகின் ஒவ்வொரு தனிமனிதனும் அனுபவிக்க வைக்க வேண்டிய அவசியமானது. அதனால் தான் இன்றைய பொருளாதாரத்தில் பிரதேச அபிவிருத்தி (Regional Development) என்ற தனித்தேர்ச்சி பெற்ற பகுதி ஒன்று தோன்றியுள்ளது. புவியியல், பொருளியல், அரசியல், வரலாறு, அறிவியல், தொழில் நுட்பவியல், சமூகவியல் சார்ந்த பல்துறை அறிஞர்களும் ஒருங்கிணைந்து, ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. ஒரு பிரதேசத்தில் கிடைக்கும் நன்மைகளை அழித்து விடாமல், அவற்றைப் பயன்படுத்தும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை இவர்கள் வகுக்கின்றார்கள். எனவேதான் பல்துறை சார்ந்த அறிஞர்களின் உதவி, அபிவிருத்தித் திட்டமிடலிற்கு வேண்டப்படுகிறது.

ஒரு பிரதேசத்தின் இயற்கை வளங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் அப்பிரதேசத்தின் பௌதிகச் சூழலைப் புரிந்து கொள்வதற்கும், அபிவிருத்திக்குரிய இடத்தைத் தெரிவுசெய்வதற்கும் புவியியலறிஞர்கள் உதவுகின்றனர். நிதியையும் மூலதனத்தையும் அறிந்து கொள்வதற்குப் பொருளாதார அறிஞர்கள் உதவுகின்றனர். அரசியல் வாதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோளைத் தீர்மானிக்கிறார்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மாதிரி வடிவங்களை உருவாக்கவும், செயல்படுத்தவும் பொறியியல், தொழில் நுட்ப அறிஞர்கள் இருக்கிறார்கள். எனவே, பல் துறை சார்ந்த வல்லுநர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு அபிவிருத்தி எண்ணக்கரு உருவாகிறது.

அபிவிருத்தித் திட்டமிடலில் இடத்திற்கு அதிக முக்கியத்துவம் தராததற்குக் காரணம் கொள்கைகளுக்கு அடிப்படையாக விளங்கும் கோட்பாடுகள் இல்லாமையே ஆகும். சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியல், பொருளியல் என்பன இடத்தைப்பற்றி ஆராய்வதில்லை. அவை சமுதாயக் குழுக்களையும் அவற்றின் பொருள் நிலையையும் ஆராய்கின்றன, நிலத்தோற்றத்தைப்பற்றி ஆராய்கின்ற புவியியல்கூட இடத்தைப் பற்றிய பகுப்பாய்வு முறைகளை உருவாக்கவில்லை. அண்மையில்தான், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் இடப்பகுப்பாய்வின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்,

"பௌதிக நிலைமைகள் ஓரினமானதாக இருக்கும் பூமியின் மேற்பரப்பின் எந்தப்பகுதியும் புவியியல் பிரதேசமாகும்" — என அறிஞர் ஜோயர்க் (Joerg) கூறியுள்ளார். "வரையறுக்கப்பட்ட இயற்கைத்தோற்ற எல்லைகளால் அடக்கப்பட்டது. புவி — பௌதிகப் பிரதேசமாகும்" என அறிஞர் எஸ். ரி. ஸ்ரான்பெரி கூறியுள்ளார். (S. T. Stanberry) இவை புவியியல் பிரதேசங்களாகும். ஆனால், சமூக பொருளாதார அபிவிருத்திக்குரிய பிரதேசம் எவ்வாறு அமையவேண்டும், என ஜோன். ஓர்சாட் (John Orchard) என்பார் விளக்கியுள்ளார், "அபிவிருத்திக்குரிய பிரதேசம் ஒன்றுபடுத்தும் உள்ளீடாக (Core) இருக்க வேண்டும். அந்தப் பிரதேசத்திற்குள் தீவிர முரண்பாடுகள் காணப்படக்கூடாது. அபிவிருத்தித் திட்டமிடுபவர்களின் திறமையையும் பயிற்சியையும் சோதிக்கும் வகையில் பல திறப்பட்டதாக இருக்கக்கூடாது" என வரையறுத்துள்ளார்.

அபிவிருத்தி எண்ணக்கரு பின்வரும் இயல்புகளைத் தன்னிடத்தே கொண்டிருக்க வேண்டும்.

1. ஒரு பிரதேசத்தில் கிடைக்கின்ற இயற்கை வளங்கள் யாவற்றையும், அது குறைவாக இருந்தாலும், பயன் படுத்த வேண்டும்.

2. அப்பிரதேசம் பெற்றிருக்காத வளங்களை ஏனைய பிரதேசங்களில் தேடிப்பெற வேண்டும். சிறந்தவை எங்கிருந்தாலும் அவற்றைத் தன்னிடத்தில் எடுத்துப் பயன் கொள்ள வேண்டும்.

3. இயற்கை வளங்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தும்போது, அவை முற்றாக அழிவுற்றுப் போகாமல் வருங்கால சந்ததியினருக்குப் பேணிக் கொடுக்க வேண்டும். எதிர்காலத்திற்கான வளங்கள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியில் இட வேறுபாடுகள்

புவியியலில் அமைவிட வேறுபாடுகள் முக்கியமானவை. மக்களது பொருளாதார, சமூக, அரசியல் நடவடிக்கைகளைப் பெரிதும் புவியியல் இட வேறுபாடுகளே நிர்ணயிக்கின்றன. பொருளாதார அபிவிருத்தியில் இட வேறுபாடுகள், இடங்களுக்கு இடையிலான வருமான வேறுபாடுகள் முக்கியமான ஆய்வுக்குரிய அம்சங்களாகும், மனிதரது அபிவிருத்தி நடவடிக்கைகளையும், இயல்புகளையும் அமைவிடம் எவ்வகையில் நிர்ணயிக்கிறது. என்பதனை முதலில் நோக்குவோம்.

''அமைவிடத்தைப் பொறுத்தே மக்களின் பண்புகள் அமையும். ஒரேவகையான அமைவிடம் ஒரேமாதிரியான அரசியலை உண்டாக்குகிறது'' என அறிஞர் றற்சல் என்பார் கூறியுள்ளார். ''மலைப்பாங்கான இடத்தில் போக்கு வரத்து வசதிகள் குறைவு. இத்தகைய அமைப்பு தனித்துவத்தை ஏற்படுத்த பிரிவினையை வளர்க்கும். மலைப்பிரதேசப் பண்பாடு தேங்கிய நிலையில் இருக்கும். அம்மக்களிடம் போர் செய்யும் பண்பும், சுதந்திர உணர்வும் அதிகமாகக் காணப்படும். இயற்கைச் சூழலே இவற்றிற்குக் காரணம்'' என அவர் கூறியுள்ளார்.

மனிதனும் புவியின் ஒரு அங்கமாவான். மனிதன் ஒரு புவியியற் பிரதிநிதியாவான். அதனால் தான் அவனது சகல நடவடிக்கைகளும் சூழலிற்கு இயைந்ததாக அமைந்திருக்கின்றது. அமைவிடச் சூழல் உண்மையில் மக்களின் நடவடிக்கைகளில் அதிக ஆதிக்கம் செலுத்துகின்றது. மலைப்பிரதேசங்களில் வாழ்வோரையும் சமநிலங்களில் வாழ்வோரையும் ஒப்புநோக்கும் போது இந்த உண்மைகளை நன்கு அறியமுடியும் ''சமநிலங்களில் உள்ளோரைக் காட்டிலும் மலைகளில் வாழ்வோருக்குப் பொருளாதார வாய்ப்புகள் குறைவு.'' மலைப்பிரதேசங்கள் மக்கள் நடமாட்டத்தையும் பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துகின்றன. மலைப்பிரதேசங்களில் கனிப்பொருள்கள் அதிகளவில் காணப்படுவதில்லை. காணப்பட்டாலும் சிதறியும் குறைந்தளவிலும் காணப்படுகின்றன பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்ற சமநிலங்களும் மலைப்பிரதேசங்களில் இல்லை. மலைப்பிரதேசங்களில் உயரத்திற்கு இணங்க வேற்றுமை காணப்படும். மலைகளின் கீழ்ச்சாய்வுகளில் படிமுறை மூலம் பயிர்ச்செய்கை நடைபெறலாம். சாய்வாதலால் மண்ணரிப்பும் மலைப்பிரதேசங்களில் அதிகம். இவை காரணமாகத் தான் மலைப்பிரதேசங்களில் குடித்தொகை குறைவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப்பிரதேசங்களில் கனிப்பொருள்கள் கிடைக்கும் இடங்கள், உல்லாசத்திற்குகந்த காலநிலை நிலவும் பகுதிகள் என்பன அதிக குடியைக் கொண்டிருக்கின்றன. எனினும் மலைப் பிரதேச நகர்கள் சிறியன. போக்குவரத்துத்தடைகளும் இருக்கின்றன. அதனால் பல தொழில்கள் மலைப்பிரதேசங்களில் தோன்றி வளரவும் முடியாமல் இருக்கிறது. றொக்கீஸ், அந்தீஸ், இமயமலைப்பிரதேசங்கள் சமநிலங்களைப்போன்று பொருளாதார வாய்ப்புக்களைக் கொண்டிருப்பனவல்ல. கலிபோர்னியா போன்று, றொக்கிமலைப்பிரதேசத்தின் உயர் பகுதிகளில் பொருள் வளமில்லை. ஆசெந்தீனாவின் பொருளாதார வாய்ப்புக்கள் அந்தீஸ் மலைப்பிரதேசங்களில் இருக்கவில்லை. இந்து கங்கைச் சமவெளியின் பயிர்ச்செய்கை வாய்ப்புக்கள், இமயமலைபபிர தேசத்தில் இருக்கின்றதா?

பொருளாதார வாய்ப்புகள் போக்குவரத்தையும் பொறுத்தன. மலைப்பிரதேசங்களில் மிக இடரானதாக இருப்பது போக்குவரத்தாகும். கணவாய்கள் வழியாக மலைப்பிரதேசங்களில் பாதைகள் அமைக்கப்படுகின்றன. குறுக்கிடும் நதிகளுக்குக் குறுக்கே பாலங்கள் கட்டப்படல் வேண்டும். பொதுவாக இவற்றிற்குச் செலவதிகம். விமானப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புகள் குறைவு. விமானத்தளங்கள் அமைப்பதற்குரிய சமநிலம் மலைகளில் குறைவு. காலநிலை, விமானப்போக்குவரத்திற்கு மலைப்பிரதேசங்கள் சாதகமாக இருப்பதில்லை. போக்குவரத்து இணைப்புகள் இல்லாமலிருப்பதால் மலைவாழ் மக்கள் தனித்தனிக் குடியிருப்புகளில் தனித்தனிச் சமூகமாக வாழ்கின்றனர். சமூக பொருளாதார நிலை சமநிலை மக்களினும் பிற்போக்கானதாக இருக்கும். எனவே மலைப்பிரதேசங்களில் மக்கள் இயற்கைச் சூழலிற்கு இணங்கியதாக வாழ்ந்து வருகின்றனர்.

"இயற்கை பெருமளவில் அமைப்பைத் தீர்மானிக்கிறது. நாகரீகம் வளர உதவும் கருவி மனிதன்," என்பார்கள். மலைப் பிரதேசம், மேட்டுநிலம், சமவெளி என்ற தரைத்தோற்ற அமைப்பை இயற்கைதான் நிர்ணயிக்கிறது. ஆனல் நாகரீகம் வளர உதவியவன் மனிதன். சமநிலத்தைப் பொறுத்தளவில் இக்கூற்று உண்மையாகவுள்ளது. நாகரிகம் சமவெளியில் தான் பிறந்தது. சமவெளிகளில் தங்கு தடையின்றி மக்கள் இடம் பெயரமுடியும். அதனால் தான் பின்னற்போக்கில் போக்குவரத்துப் பாதைகள் சமவெளிகளில் அமைந்திருக்கின்றன. அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துப் பரிமாற்றம், சமூகத்தொடர்பிணைப்பு என்பன சம வெளிகளில் சாத்தியமாயிற்று. பயிர்ச்செய்கை, கைத்தொழில், வர்த்தகம், போக்குவரத்து, நகரங்கள் என்பன இச்சமவெளி ளில் வேகமாகவும் இலகுவாகவும் விருத்தியுற்றன. மக்களதும் அத்தியாவசியத் தேவைகளைச் சமவெளிகள் இலகுவில் மக்க ளுக்கு வழங்கின. எனவே தான் உலக மக்களில் 60% மேல் சமவெளிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

முக்கியமாக நிலையான பயிர்ச்செய்கைக்குச் சமவெளிகள் உகந்தன. சமவெளிகளில் மலைப்பிரதேசங்கள் போல மண்ணரிப்பு அதிகம் நிகழமுடியாது. அதனால் மண்ணின் வளம் என்றும் பேணப்பட்டிருக்கிறது. அதனால் தான் ''ருசியாவின் நாகரீகம் அதன் சமவெளியான இயற்கை அமைப்பின் பிரதி பிம்பம்'' என பேராசிரியர் கல்வான் என்பார் குறிப்பிடுவார். இலங்கையிலும் இந்த நிலைமைகளை நாம் நன்கு அவதானிக்க முடியும் இலங்கையின் மனிதவரலாறு சமவெளிகளில்தான் தோன்றியது. ஆரம்பக்குடியேற்றங்கள் இலங்கையின் கரையோரச் சமவெளிகளில் உருவாகின. தம்பபன்னி (புத்தளம்), மாதோட்டம் (மன்னார்), கோகர்ண (திருகோணமலை), கல்யாணி (களனி), மாகமம் (மாணிக்க கங்கைப் பகுதி), நாகதீபம் (யாழ்ப்பாணம்), அநுராதகம (அநுராதபுரம்) என்பன இவ்வாறமைந்த பகுதிகளாகும். இலங்கையின் நாகரீகம் இசசமவெளிபபகுதிகளில் தான் உருவாகியது. மனிதன் செய்கின்ற தொழில் எதுவாக இருந்தாலும் நாகரிகத்தால் நன்மைபெறும் வாய்ப்பு சமவெளிகளில் வாழும் மக்களுக்கே உள்ளது.

இலங்கையின் மலைநாட்டின் விருத்தி வெகு காலதாமதமாகவே ஏற்பட்டிருக்கின்றது. மலையக மக்கள் ஒரு தனி இனமாக வாழ்நதிருக்கிறார்கள். கண்டிச் சிங்களவர் என்பது அவ்வாறமைந்த தனிப்பண்பின் விளைவே. பிரித்தானியர் ஆதிக்கம் பெறும்வரை, இலங்கையின் மலைநாட்டில் கரையோரங்களுடன் இணைந்த சிறந்த பாதைகள் இருக்கவில்லை. மலைநாட்டு மக்களின் இயற்கையான சுபாவம் சூழலின் கொடையாகும். சுறுசுறுப்பு, அஞ்சாமை, சுதந்திர உணர்வு என்பன மலையக மக்களுக்களுக்குரியவை. அதனால் தான் அவர்கள் கடைசிவரை மலைநாட்டைக் கைப்பற்ற அந்நியருக்கு இடமளிக்கவில்லை. இலங்கையில் அந்நியரால் இறுதியாகக் கைப்பற்ற முடிந்த பிரதேசம் மலைநாடாகவே அமைந்தது. இது அமைவிட ரீதியின் விளைவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியை அடையாளம் காட்டும் குறிக்காட்டிகள்.

ஒரு நாடு அபிவிருத்தி அடைந்திருக்கிறதா, இல்லையா என்பதை, பல்வேறு அம்சங்களை ஆதாரமாகக் கொண்டே அடையாளம் காணமுடியும். அபிவிருத்தியை அடையாளம் காட்டும் குறிகாட்டிகள் (Indicators) வருமாறு:-

(அ) வாழ்க்கைத்தரம் (ஆ) வேலைவாய்ப்புகள்
(இ) உணவில் தன்னிறைவு (ஈ) கைத்தொழில் நிலை
(உ) தொழில் நுட்ப வளர்ச்சி (ஊ) சமூக நலச் சேவைகள்
(எ) வர்த்தகம்

மேலுள்ள பல்வேறு அம்சங்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் ஒரு நாட்டின் அபிவிருத்தியளவைத் தெரிந்து கொள்ளமுடியும்.

(அ) ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வாகக் காணப்படில் அந்நாடு பொருளாதாரத் துறையில் விருத்தியுற்ற நாடாகக் கருதப்படும். ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம், அந்நாட்டு மக்களின் ஆள்வீத வருமானத்தைப் (தலா வருமானம்) பொறுத்து அமைகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் ஆள்வீத வருமானம் 3980 டொலர்; ஐக்கிய ராச்சியத்தின் ஆள் வீத வரிமானம் 1990 டொலர். அதே வேளை சீனவின் ஆள்வீத வருமானம் 90 டொலராகவும், இந்தியாவின் ஆள்வீத வருமானம் 100 டொலராகவும், இலங்கையின் ஆள்வீத வருமானம் 180 டொலராகவும் இருக்கின்றது. பொதுவாக 65 டொலர் தொட்டு 275 டொலர் வரையில் ஆள்வீத வருமானமாகப் பெறும் நாடுகளை அபிவிருத்தியுறாத நாடுகள் என வரையறுப்பர்.

(ஆ) ஒரு நாட்டின் அபிவிருத்தியை அந்நாட்டின் உழைக்கும் வர்க்கத்தின் வேலைவாய்ப்புகளைக் கொண்டு நிர்ணயிக்கலாம். பொதுவாக 18—59 வயதுக்குட்பட்டவர்களே ஒரு நாட்டின் உழைப்போராவர். ஒரு நாட்டிலுள்ள இந்த வயதுக்குட்பட்ட யாவருக்கும் தொழில் வாய்ப்புகள் இருக்கில் அந்நாடு பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியுற்ற நாடாகும். உழைக்கும் வர்க்கம் முழுவதும் தொழில் வாய்ப்பினைப்பெற்றிருக்கும்போது அந்நாட்டின் பொருளாதார உற்பத்தி அதிகரிக்கும். இலங்கை, இந்தியா முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிய நாட்டு மக்கள் உள்நாட்டில் வேலைவாய்ப்பின்மையால் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று ஊழியம் புரிகின்றனர். அதே வேளை மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலாளர் பற்றுக்குறையால் உற்பத்தி பாதிப்படைந்துள்ளது. வெளிநாட்டுத் தொழிலாளர் அங்கு வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வகையில் இலங்கை, இந்தியா என்பனவும், மத்திய கிழக்கு நாடுகளும் அபிவிருத்தி குன்றிய நாடுகளே.

(இ) உணவில் தன்னிறைவு அடைந்த ஒரு நாடு அபிவிருத்தியுற்ற நாடாக விளங்க வாய்ப்புண்டு. உணவில் தன் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத ஒரு நாடு, அபிவிருத்தியுறாத நாடாகும். பயிர்ச்செய்கைத் துறையில் மேலதிக உணவு உற்பத்தி நிகழாது விடினும், தன்னிறைவு காணப்படவேண்டும். இன்று அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவும் உணவுற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருப்பதோடு, உணவுப்பொருட்களை ஏற்றுமதி செய்தும் வருகின்றன. அபிவிருத்தி குன்றிய நாடுகளின் பிரதான தொழிலாகப் பயிர்ச்செய்கை இருந்தும் அங்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதால் உணவுற்பத்தி அதிகரிக்கவில்லை.

(ஈ) கைத்தொழில்துறையில் முன்னேறியுள்ள நாடுகள் நன்கு விருத்தியுற்ற நாடுகளாக விளங்கி வருகின்றன. கைத்தொழிலில் முன்னேறியுள்ள ஐக்கிய அமெரிக்கா, யப்பான் என்பன அபிவிருத்தியடைந்துள்ளன. கைத்தொழிலாக்கங்களில் முன்னேறாத இந்தியா, இலங்கை என்பன பொருளாதார அபிவிருத்தி குன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கைத்தர உயர்வு, வேலை வாய்ப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றிற்கும் கைத்தொழில வளர்ச்சியே துணைநிற்க முடியும்.

(உ) தொழில் நுட்பத்தில் தாழ்ந்த நாடுகள் உலகில் அபிவிருத்தி குன்றிய நாடுகளாக விளங்கி வருகின்றன, தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியுற்றிருக்கிறது. பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இந்த நாடுகளில் யந்திரமயமானவை. பால் பொருட்களையும் இறைச்சி, பழவகை என்பவற்றையும் தகரத்திலடைத்தல் விருத்தியடைந்திருக்கிறது. ஆபிரிக்கக் கலாகாரி புஸ்மன்களும், கொங்கோவில் வாழும் பிக்மீஸ்களும் வேட்டை விலங்குகளைத் தேடி ஒற்றையடிப்பாதைகளில் காடுகளில் திரிவதற்கும், ஐரோப்பிய நாட்டுமக்கள் ஒவ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் வேகமான 'கொன்கோட்' விமானத்தில் நாட்டிற்கு நாடு பறப்பதற்கும் தொழில்நுட்ப வளர்ச்சியில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளே காரணமாகும்.

(ஊ) அபிவிருத்தி என்பது ஆள்வீத வருமானத்தின் உயர்வை மட்டும் கருதாது. இன்று மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றினதும் தலாவருமானம் உயர்ந்திருக்கிறது. அவை அபிவிருத்தியடைந்த நாடுகள் என்று கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், அபிவிருத்தி என்பது கல்வி, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, கட்டிடம் முதலிய சமூகசேவைகளிலும் ஏற்படவேண்டும். ஒரு நாட்டின் விருத்தி, அந்த நாட்டு மக்களின் கல்வி நிலையையும் பொறுத்தது. உடல்நிலை, உளநிலை, சமூகநிலை என்பன சுகாதார அபிவிருத்தியாலும் மருத்துவ விருத்தியாலும் ஏற்படும் ஆரோக்கியங்களாகும். ஒரு நாட்டின் விருத்தியை அந்நாட்டின் போக்குவரத்துப்பாதைகள், சாதனங்கள் என்பனவற்றில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

(எ) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அந்நாட்டின் வர்த்தகத்துறையில் ஏற்படும் ஏற்றுமதி அதிகரிப்பையும் இறக்குமதிக் குறைவையும் கொண்டு நிர்ணயிக்கலாம். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நாடு தொடர்ந்து சென்மதிநிலுவை மிகுதிநிலையை அனுபவித்து வருமாயின் அந்நாடு விருத்தியுற்ற நாடாக இருக்கும்.

மேல் விபரித்த குறிகாட்டிகளைக்கொண்டு அபிவிருத்தியடைந்த நாடுகளையும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளையும் அடையாளம் காணமுடியும்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: மூன்று

# அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும்

உலகின் இன்றைய பொருளாதார அமைப்பில் இரு தெளிவான அமைப்பை நாம் காணமுடியும். அவையாவன:

1. உலகின் சில நாடுகள் பொருளாதாரத்திலும், தொழில் நுட்பத்திலும் முன்னேறியுள்ளன. அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வாகவுள்ளது.
2. உலகின் வேறுசில நாடுகள் பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்தனவாக இருக்கின்றன. இந்நாடுகளில் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைவாக இருக்கின்றது. மக்கள் வறியவர்களாகவுள்ளனர்.

இந்த இரு தெளிவான வேறுபாடுகளின் அடிப்படையில் உலகநாடுகளை (அ) அபிவிருத்தியடைந்த நாடுகள் எனவும், (ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எனவும் இரண்டாக வகுத்துக்கொள்ளலாம். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைக் குறை விருத்திநாடுகள் எனவும், வளர்முக நாடுகள் எனவும் கூறுவர்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் பின்வருவனவாகும்:-

1. ஆங்கிலோ அமெரிக்கா - ஐக்கிய அமெரிக்கா, கனடா
2. ஐரோப்பிய நாடுகள் - ஐக்கிய இராச்சியம், ஸ்பெயின், போத்துக்கல், பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி, இத்தாலி, போலாந்து, டென்மார்க், நெதர்லாந்து, யூகோசிலாவியா முதலியன.
3. ஐக்கிய சோவியத் சமஷ்டியமைக் குடியரசு,
4. யப்பான்
5. உருகுவேயும், ஆசெந்தினவும்
6. தென்னுபிரிக்கக்குடியரசு
7. அவுஸ்திரேலியா.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பின்வருவனவாகும்:-

1. லத்தின் அமெரிக்கா - மெக்சிக்கோ, குவாட்டமாலா, நிக்காராகுவா, பனுமா, கொலம்பியா, கயானா, [illegible] பிரேசில், பொலீவியா, சில்லி, பேரு, பராகுவே முதலியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம்-1 அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும்.

2. ஆபிரிக்கநாடுகள் - அல்ஜீரியா, லிபியா, எகிப்து, சூடான் எதியோப்பியா, மாலி, நைஜீரியா, கானு, மத்திய ஆபிரிக்கக்குடியரசு, அங்கோலா, உகண்டா, கென்யா, தன்சானியா, சாம்பியா, சிம்பாவே (றொடீசியா), மெசாம்பிக்யு, மலகாசி முதலியன

3. மத்தியகிழக்கு நாடுகள் - சவுதி அரேபியா, ஓமான், ஈராக், குவைற், எமிற்றேற்ஸ் குடியரசு, ஈரான் முதலியன. இவற்றில் சில விரைந்து அபிவிருத்தியடைந்து வருகின்றன.

4. பருவக்காற்று ஆசியநாடுகள் - இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேசம், இலங்கை, ஆப்கானிஸ்தான், நேபாளம், சீனு, பர்மா, தாய்லாந்து, லாவோஸ், மலேசியா, இந்தோனேசியா, வியட்னும் முதலியன.

அபிவிருத்தியடைந்த நாடுகள் செல்வந்த நாடுகளாகவும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வறிய நாடுகளாகவும் விளங்கிவருகின்றன. இவை இரண்டையும் வேறுபடுத்தி அடையாளம் காண உதவும் குறிகாட்டிகள் எல்லாவிடங்களிலும் சரியாக அமைவது கிடையாது. உதாரணமாக, குறைவான ஆள்வீத வருமானத்தை யுடைய நாடுகள், வறிய நாடுகள் எனக் கொண்டால் ஐக்கிய அமெரிக்காவின் ஆள்வீத வருமானத்திலும் பார்க்க ஐரோப்பிய நாடுகளின் ஆள்வீத வருமானம் மிகவும் குறைவாகும். அதேவேளை இன்று மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றின் ஆள்வீத வருமானம், ஐரோப்பிய நாடுகளின் ஆள்வீத வருமானத்தை ஒத்துள்ளது. இதனைக்கொண்டு ஐரோப்பிய நாடுகள் கள் விருத்தியுறும் நாடுகள் என்றும், மத்திய கிழக்கு நாடுகள் விருத்தியுற்ற நாடுகள் என்றும் முடிவு செய்துவிட முடியாது. ஒரு நாட்டின் விருத்தி என்பது, ஊட்டமான உணவு, போதிய உணவு நல்ல வதிவிடம், தொழில் வாய்ப்பு, தேவையான சமூகநலம் சேவைகள் (கல்வி, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து, பொழுதுபோக்கு, நீர்வசதி முதலியன) என்பன குறைவின்றிக் கிடைக்கில், அதுவேயாகும். இவை சரிவரக் கிடைக்காத நாடுகள், அபிவிருத்தியுறாத நாடுகளாகும்.

அபிவிருத்தியுறாத நாடு என்பது, அபிவிருத்தியடைந்த நாட்டுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, பொருளாதாரத்தில் [illegible]றியதாக இருக்க வேண்டும். உலகில் கூடிய வருமானம் பெறும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் வருமானத்தில் $1/_4$ பங்காவது வருமானமாகப் பெறாத ஒருநாடு அபிவிருத்தியுறாத நாடாகும். உலகில் இன்று ஏறத்தாழ 50 நாடுகள் அபிவிருத்தியுறாத நாடுகளாக உள்ளன.

## அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பிரதான பண்புகள்:

அபிருத்தியடைந்த நாடுகளின் பிரதான அம்சங்கள் வருமாறு:

1. இந்த நாடுகளின் வாழ்க்கைத்தரம் உயர்வாகக் காணப்படும். பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள இந்நாடுகளின் ஆள்வீத வருமானம் மிக அதிகமாகக் காணப்படும். அபிவிருத்தியடைந்த சில நாடுகளின் ஆள்வீத வருமானம் பின்வருமாறு:

1971- ஆள்வீத வருமானம்.
(அமெரிக்க டொலர்களில்)

| | |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | — 3980. |
| ஐக்கிய இராச்சியம் | — 1790. |
| யப்பான் | — 1190. |
| பிரான்ஸ் | — 2130. |
| அவுஸ்திரேலியா | — 2070. |
| சோவியத் சமவுடமைக்குடியரசு. | — 1 10. |

(ஐ.நா. தாபனத்தின் புள்ளிவிபரத்திலிருந்து பெறப்பட்டது.)

ஐக்கிய அமெரிக்காவின் ஆள்வீத வருமானம் 3980 டொலர்களாகும்; கீழைத்தேச நாடான யப்பானின் ஆள்வீத வருமானம் 1190 டொலராகும். இலங்கையின் ஆள்வீத வருமானம் 180 டொலராகும்.

2. இந்நாடுகளின் குடித்தொகையில் பெரும்பங்கினர் கைத்தொழிலாக்கங்களில் ஈடுபட்டுள்ளனர். நவீன கைத்தொழிலாக்கங்கள் இந்நாடுகளில் பெருவிருத்தியுற்றிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்கா. யப்பான், ஐக்கிய இராச்சியம் என்பன இவ்வாறானவை.

3, இந்நாடுகளில் தொழில் நுட்பம் பெருவிருத்தியுற்றிருக்கின்றது. இந்நாடுகளின் பயிர்ச்செய்கை நடிவடிக்கைகள் முற்றிலும் யந்திரமயமானதாக இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் சமவுடமைக்குடியரசு என்பன தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங்களாகும். இறைச்சி பதனிடல், பாற்பொருட்களைத் தகரத்திலடைத்தல் முதலான விலங்கு வேளாண்மையும் இந்நாடுகளில் கூடிய தொழில்நுட்பம் வாய்ந்ததாகும். டென்மார்க், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து என்பன தக்க உதாரணங்களாகும்.

4. இந்த நாடுகளின் பொருளாதாரத்தில் வர்த்தகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. உலகின் சர்வதேச ஏற்றுமதி வர்த்தில் 71 சதவீதத்தை அபிவிருத்தியடைந்த நாடுகள் வகிக்கின்றன. இந்நாடுகளின் ஏற்றுமதிப் பொருட்களில வரும்படியாக்க உற்பத்திப் பொருட்களே முதலிடத்தைப் பெறுகின்றன. மூலப் பொருட்களை இந்நாடுகள் இறக்குமதி செய்து கொள்கின்றனவே தவிர, ஏற்றுமதி செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், யப்பான் என்பன இத்தகையனவாகும். வர்த்தகத்திற்கான தானிய உற்பத்தியையும் (கோதுமை, சோளம்) அபிவிருத்தி யடைந்த நாடுகளே உற்பத்தி செய்து வருகின்றன. ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆசெந்தீனு என்பன கோதுமையை அதிகளவில் ஏற்றுமதி செய்து வருகின்றன.

5. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பயிற்சி பெற்ற தொழிலாளரும், திறமை மிக்க தொழிலாளரும் பெருந்தொகையில் காணப்படுகின்றன.

6. இந்நாடுகளில் உற்பத்தித்திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனவசதி நிறைய உண்டு. இந்நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு மூலதன உதவிகள் வழங்கி வருகின்றன.

7. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் குறைந்திருக்கிறது. வாழ்க்கைத்தரத்தைச் சீராகவும், உயர்வாகவும் வைத்திருப்பதற்காக இந்நாட்டு மக்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள விரும்புவதில்லை. சிறிய குடும்பங்கள், மருத்துவ, சுகாதார வசதிகள் இந்நாடுகளில் நன்கு விருத்தியுற்றிருப்பதால் இறப்பு வீதமும் குறைந்துள்ளது. அதனால் எதிர்பார்க்கும் வயதெல்லை அதிகரித்துள்ளது. குடிப்பெருக்கத்திற்கும் பொருளாதார விருத்திக்கும் இடையில் ஒரு சமநிலை காணப்படுகின்றது.

8. இந்நாடுகளின் பௌதிக வளங்கள் (நிலக்கரி, பெற்றோலியம், இரும்புத்தாது முதலியன), தாவரப்பொருட்கள் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலாக்கங்களுக்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதேபோல மனிதவலுவும் பயன்படுத்தப்படுகின்றன. கைத்தொழிலாக்கங்கள் அதிக வேலைவாய்ப்புகளை அளிப்பதனுல் தொழிலின்றி இருப்போர் அரிது. அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடாத மக்கள் மிகமிகச் சிறுபங்கினரே உள்ளனர்.




படம் 2 ஐரோப்பிய நாடுகள்.

9. இந்நாடுகளில் நகராக்கம் முக்கியவிடத்தைப் பெறுகின்றது. ஆதலால், நகர மக்களின் தொகை அதிகரித்து வருகின்றது. ஐக்கிய இராச்சியத்தில் 78 சதவீதமானோர் நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரதான பண்புகள்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பிரதான அம்சங்கள் வருமாறு:

1. உலகின் குடித்தொகையில் $\frac{2}{3}$ பங்கினர் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இக்குடித்தொகையில் பெரும்பங்கினர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 70 சதவீதமானவர்கள் விவசாயத்திலீடுபட்டுள்ளனர். அத்துடன் பயிர்ச்செய்கையில் மேலதிகமான தொழிலாளர் ஈடுபட்டும் உள்ளனர்.

2. இந்த நாடுகளின் வாழ்க்கைத்தரம் குறைவானது. குறைவான ஆள்வீத வருமானத்தை இந்த நாடுகள் கொண்டிருக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும் சில நாடுகளின் ஆள்வீத வருமானம் வருமாறு;

1971- ஆள்வித வருமானம் (அமெரிக்க டொலரில்)

| | | |
|---|---|---|
| சீனா | — | 90 |
| இந்தியா | — | 100. |
| இலங்கை | — | 180. |
| பாகிஸ்தான் | — | 100. |
| மலேசியா | — | 100. |
| எதியோப்பியா | — | 330. |
| தன்சானியா | — | 70. |
| பிறேசில் | — | 250. |
| உகண்டா | — | 110. |
| பேரு | — | 380. |

(ஐ. நா. தாபனப் புள்ளி விபரம்)

3. இந்நாடுகளின் பொருளாதாரம் செறிவான பிழைப்பூதியப் பயிர்ச்செய்கையில் தங்கியுள்ளது. சிறிய விளை நிலங்களில் செறிவான பயிர்ச்செய்கையிலீடுபட்டுள்ளனர். மிகவும் பிற்போக்கான பெயர்ச்சிப் பயிர்ச்செய்கையிலும் சில நாட்டு மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

4. இந்நாடுகளின் வருமானம் இரண்டொரு ஏற்றுமதிப் பொருட்களில் தங்கியிருக்கின்றது. உதாரணமாக இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் தேயிலை. றப்பர், தெங்குப்பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதியிலும், மலேசியாவின் பொருளாதாரம் றப்பரின் ஏற்றுமதியிலும் தங்கியுள்ளன. சர்வதேச ஏற்றுமதி வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆக 8 சத வீதத்தையே வகிக்கின்றன.

5, உற்பத்தித்திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனம் இந்நாடுகளில் குறைவாகக் காணப்படுகிறது. மூலதனத்திற்கு அந்நிய நாடுகளை எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

6. மூலதனப்பற்றுக்குறையினால் இந்நாடுகளில் கைத்தொழிலாக்கங்கள் விருத்தியுறவில்லை. பயிற்சி பெற்ற தொழிலாளரும், திறமைமிக்க தொழிலாளரும் பெருந்தொகையில் இந்நாடுகளில் காணப்படவில்லை.

7. வேலை வாய்ப்புகள் இந்நாடுகளில் போதியளவு இல்லை. வேலையற்றோர் தொகை அதிகம். கைத்தொழிலாக்கம் வேகமாக நடைபெறுமையால் பெரும்பாலானோர் வேலையின்றி இருக்கின்றனர்.

8. இந்நாடுகளில் பிறப்புவிகிதமும் இறப்புவிகிதமும் அதிகரித்துக் காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் 1000 பிறப்புக்கு 27 பேர் இறக்கின்றனர். ஆனால், இந்தியாவில் 1000 பிறப்புக்கு 119 பேர் இறக்கின்றனர். சனத்தொகை அதிகரிப்பு அந்த நாடு தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்குக் காணப்படுகிறது. ஒருநாடு போஷிக்கக் கூடியதிலும் அதிகமாக சனத்தொகை இருக்கின்றது.

9. ஊட்டமான உணவு இந்நாடுகளில் மக்கள் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் ஆரோக்கியம் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். உணவுப் பற்றுக்குறையும் இந்த நாடுகளில் காணப்படுகின்றது. அதனால் அவர்கள் பசிப்பிணிக்கு ஆளாகின்றனர்.

10. இந்நாடுகளில் அதிகமான அடர்த்தி, வதிவிடக்குறைவு பொதுச்சுகாதாரக் குறைவு என்பன காணப்படுகின்றன. நகரங்களிலும் பார்க்கக் கிராம மக்களே அதிகமானோர் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இந்நாடுகளில் பயன்படுத்தப்படாத பௌதிக வளங்கள் அதிக அளவிற் காணப்படுகின்றன. அவ்வாறே அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடாத மக்களும் பெருந்தொகையினராகக் காணப்படுகின்றனர்.




வட அமெரிக்க நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் காணப்படும் இடைவெளி.

அபிவிருத்தியடைந்த நாடுகள் இடைவெப்ப வலயத்தில் அமைந்திருக்கின்றன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெப்பவலயத்தில் (அயனவலயம்) அமைந்திருக்கின்றன. மேலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் பெரும்பாலானவை, அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆதிக்கத்துக்குக் கீழ்ப்பட்ட குடியேற்ற நாடுகளாக இருந்துள்ளன, என்பதை மறந்துவிடக் கூடாது. குடியேற்ற நாடுகளாக இருந்த அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் செல்வத்தை, அபிவிருத்தியடைந்த நாடுகள் தம்நாட்டின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தின. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்து பெறப்பட்ட மூலப்பொருட்கள், அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழிற்சாலைகளில் உற்பத்திப்பொருட்களாக மாற்றப்பட்டு, மீண்டும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கே சந்தைப்படுத்த அனுப்பப்பட்டன. எனவே, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களை வழங்கும் நாடுகளாகவும், உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதற்கு வாய்ப்பான சந்தை நாடுகளாகவும் விளங்குகின்றன. நமது நாட்டு றப்பர் அபிவிருத்தியடைந்த நாடுகளால் வாங்கப்பட்டு, பின்னர் நமக்கே ரயர்களாக விற்கப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்திற்கும், துரித முன்னேற்றத்திற்கும்; அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மந்த அபிவிருத்திக்கும், குறைந்த வாழ்க்கைத்தரத்திற்கும் காரணம் குடியேற்ற நாட்டு நிலைமையேயாகும். குடியேற்ற நாடாக விளங்காதபடியினால்தான் ஆசிய நாடான யப்பான் இன்று அபிவிருத்தியடைந்த நாடாக விளங்க முடிகின்றது. நமது நாடான இலங்கை, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகியோரின் ஆதிக்கத்துக்குட்பட்டு விளங்கியது. இந்தக் குடியேற்ற நாட்டாதிக்கத்தினால், நமது நாட்டின் சுயதேவைப் பொருளாதாரம் சீரழிந்தது என்பது கவனிக்கத்தக்கது. இவ்வகையில் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்குறைவிற்கு, அபிவிருத்தியடைந்த நாடுகள் ஒருவகையில் காரணமாக இருந்துள்ளன.

முதலாளித்துவ அடிப்படையில் அபிவிருத்தியடைந்த நாடுகளை முதல் உலக நாடுகள் என்பர். சோஷலிச அடிப்படையில் அபிவிருத்தியடைந்த நாடுகளை இரண்டாம் உலக நாடுகள் என்பர். அபிவிருத்தியுறும் நாடுகள் யாவற்றையும் ஒரே தொகுதியாக்கு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி மூன்றும் உலக நாடுகள் என்றனர். ஆனல், இன்று பெற்ரேலிய விலையுயர்வால் அரபுநாடுகளின் பொருளாதாரத்தில் மிகப்பெரும் மாறுதல் ஏற்பட்டுள்ளது. அதனுல், அரபுநாடுகளை இன்று நான்காம் உலகநாடுகள் என்கின்றனர்.




அவுஸ்திரேலியா

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையில் நிலவுகின்ற அடிப்படை வேறுபாடுகளை நோக்குவோம்.

## 1. வருமான ஏற்றத்தாழ்வு.

உலக சனத்தொகையில் $\frac{2}{3}$ பங்கிற்கு அதிகமான தொகையினர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே வாழ்கின்றனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் $1/3$ பக்கு மக்களே வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல், உலகமக்களில் $\frac{2}{3}$ பங்கினைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், உலக வருமானத்தில் $^1/_3$ பங்கினையே பெறுகின்றன. உலக மக்களில் $^1/_3$ பங்கினைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள், உலக வருமானத்தில் $^2/_3$ பங்கினைப் பெற்று அனுபவிக்கின்றன.




தென் அமெரிக்க நாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இருவகை நாடுகளுக்கும் இடையிலான ஆள்வீத வருமான ஏற்றத்தாழ்வு 50 டொலரிலிருந்து 4000 டொலர் வரையில் உள்ளது. உலக மக்களது ஆள்வீத வருமானம் ஏறத்தாழ 400 டொலராகும். அபிவிருத்தியுறுத நாடுகளின் ஆள்வீத வருமானம் மிகவும் குறைவாகும்.

ஆள்வீத வருமானம் - 1971 (அமெரிக்க டொலரில்).

| அபிவிருத்தியடைந்த சில நாடுகள் | | அபிவிருத்தியடைந்துவரும் சில நாடுகள் | |
|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க | 3980 | | |
| ஐக்கிய இராச்சியம் | 1790 | | |
| கனடா | 2130 | | |
| யப்பான் | 1190 | | |
| பிரான்ஸ் | 2130 | | |
| அவுஸ்திரேலியா | 2070 | | |
| சோவியத் ருசியா | 1110 | | |
| நியூசிலாந்து | 2018 | | |
| சுவிற்சலாந்து | 1429 | | |
| சுவீடன் | 1665 | | |
| | | சீனு | 90 |
| | | இலங்கை | 180 |
| | | இந்தியா | 100 |
| | | பாகிஸ்தான் | 100 |
| | | மலேசியா | 330 |
| | | எதியோப்பியா | 70 |
| | | தன்சானியா | 80 |
| | | பிறேசில் | 250 |
| | | உகண்டா | 110 |
| | | பேரு | 380 |
| | | பிலிப்பைன்ஸ் | 201 |
| | | பர்மா | 90 |
| | | மெக்சிக்கோ | 190 |
| | | தாய்லாந்து | 100 |
| | | தென்கொரியா | 110 |
| | | நேபாளம் | 40 |

(ஐ. நா. தாபனத்தின் புள்ளிவிபரங்களிலிருந்து திரட்டப்பட்டவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் அபிவிருத்தியை அளவீடு செய்வதற்கு ஆள்வீத வருமானம் ஒரு குறிகாட்டியாக அமையலாம். ஆனால், ஆள்வீத வருமானம் மாத்திரம் அபிவிருத்தியை நிர்ணயித்துவிடாது. வெனசுவெலா, சவுதி அரேபியா, குவைத், ஈரான், ஈராக் முதலிய ஒபெக் (OPEC) கூட்டு நாடுகள், இன்று பெற்றோலியத்தின் விலையுயர்வால், ஐரோப்பிய நாடுகளை ஒத்த ஆள்வீத வருமானத்தைப் பெறுகின்றன. எனினும், ஏனைய துறைகளில் அவை விருத்தி பெறவில்லை. அதனால அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகவே விளங்கி வருகின்றன.

## 2 வாழ்க்கைத்தர வேறுபாடு

அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்த நிலையிலுள்ளது. (அ) உணவுப்பற்றுக்குறை, (ஆ) குறைந்தகாலச் சீவியம், (இ) கல்வியறிவுக்குறைவு. (ஈ) போக்குவரத்துக்குறைபாடு, சுகாதாரக்குறைவு என்பன இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரக்குறைவுக்குக் காரணங்களாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் வாழ்க்கைத்தரம் உயர்வாகவுள்ளது.

(அ) உணவு கொள்ளளவைப் பொறுத்தமட்டில், ஐக்கிய அமெரிக்காவில் வாழும் ஒருவன், ஒரு நாளைக்கு 3090 கலோரி உணவையும், ஐக்கிய இராச்சியத்தில் வாழ்பவன் 3230 கலோரி உணவையும், டென்மார்க்கில் வாழ்பவன் 3300 கலோரி உணவையும் உண்கின்றனர். ஆனால், அதேவேளை அபிவிருத்தியடைந்துவரும் நாடான இந்தியாவில் வாழ்கின்ற ஒருவன் ஒரு நாளைக்கு 2004 கலோரி உணவையும், இலங்கையில் வாழ்பவன் 2052 கலோரி உணவையும, பர்மாவில் வாழ்பவன் 1612 கலோரி உணவையும் உண்கின்றனர். நாளாந்த உணவு அளவு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மிகக்குறைவாகும். அதேபோல ஐக்கிய அமெரிக்காவில் வாழ்பவன் ஒருவன் ஒரு நாளைக்கு 92 கிறும் புரத உணவை நுகர்கிறான். இந்த அளவு ஐக்கிய இராச்சியத்தில் 86 கிறும் ஆகவும் டென்மார்க்கில் 89 கிறுமாகவும் இருக்கின்றது. ஆனால், இந்தியா, இலங்கை, பர்மா முதலான அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு மக்கள் நாளாந்தம் ஏறத்தாழ 47 கிறும் புரத உணவை மட்டுமே உண்கின்றனர்.

(ஆ) இத்திரு வகையான நாடுகளில் வாழ்கின்ற மக்களின் உயிர் வாழும் வயதெல்லை வேறுபடுகின்றது. சிறப்பான மருத்துவ வசதி, சுகாதாரவசதி, ஊட்டமான உணவு என்பன காரணமாக அபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியடைந்த நாட்டு மக்களின் சராசரி உயிர்வாழும் வயது 68 ஆண்டுகளாகும். ஆனல், அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு மக்களின் சராசரி உயிர்வாழும் வயது 38 ஆண்டுகளாகும்.

இ) கல்வியறிவு வேறுபாடு. இந்த இருவகையான நாடுகளுக்கும் இடையே பெரும் இடைவெளியாகக் காணப்படுகிறது. ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், டென்மார்க், யப்பான் முதலிய அபிவிருத்தியடைந்த நாடுகளில் 90% மக்கள் கல்வியறிவுடையவர்களாவர். உருகுவே, இஸ்ரேல், கியுபா, பிலிப்பைன் முதலிய நாட்டு மக்களில் 75% மக்கள் படித்தவர்கள். பிறேசில், மெக்சிக்கோ, இந்தோனேசியா, இலங்கை, சிரியா, தாய்லாந்து முதலிய அபிவிருத்தியடைந்துவரும் நாட்டு மக்களில் 50% மக்கள் கல்வியறிவுடையவர்கள். ஈராக், சவுதி அரேபியா, ஈரான், இந்தியா, பர்மா, பாகிஸ்தான் முதலிய நாட்டு மக்களில் 20% மக்களே படிப்பறிவுடையவர்களாவர்.

(ஈ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் போக்குவரத்து [illegible]களும், கொண்டுசெல்லற் சாதனங்களும் நன்கு அமைந்துள்ளன. 1000 சதுரமைலிற்கு 1000 மைல் வீதிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அமைந்துள்ளதாகக் கணித்துள்ளனர். அபிவிருத்தியுறு நாட்டில் 1000 சதுர மைலிற்கு 75 மைல் வீதியே அமைந்திருக்கிறது. மேலும் உலகின் வலு 90% ஐ அபிவிருத்தியடைந்த நாடுகளும் 10%ஐ அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் நுகர்கின்றன. உலகின் உற்பத்திப் பொருட்களில் 7% ஐயே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உற்பத்தி செய்கின்றன. இவற்றிலிருந்து இந்த நாடுகளின் குறைவிருத்தியை அறிந்துகொள்ள முடியும்.

## 3. பொருளாதார வேறுபாடுகள்

அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படுகின்ற பெருவிருத்தியை, அபிவிருத்தியடையாத நாடுகளில் காணமுடியாதுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் பயிர்ச்செய்கை யந்திரமயமானது; வர்த்தக நோக்கமுடையது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பயிர்ச்செய்கை சுயதேவைப் பூர்த்தியை மனதில் கொண்டது; புராதன செய்கைமுறைகளைக் கொண்டது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் கைத்தொழிலாக்கங்கள் பெருவிருத்தியுற்றிருக்கின்றன; தொழில்நுட்ப வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடையன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பண்டைமுறை தழுவிய கைத்தொழில்களே இயங்கிவருகின்றன. நவீன கைத்தொழிற்சாலைகள் அண்மைக்காலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. பயிற்சிமிக்க தொழிலாளரும், திறமைமிக்க தொழிலாளரும் அபிவிருத்தியடையும் நாடுகளில் பெருந்தொகையில் காணப்படவில்லை. அத்துடன், அபிவிருத்தியுறுத நாடுகள் மூலப்பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளாகவே விளங்கிவருகின்றன.

## 4. வர்த்தக வேறுபாடுகள்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகம் ஆண்டிற்காண்டு அதிகரித்துச் செல்கிறது. ஆனால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகம் ஆண்டிற்காண்டு குறைந்து வருகிறது. 'செல்வ-வறிய' அல்லது 'உள்ள-இல்லாத' நாடுகளுக்கு இடையிலான வேறுபாடுகளை வர்த்தக நிலையிலிருந்து அறிந்து கொள்ளலாம். சர்வதேச வர்த்தகத்தில் 70% ஐ அபிவிருத்தியடைந்த நாடுகளே வகிக்கின்றன.

சர்வதேச ஏற்றுமதி வர்த்தகம்

| | 1959 | 1960 | 1970 |
|---|---|---|---|
| 1. அபிவிருத்தியடைந்த நாடுகள். | 60% | 68% | 71% |
| 2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள். | 32% | 22% | 18% |

(உலகவங்கிப் புள்ளிவிபரம் - 71)

## 5. குடித்தொகை வேறுபாடுகள்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உலகக்குடித்தொகையில் $\frac{2}{3}$ பங்கு மக்களும், அபிவிருத்தியடைந்த நாடுகளில் $^1/_3$ பங்கு மக்களும் வாழ்ந்து வருகின்றனர். குடித்தொகையில் கிராமிய மக்கள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அதிகமாவர். இந்நாடுகளில் 78% மக்கள் கிராம மக்களாவர். அபிவிருத்தியடைந்த நாடுகளில், நகரங்களின் தொகை அதிகமாகும்; இந்நாடுகளில் ஏறத்தாழ 71% மக்கள் நகரமக்களாவர்.

இவ்வாறு பல வேறுபாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகட்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. மேலும் அபிவிருத்தியடைத்த நாடுகளுக்கு இடையிலேயே வளர்ச்சி நிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் வாழ்க்கைத்தர உயர்வு, பிரான்சிலில்லை. பிரான்சின் வாழ்க்கைத்தர உயர்வு, ஐக்கிய இராச்சியத்திலில்லை; ஐக்கிய இராச்சியத்தின் வாழ்க்கைத்தர உயர்வு யப்பானிலில்லை. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு இடையிலேயும் விருத்திநிலைமைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மலேசியா, பேரு, பிறேசில் முதலிய நாடுகள் விரைந்து அபிவிருத்தியடைந்து வருகின்றன. அதேவேளையில் எதியோப்பியா, தன்சானியா, பராகுவே, சோமாலியா முதலிய நாடுகளின் அபிவிருத்தியடையும் வேகம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: நான்கு

# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின், அபிவிருத்தி நடவடிக்கைகள்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் விரைந்து பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு முக்கியமாக மூன்று கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவையாவன:

1. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டே ஒரு நாட்டின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும்.
2. உடனடியாக முதற்கண் கைத்தொழிலை இந்நாடுகளில் அபிவிருத்தி செய்யவேண்டும். அதன் பின்னரே விவசாயத்தை நோக்கவேண்டும்.
3. கைத்தொழில் - விவசாயம் என்னும் இரு துறைகளுமே ஒன்றுக்கொன்று இயைந்த முறையில் ஒரே நேரத்தில் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

## விவசாய அபிவிருத்தி

### 1. விவசாய அபிவிருத்தித்தடைகள்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் விவசாயத்துறையில் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. அவை வருமாறு:

1. நிலம் சம்பந்தமான பிரச்சனைகள்: அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாய விளைநிலங்கள் சிறியனவாகக் காணப்படுகின்றன. முக்கியமாகச் செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கை நடைபெற்று வருகின்ற பருவக்காற்று ஆசியநாடுகளின், நெல் வயல்கள் மிகவும் சிறிய துண்டுகளாகக் காணப்படுகின்றன. அதிக குடித்தொகையின் காரணமாக இந்நாடுகளின் விளைநிலங்கள் சிறியனவாகவுள்ளன; இந்நாடுகளில் பயிர்ச்செய்கையில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், (ஏறத்தாழ 70%) விளைநிலங்கள் சிறியனவாகவுள்ளன. இந்த நாடுகளின் மரபுரிமைச் சட்டங்கள் விளைநிலங்களைத் துண்டாட வைத்துள்ளன. சராசரி 2 ஏக்கரிலிருந்து 25 ஏக்கர்களுக்குக் குறைவான நிலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பத்திற்குரியதாக இருக்கின்றது. அடர்த்தியான குடித்தொகை, மூலதனமின்மை, உயர்வீதக்குத்தகை, கடன் என்பன வற்றின் விளைவாகக் கீழைத்தேச விவசாயியால் அதிக விளைநிலத்தைச் சொந்தமாக வைத்திருக்க முடியவில்லை.

மேலும், இந்நாடுகளில் பயிர்செய்வதற்குப் போதிய நிலம் கிடையாமையும் ஒரு பிரச்சனையாகும். யப்பான் ஒரு சிறிய நாடாகையால் அங்கு பயிர்செய்வதற்கு மிகப்பந்த்த நிலப்பரப்பு இல்லை. ஆபிரிக்க நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரந்த நிலப்பரப்பு இருந்தாலும், பயிர் செய்வதற்கு உகந்ததாக இருக்கின்ற நிலப்பரப்புகளுக்கு, நீர்ப்பாசன வசதிகள் போதியளவு இல்லாமை ஒரு பிரச்சனையாகவுள்ளது. இந்நாடுகளில் விளைநிலத்தின் பெறுமதி கூடுதலாக இருக்கின்றது.

இந்நாடுகள் பொதுவாக ஈர அயனமண்டலத்தைச் சேர்ந்தவையாகும்; ஈர அயனமண்டலமண் வளமற்றது; விரைவில் வளத்தை இழந்துவிடக்கூடியது. அதிக மழைவீழ்ச்சியால் இந்நாடுகளில் மண்ணரிப்பு ஏற்படுகிறது. மண்வளத்தைத் தக்கவிதத்தில் பேணுவதும் குறைவு.

2. செய்கைமுறைகள் சம்பந்தமான பிரச்சினைகள்: (அ) இந்நாடுகளின் பயிர்ச்செய்கையில் புராதன கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன. பண்டைய தொழில்நுட்ப முறைகளே கைக்கொள்ளப்படுகின்றன. உழுதல், விதைத்தல், அறுவடை, சூடடித்தல் முதலான சகல செய்கைகளும் கலப்பை, மண்வெட்டி, மாடுகள், கைக்கருவிகள் என்பனவற்றின் துணையுடனேயே நடந்து வருகின்றன. மக்கள் தொகை அதிகளவில் இருப்பதால் கூடிய மனித வலுவைப் பயன்படுத்துவது சாத்தியமாகின்றது.

(ஆ) மேலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளான ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, தென்கிழக்கு ஆசியா முதலிய பகுதிகளில் வாழ்கின்ற ஆதிமக்களிடையே பெயர்ச்சிப்பயிர்ச் செய்கை எனும் மிகவும் பிற்போக்கான பயிர்ச்செய்கைமுறை காணப்படுகின்றது. காடுகளை வெட்டிக்கொழுத்தி, சாம்பலைப் பசளையாகக் கொண்டு பயிர்செய்வர். இப்பயிர்ச்செய்கையில் காலத்திற்குக்காலம் பயிர்களை மாற்றாது, இடங்களை மாற்றிமாற்றிப் பயிரிடுவர். இப்பயிர்ச்செய்கையை இலங்கையில் சேனை என்பர். மத்திய அமெரிக்காவில் மில்பா எனவும், வெனிசுவெலாவில் கனுகோ எனவும், கொங்கோவில் மஸோல் எனவும், மலேசியாவில் லடாங் எனவும் வழங்குவர். இப்பெயர்ச்சிப் பயிர்ச்செய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையால் காட்டுவளம் அழிவதுடன், மண்ணரிப்பும் அதிகமாக ஏற்பட ஏதுவாகின்றது.

(இ) இந்நாடுகளின் பயிர்ச்செய்கையில் நவீன யந்திரசாதனங்களைப் பயன்படுத்துவது அரிதாகும். தென்கிழக்காசியாவின் சிறிய விலைநிலங்கள் யந்திரங்களை உபயோகிப்பதற்கு அவ்வளவு தூரம் ஏற்றனவாயுமில்லை. இந்த நாடுகளின் விவசாயிகள் ஏழைகளாகவும், கடனாளிகளாகவும் இருப்பதால் நவீன யந்திரங்களை வாங்கி உபயோகிக்கக் கூடியளவு மூலதனம் படைத்தவர்களாக இல்லை.

(ஈ) இந்த நாடுகளின் விவசாயத்தை நோய்கள், பூச்சிகள் என்பன அதிக அளவில் அழித்து வருகின்றன. உதாரணமாக கரீபியன் கரையோர வாழைத்தோட்டங்களை 'சிகாரோகா' (Sigatoka) எனும் நோய் முற்றாக அழித்தது. பிறேசில் கோப்பித்தோட்டங்களை 'பொயில் விகல்' வண்டு தாக்கிச் சேதப்படுத்தியது. அயன மண்டல ஆபிரிக்காவின் மந்தைகளின் அழிவிற்கு ரீசிரிசி (tsetse) ஈக்கள் காரணமாக இருக்கின்றன. இத்தகைய நோய்களையும், பீடைகளையும் கட்டுப்படுத்துவதற்குக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவது இந்த நாடுகளில் குறைவாகும்.

3. சமூகப்பிரச்சினைகள்-

(அ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் நிலவுடமை சம்பந்தமான சமூகப் பழக்கவழக்கங்கள் நிலங்களைச் சிறியனவாக்குகின்றன. மரபுரிமைச்சட்டங்கள் விளைநிலங்களைச் சிறியனவாக்குகின்றன. ஏழை விவசாயிகள் இந்த நாடுகளில் நிலவுடமையற்றவர்களாக இருக்கின்றார்கள். கடனாளிகளாகவுள்ளனர். குத்தகை போன்ற நிலவார முறைகள் இந்த நாடுகளில் இருக்கின்றன.

(ஆ) கலாச்சாரப்பின்னணியும் விவசாய அபிவிருத்திக்குத் தடையாக இருக்கிறது. பெயர்ச்சிப்பயிர்ச்செய்கை பரம்பரைபரம்பரையாக அவர்களின் மூதாதையரிடமிருந்து வந்தவை. ஆதிக்குடிகளை நவீன பயிர்ச்செய்கை முறைக்கு மாற்றுவது கடினமாகவுள்ளது. இலங்கையில் சேனைப்பயிர்ச்செய்கையை முற்றாக ஒழித்துவிடமுடியவில்லை. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பெரும்பாலான மக்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதால், நவீன பயிர்ச்செய்கை முறைகளை அறிந்தில்லை; அறிந்தாலும் பின்பற்ற முன்வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொருளாதாரப் பிரச்சினைகள்-

(அ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மக்கள் ஒவ்வொரு பிரதான பயிர்களில் தங்கியுள்ளனர். பயிர்செய்கை இவர்களின் சுயதேவைக்குரியதாகவுள்ளது இவ்வாறு ஒவ்வொரு பயிர்களில் தங்கியிருப்பது பொருளாதாரப்பாதுகாப்பானதன்று. பருவக்காற்று ஆசியநாட்டு மக்கள் நெல்லிலும், ஆபிரிக்கநாட்டு மக்கள் சோளத்திலும் தங்கியுள்ளனர். மேலும் தேசிய வருவாயைப் பொறுத்தளவில் இலங்கை தேயிலையிலும், எகிப்து பருத்தியிலும், கியூபா சீனியிலும் மலாயா றப்பரிலும் தங்கியுள்ளன. இந்நாடுகளில் பயிர்கள் பல்வகைப்படவில்லை. அதனால் நோய்கள் ஏற்படும்போது ஒரு நாட்டின் பொருளாதாரமே பாதிக்கின்றது.

(ஆ) இந்நாடுகளின் விவசாய அபிவிருத்திக்குச் சந்தை வாய்ப்பு, போக்குவரத்துவசதிகள் முதலிய காரணிகளும் தடைகளாக இருக்கின்றன. இந்த நாடுகளில் போக்குவரத்து வசதிகளும், போக்குவரத்துச் சாதனங்களும் மிகக் குறைவாகும். அருகும் பயிர்களை நீண்டகாலம் பேணிப்பாதுகாப்பதற்குக் குளிர்சாதன வசதிகளுமில்லை. அத்துடன் மேலதிகமாக உற்பத்தி செய்தாலும் அவற்றை விற்பதற்குரிய சந்தை வாய்ப்புகளும் இந்நாடுகளில் குறைவு.

இவற்றின் காரணமாக இந்த நாடுகள் உணவு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

## 2. உலக உணவு நெருக்கடி.

உலகின் பல நாடுகளில் மக்கள் உணவுப்பற்றுக்குறையினால் தவிக்கின்றனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழ்கின்ற $1/3$ பங்கு மக்களே போதுமான அளவு உணவைப் பெற்று உண்கின்றனர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் $\frac{2}{3}$ பங்கு மக்கள் உணவுப்பற்றுக்குறையினால் அவதியுறுகின்றனர். ஆபிரிக்க நாடுகள் அதிகம் உணவுப்பற்றுக்குறைக்குள்ளாகின்றன. வறுமைநிலை, வேலைவாய்ப்பின்மை, உற்பத்திக்குறைவு, காலநிலை பொய்த்தல் என்பன காரணமாக உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டிருக்கின்றது.

உலக உணவு நெருக்கடிக்கான காரணங்கள் பல கூறப்படுகின்றன, அவை:

(1) விரைவான குடிப்பெருக்கம்:- உலகின் வேகமான குடிப்பெருக்கமே உலக உணவு நெருக்கடிக்கான முதலாவது காரணமாகக் கூறப்படுகிறது. கி.பி. 1600-ஆம் ஆண்டளவில் உலகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தொகை 40 கோடிகளாகும். இக்குடித்தொகை இன்று 436 கோடிகளாக உயர்ந்துள்ளது. அதிகரித்துவிட்ட மக்கட்டொகைக்கும், அதிகரித்துவரும் மக்கட்டொகைக்கும் உணவு வழங்குவது உலகநாடுகள் அனைத்தினதும் பிரதான கடமையாகும். 'வறிய மக்களது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு வறுமை காரணமல்ல. அவர்களது தவறுகளினால் அதிகரிக்கும் குடிப்பெருக்கமே காரணமாகும்' எனப்பல அறிஞர்கள் கருத்துக்தெரிவித்துள்ளனர். 'அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வேறு எந்தப் பிரச்சினைகளும் பெரும்மிரட்டல்கள் அல்ல. குடிப்பெருக்கம்தான் பெரும் மிரட்டல் ஆகும்' என உலகவங்கித்தலைவர் ருெபேட். எஸ். மக்னமாரா கூறியுள்ளார்.

(2) உணவுப்பொருட்கள் சரிவரப் பகிர்வு செய்யப்படாமை:- அதிகரிக்கும் குடிப்பெருக்கம் உணவு பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது என்பது சர்வதேச ரீதியாக நோக்கும்போது ஏற்புடையதாகவில்லை. குறித்தசில நாடுகளை எடுத்து நோக்கும்போது, குடிப்பெருக்கத்தினால் உணவுப்பிரச்சினை தோன்றியிருக்கிறது எனக்கொள்ளலாமே தவிர உலகரீதியாகவல்ல. ஏனெனில், கடந்த 20 ஆண்டுகளில் உலகில் ஏற்பட்ட பாரிய விவசாய உற்பத்தியை நாம் நோக்க வேண்டும். 1950-1972 ஆம் ஆண்டுகளுக்கிடையில் உலக சனத்தொகை 37 சதவீதம் அதிகரித்திருக்க, உலக உற்பத்தி 54 சதவீதம் அதிகரித்திருக்கின்றது. பின்வரும் அட்டவணையை நோக்குக.

| | குடித்தொகை அதிகரிப்பு நூற்றுவீதம் 1950-72 | உணவுற்பத்தி அதிகரிப்பு நூற்றுவீதம் 1950-72 |
|---|---|---|
| உலகம் | 37 | 54 |
| அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள். | 49 | 59 |
| அபிவிருத்தியடைந்த நாடுகள் | 21 | 51 |

(ஆதாரம்: உலக விவசாய உணவு நிறுவனம்.)

அவ்வாறுயின் உணவுப்பற்றுக்குறைக்குக் காரணமென்ன? உலக உணவுற்பத்தி, தக்கமுறையில் சமூகப்பகிர்வு செய்யப்படாமையே காரணமாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் உணவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் அளவிற்கு அதிகமாக நுகரப்படுகின்றன. உதாரணமாக ஒரு அமெரிக்கக் குழந்தை 50 இந்தியக்குழந்தைகளுக்குத் தேவையான உணவை உண்கிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் உணவுப்பொருட்கள் தேங்கிக்கிடக்கின்றன. அவ்வாறு தேங்கிக்கிடக்கின்ற உணவுப்பொருட்களில் சிறிய அளவைத்தான். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு, வெளிநாட்டு உதவி என்ற முறையில் இந்நாடுகள் பகிர்ந்து அளிக்கின்றன. மேலும், உணவுப்பொருட்களின் விலை வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக ஏராளமான தானியங்கள், இறைச்சி, பழங்கள் என்பன வீணே நாசம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், பசுக்களிலிருந்து கறக்கப்பட்ட பால் ,மீண்டும் பசுக்களுக்கே உணவாக வழங்கப் படுகிறது

(iii) உணவுற்பத்திக்கு உதவக் கூடிய விளை நிலங்கள் முற்றாகப் பயன் படுத்தப்படாமை:

(அ) உலக உணவுற்பத்திக்கு உதவக்கூடிய விளை நிலங்கள் இன்று முற்றாகப் பயன்படுத்தப் படாமல் உள்ளன. உலகின் நிலப்பரப்பில் ஏறத்தாழ 20 சத வீத நிலம் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகும். இதில இன்று 10 சத வீத நிலப்பரப்பே பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது. மிகுதி 10 சத வீத நிலப் பரப்பைப் பயிர்ச்செய்கைக்குட்படுத்தல் வேண்டும். "வெப்ப வலய நாடுகளில் 10 கோடி ஏக்கர் நிலங்களை உற்பத்தியின் கீழ் கொண்டுவர முடியும், அப்பிரதேசங்களுக்கு வெளியே 30 கோடி. ஏக்கர் நிலங்களை உணவுற்பத்திக்குட்படுத்த முடியும்." என கலாநிதி சி. டிபர் கூறியுள்ளார். "உலகத்தில் பயிர் செய்யக் கூடியதும் மேய்ச்சல் தரைகளாக இருக்கக்கூடியதுமான நிலங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நாம் உலகக் குடிப்பெருக்க அளவின் 10 மடங்கு அதிகமானோருக்கு சராசரி அமெரிக்கர் உண்ணும் உணவை வழங்க முடியும்." எனப் பேராசிரியர் கொலின் கிளார்க் கூறியுள்ளார்.

(ஆ) இன்று உலகின் பரப்பில் பயிர் செய்யக்கூடிய விளை நிலமான 10 சத வீத நிலப்பரப்பும், வருடா வருடம் முற்றாகப் பயிர்ச்செய்கைக்குட்படுத்தப்படுவது இடையாது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான விளை நிலங்களில் கணிசமானவளவு, வருடா வருடம் உணவுப் பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் விலை வீழ்ச்சி அடைந்து விடும் என்பதற்காகப் பயிர் செய்யப்படாது விணே விடப்படுகின்றன. உலக உணவு உற்பத்திக் குறைவிற்கு இது ஒரு காரணமாகும். ஐக்கிய அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளில் ஏறத்தாழ 5 கோடி ஏக்கர் நிலத்தைப் பயிர் செய்யாது விட்டது. அதற்காக, விவசாயிகளுக்கு நட்டஈடாக நிதியுதவியும் வழங்கியது. மேலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளான லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நிலச்சுவாந்தர் தமக்குச் சொந்தமான விளைநிலங்கள் முழுவதையும் வருடா வருடம் செய்கை பண்ணுவதில்லை. இலங்கையில் கூட வருடா வருடம் 5 தொட்டு 12 சதவீத நிலம் பயிரிடப்படாது விடப்படுகிறது. இதற்குக் காரணம் அசட்டை, மூலதனமின்மை, ஏற்ற வேளையில் வேண்டிய தொழிலாளர் கிடையாமை என்பனவாகும்.

(iv) இயற்கைக் கோளாறுகள்:

(அ) காலத்திற்குக் காலம் இயற்கையின் கோளாறுகளால் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டு வருகின்றது. அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளில் பயிர்ச்செய்கை, மழையை நம்பியதாகும். நீர்ப்பாசன வசதிகளும் மழையைப் பொறுத்தே அமைகின்றன. பருவக்காற்று ஆசிய நாடுகளில் தென்மேல் மொன்சூன் மழை பொய்த்தால், அந்த ஆண்டு விவசாய உற்பத்தி முற்றாகப் பாதிக்கப்படுகிறது. எனவே, ஒரு பருவத்தில் மழை பெய்யாது வரட்சி நிலவுமாயின், உணவுற்பத்தி வீழ்ச்சியடையும். எதியோப்பியாவில் அண்மைக்காலத்தில் தொடர்ந்து நிலவிய ஏழாண்டு வறட்சியால் மக்கள் பஞ்சத்திற்குள்ளானுர்கள். இலங்கையின் வரண்ட பிரதேசத்திலும் அடிக்கடி ஏற்படும் வறட்சியால் பயிர்ச் செய்கை பாதிப்படைகின்றது.

(ஆ) சில ஆண்டுகளில் மழைவீழ்ச்சி அதிகரித்து ஏற்படும் வெள்ளப் பெருக்கும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விவசாயத்தைப் பாதிக்கின்றது. வங்காள தேசத்தின் உணவுற்பத்தி, வெள்ளப்பெருக்கினுல் ஆண்டிற்காண்டு பாதிப்படைகின்றது. இலங்கையின் சிலபகுதிகளும் (மினிப்பே, பொலனறுவை) மழை அதிகரிக்கும்போது வெள்ளப் பெருக்கிற்கு அடிக்கடி உள்ளாகின்றன. கடுங்காற்றுக்களினுலும் பயிர்கள் அழிவுறுகின்றன.

(இ) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பயிர்கள் நோய்கள், பூச்சிகள், விலங்குகள் என்பனவற்றுல் அதிக அளவில் அழிக்கப்படுகின்றன. உலக உணவு உற்பத்திக் குறைவிற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆபிரிக்காவில் வெட்டுக்கிளிகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிற்காண்டு அழிவுறும் தானியங்கள் அதிக பங்காகும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கிருமிநாசினிகளை உபயோகித்து, இவற்றைக் கட்டுப்படுத்துவதுபோல, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நடைபெறுவதில்லை. உணவுப் பொருட்களைக் களஞ்சியங்களில் சேகரித்து வைக்கும்போதும் எலிகள், பூச்சிகள் என்பனவற்றால் கணிசமானவளவு அழிக்கப்படுகின்றன. இவ்வாறு ஏறத்தாழ 20 சதவீத உணவுப்பொருட்கள் பூச்சிகளினாலும் நோய்களினாலும் அழிவுறுகின்றன என்று கணித்துள்ளனர்.

## 3. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், விவசாய விளைநிலங்களின் விளைத்திறனைப் பெருக்குதல்:

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில், விவசாய விளைநிலங்களின் விளைத்திறனைப் பெருக்கி, உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கு முக்கியமான இரு வழிகள் உள்ளன. அவை:

(i) விளைநிலங்களின் பரப்பளவை அதிகரித்தல்.

(ii) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்தல்.

### (i) விளைநிலங்களின் பரப்பளவை அதிகரித்தல்:

(அ) புவியின் மொத்த நிலப்பரப்பு 522 இலட்சம் சதுர மைல்களாகும். இதில் ஏறத்தாழ 21 சதவீதப் பரப்பு பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படக் கூடியதாகும். இதில் இன்று 10.1 சதவீத நிலப்பரப்பே பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கு விளைநிலங்களின் பரப்பளவை அதிகரிக்க வேண்டும். சகல நாடுகளிலும் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்கு இடவசதிகள் உள்ளன. நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடனும், தொழில் நுட்ப உதவியுடனும் புதிய விளை நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியும்.

(ஆ) இன்று விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாது இருக்கும் நிலங்கள், பெரும்பாலும் வரண்டனவாக இருக்கின்றன. இந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்கும் பட்சத்தில் இவற்றைப் பயிர்ச் செய்கைக்கு உகந்த விளை நிலங்களாக மாற்றலாம். இன்று உலகின் பல நாடுகளிலும் பெரியளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. நதிப்பள்ளத்தாக்குகளை அபிவிருத்தி செய்வதிலும், நதிகளைத் திசை திருப்புவதிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஈடுபட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கின்றன. வரண்ட பிரதேசங்களை நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதன் மூலம் விளை நிலங்களாக்குவதே இத்திட்டங்களின் பிரதான நோக்கங்களாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பது மூலதனமின்மையாகும். அதனால் வெளிநாட்டுதவி இந்த நாடுகளுக்கு அவசியம் தேவையாகவுள்ளது. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வேலைத்திட்டத்தின்கீழ், 25 நாடுகள் மீக்கொங் அபிவிருத்தித்திட்டத்திற்கு உதவி வருகின்றன. ஆசியாவில் லாவோஸ், தாய்லாந்து, வியட்னும் முதலிய நாடுகள் நீர்வசதியையும் மின்சார வசதியையும் பெறுவதற்காக உருவாக்கப்பட்டதே மீக்கொங் அபிவிருத்தித் திட்டமாகும். இலங்கையின் துரித மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக உலக வங்கியும், யப்பான், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளும் உதவ முன் வந்துள்ளன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மாத்திரமன்றி, உலகமெங்கும் நீர்த்தட்டுப்பாடுள்ள பிரதேசங்களில், நீர்வளத்தை அதிகரிக்கப் பல புதிய வழிமுறைகள் பரீட்சிக்கப்பட்டும், நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. அவை:

(1) நதிகளை வரண்ட பிரதேசங்களுக்குத் திசை திருப்புவது பல நாடுகளில் இன்று மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களாகும். அவுஸ்திரேலியாவில் ஸ்னேுயி என்ற நதியை கிழக்கிலிருந்து, உட்பிரதேசங்களுக்குத் திசை திருப்பி வருகிறார்கள். அதே போல மகாவலி கங்கையை வரண்ட வட பாகங்களுக்கு துரிதமாகத் திசை திருப்பி வருகின்றார்கள்.

(2) நீர்ப்பற்றுக்குறையுள்ள பிரதேசங்களில், தரைகீழ் நீரைப் பயன்படுத்த முடியும். யாழ்ப்பாணக் குடாநாட்டில், கிணறுகள் மூலம் தரைகீழ்நீர் பெறப்படுகிறது. மிக ஆழத்திலுள்ள தரைகீழ் நீரைக் குழாய்க் கிணறுகள் மூலம் பயன்படுத்த முடியும். இந்தியாவின் மத்திய கங்கைச் சமவெளியில் குழாய்க் கிணறுகள் ஆயிரக் கணக்கிலுள்ளன. இலங்கையில் மன்னர் பிரதேசத்தில் பல குழாய்க்கிணறுகள் இன்று நீர்ப்பாசனத்திற்குப் பயன் படுகின்றன. இலங்கையின் வடதாழ் நிலத்திலும் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கஸ்பியன் கடலுக்கும் ஏரல் கடலுக்கும் இடையிலுள்ள வரண்ட பிரதேசத்தில் 3000 அடிக்குக்கீழ் இருந்து தரைக்குக்கீழ் நீர், சோவியத்ருஷியாவால் பெறப்படுகின்றது. இலங்கையின் குழாய்க் கிணறுகள் 150—200 அடி ஆழமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) கடல்நீரை நன்னீராக்குவதன் மூலம் எதிர்காலத்தில் நீர்த் தட்டுப்பாட்டை நீக்கமுடியுமென விஞ்ஞானிகள் கருதுகின்றனர். உலகின் சில நாடுகளில் கடல் நீரை நன்னீராக்கிச் சிறிய அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அல்ஜீரியா, இஸ்ரவேல் முதலிய நாடுகளின் சிற்சில பகுதிகளில் கடல்நீரை நன்னீராக்கிப் பயன்படுத்தி வருகின்றனர்.

(4) செயற்கை மழையைப் பெய்ய வைப்பதன் மூலமும் நீர்த் தட்டுப்பாட்டை நீக்க முடியும், என விஞ்ஞானிகள் கருதிச் செயற்படுகின்றனர். ஐக்கிய அமெரிக்க விஞ்ஞானிகள், அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இத்துறையில் அதிக ஆய்வுகளை நடாத்தி வெற்றி கண்டுள்ளனர். விமானத்தில் சென்று மழைமுகில்களின் மீது முகில்களைக் குளிரச் செய்யும் (ஒடுங்கச் செய்யும்) இரசாயனத் தூள்களைத் தூவி விடுவதன் மூலம் அக் குறித்த இடத்தில் செயற்கைமழையைப் பொழிய வைக்கமுடியும். அண்மையில் இலங்கையில் செயற்கைமழை பொழிவிக்கப்பட்டது. 1980-ம் ஆண்டு யூன் மாதம் 24-ம் திகதி, காசல்ரீ, மவுசாகல ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் செயற்கைமழை பெய்விக்கப்பட்டது. நீர்மின் உற்பத்திக்குத் தேவையான நீர், இந்த நீர்த்தேக்கங்களில் குறைந்தமையே இதற்குக் காரணமாகும். தாய்லாந்திலிருந்து வந்திருந்த நிபுணர்கள், டி. சி. 3 என்ற இலங்கை விமானப்படை விமானத்தில் பறந்து, இரசாயனத் தூள்களைத் தூவி செயற்கை மழையைப் பொழிவித்தனர்.

(5) அந்தாண்டிக், ஆர்டிக் முனைவுப் பகுதிகளில் கிடக்கின்ற பனிக்கட்டி மலைகளை இழுத்து வந்து, நீர்தேவையான பிரதேசத்தில் உருக்கி, நீரைப் பெறுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு பனிக்கட்டி மலைகளை இழுத்து வருவதன் மூலம், கலகாரி, சகாரா, மேற்கு அவுஸ்திரேலியா முதலிய பாலைநிலப் பிரதேசங்களைச் செழிப்பான நிலங்களாக்க முடியும் என நம்பப்படுகின்றது.

## (ii) ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்தல்:

பாரம்பரிய முறைகளைத் தழுவிப் பயிர்ச்செய்கை நடைபெறுகின்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஏக்கருக்குரிய விளைச்சல் மிகக் குறைவாகும். செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்ற பருவக்காற்று ஆசிய நாடுகளில், ஏக்கருக்குரிய விளைச்சல், ஏனைய நாடுகளிலும் பார்க்க உயர்வானதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். எனினும், ஏக்கருக்குரிய விளைச்சல் அளவு, நாட்டிற்குநாடு வேறுபடுகின்ற போக்கினைக் காணமுடிகின்றது. பின்வரும் அட்டவணையை நோக்குக:

| நாடு | பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு ஹெக்டயர் (இலட்சத்தில்) | விளைச்சலளவு ஒரு ஹெக்டயருக்கு கிலோ கிராம் (ஆயிரத்தில்) | உற்பத்தி மெட்டிக் தொன்களில் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| யப்பான் | 2,695 | 52.5 | 14,139 |
| இலங்கை | 611 | 26.4 | 1,616 |
| இந்தியா | 38,800 | 17.1 | 66,500 |
| பர்மா | 4,979 | 16.9 | 8,413 |

(உலக உணவு விவசாய நிறுவனம் - 1971)

யப்பானில் ஹெக்டயர் ஒன்றிற்குக் கிடைக்கும் விளைச்சல் 5,25,000 கிலோகிராம் ஆகும். ஆனால், இலங்கையில் ஒரு ஹெக்டயருக்குக் கிடைக்கும் விளைச்சல், யப்பானிலும் பார்க்க சரி அரைப்பங்காகும். இந்தியாவிலும் பர்மாவிலும் ஒரு ஹெக்டயருக்கு உரிய விளைச்சல் ஏறத்தாழ 1,70,000 கிலோகிராமாகவுள்ளது. யப்பானின் உயர்வான விளைச்சலுக்குக் காரணம், (அ) தரமான விதைகளைப் பயன்படுத்துவது., (ஆ) உரம், கிருமிநாசினி என்பனவற்றை முறையாகப் பயன்படுத்துவது, (இ) நாற்று நடுதல், களை பிடுங்கல் முதலிய தொழில் நுட்பங்களைக் கையாள்வது, (ஈ) நீரை அளவோடு பாய்ச்சுவது என்பனவாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்காகக் பின்வரும் நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. சீராக்கப்பட்ட விதைகள்: சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம், ஆசியாவின் நெல் விளைச்சலை அதிகரிப்பதற்காகப் பல சீராக்கப்பட்ட நெல் விதைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. IR 8 என்பது அத்தகைய சிறந்தவொரு வகையாகும். நமது நாட்டில் நீண்டகாலமாகப் பச்சைப்பெருமாள், கறுத்தச்சீனட்டி, மொட்டைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பன் முதலிய விளைச்சல் குறைந்த நெல்லினங்களையே பயிரிட்டு வந்தோம். ஆனால், இன்று H 4, BG 11, BG 348 என்பன போன்ற சிராககப்பட்ட விதைகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற்று வருகின்றோம். T 27 என்ற நெல்லினம் இந்தியாவில் நல்ல விளைச்சலைத் தருகின்றது. அபிவிருத்திபடைந்து வரும் நாடுகளில் நெல்லைத்தவிர சோளம், தினைவகை, பருத்தி போன்ற பயிர்களின் விளைச்சலைப் பெருக்கவும் சிராக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2. அதிக பசளை உபயோகம்: மூன்றும் உலகத்தில் செய்கை பண்ணப்படும் விளைநிலம் முழுவதும் இரசாயனப் பசளையைப் பயன்படுத்துவது கிடையாது. ஏறத்தாழ $\frac{1}{7}$ பாகத்திலேயே இரசாயனப் பசளை உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவில் இடப்படும் பசளையைப் போன்று 100 மடங்கு யப்பான் பசளையிடுவதால், அதன் விளைச்சல் அதிகமாக இருக்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாட்டு மக்கள் வறியவர்களாக இருப்பதால் இரசாயன உரவகைகளை அதிகமாக இறக்குமதி செய்ய முடியாதவர்களாக உள்ளனர். மேலைத் தேசங்களில் கிருமி நாசினி தெளிப்பதற்குக் ஹெலிகெப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன; அவ்வாறு குறைவிருத்தி நாடுகளில் பயன்படுத்த வாய்ப்புக்கிடையாது. மண்ணை நன்குக ஆராய்ந்து, விவசாய நிபுணர்களால் கூறப்பட்ட பசளைகளையும், கிருமி நாசினிகளையும் உபயோகிப்பது அவசியமாகும்.

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாய விளைத்திறனைப் பெருக்குவதற்கு, சர்வதேச நிறுவனங்களின் உதவிகள்:

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாய அபிவிருத்தி, மூலதனப் பற்றுக்குறை, தொழில் நுட்ப அறிவுக் குறைவு என்பன காரணமாகத் தடைப்பட்டிருக்கின்றது. இக் குறைபாடுகளை நிவிர்த்தி செய்து அந்த நாடுகளின் விவசாய விளைத்திறனைப் பெருக்குவதற்காகப் பல சர்வதேச நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

### 1. உலக உணவு விவசாய நிறுவனம்:

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கீழ் இயங்கும் மிகமுக்கியமான நிறுவனங்களில் ஒன்று உலக உணவு விவசாய நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(F. A. O.) ஆகும். இந்த நிறுவனம் 1945 - இல் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வறுமை ஊட்டமின்மை என்பனவற்றை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டது. விவசாயம், கடற்றொழில், காட்டியல், விலங்கு வேளாண்மை போன்ற நடவடிக்கைகளின் விருத்திக்கு இந்த நிறுவனம் பல்வேறு வழிகளிலும் உதவி வருகிறது ஆலோசனைகளை வழங்குவதுடன், தொழில் நுட்ப நிபுணர்களை அனுப்பியும் உதவி வருகிறது வறியநாடுகளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கடன் பெற்றுக் கொடுத்தல் ஆகிய உதவிகளையும் செய்துவருகின்றது. அத்துடன் உலகச் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் விவசாய உற்பத்தியளவை உயர்த்துதல், உணவுப் பொருள்களை உலகின் எல்லாப் பிரதேசங்களுக்கும் விநியோகித்தல் என்பனவற்றையும் இந் நிறுவனம் செய்து வருகின்றது.

## 2. உலக உணவு வேலைத்திட்டம்,

உலக உணவு வேலைத்திட்டம் 1963 - ஆம் ஆண்டு உலக உணவு விவசாய நிறுவனத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு இயற்கை ஏதுக்களால் ஏற்படும் இடர்களினால் அல்லலுறும் மக்களுக்கு உணவு வழங்கல், சிரமதான வேலைகளுக்கு உணவுப் பொருட்களைக் வழங்கல் என்பன இந்த உலக உணவு வேலைத் திட்டத்தின் செயல் திட்டங்களாகும். பட்டினி நிலவும் பிரதேசங்கள், புவிநடுக்கம் ஏற்பட்ட பிரதேசங்கள், வெள்ளப் பெருக்கு — வரட்சி நிலவும் பிரதேசங்கள் என்பனவற்றிற்கு இந்த நிறுவனம் விரைந்து உணவுப் பொருட்களை வழங்கும் இலங்கையில் நமது பாழடைந்த குளங்களைச் சிரமதான அடிப்படையில் திருத்துவதற்கு இந்த நிறுவனம் உணவுப் பொருட்களை வழங்கியது.

## 3. கொழும்புத் திட்டம்:

கொழும்புத் திட்டம் 1954 - ஆம் ஆண்டு பிரித்தானியாவால் ஆரம்பிக்கப்பட்டது, முக்கியமாக பொதுநல அமைப்பிலுள்ள தென் கிழக்கு ஆசிய நாடுகளின் விவசாய, மீன்பிடி, காட்டியல் அபிவிருத்திகளுக்கு உதவுவதற்காக இத்திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அங்கத்துவ நாடுகளுக்குக் கடன் வசதி வழங்கப்பட்டதுடன், மருத்துவம், சுகாதாரம், தொழில், வணிகம் போக்குவரத்து, நீர்ப்பாசனம் தபால் தந்தி, உணவுற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் என்பவை போன்ற துறைகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதுடன், தொழில் நுட்ப உதவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

### 4. உலக வங்கி:

புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி என்ற உலக வங்கி 1944 - ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு விவசாய அபிவிருத்திக்காகக் கடன் வசதிகளை அளித்து வருகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளிடம் இருந்து பெற்ற நிதியை இவ்வங்கி கடனாக வழங்குகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த வங்கியிலிருந்து தென் அமெரிக்காவும் ஆசியாவும் பெரும்பாலான கடன் பெற்ற நாடுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: ஐந்து.

# அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள்- கைத்தொழில் அபிவிருத்தி

அபிவிருத்தியடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, சோவியத் சமவுடைமைக் குடியரசு, யப்பான் முதலான நாடுகள் கைத்தொழிலாக்கங்களில் முன்னேறியுள்ளன இந்நாடுகளின் சனத் தொகையில் ஏறத்தாழ 40 சத வீதத்தினர் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் விவசாய நாடுகள் ஆகும் அவை கைத்தொழில்களில் அதிகம் முன்னேற வில்லை. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கநாடுகளில் சனத் தொகையில் 10 சத வீதத்தினருக்கும் குறைவான தொகையினரே கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

### விருத்திக்குரிய தடைகள்

ஒரு நாட்டின் கைத்தொழில் விருத்தி மூலதனம், தொழில் நுட்ப அறிவு, மூலப்பொருள்களினதும் வலுவினதும் சாதகநிலைமைகள், திறனுடைய தொழிலாளர் வசதி, சிறந்த போக்குவரத்து, நிலையான அரசாங்கம் என்பனவற்றில் தங்கியுள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கைத்தொழில் விருத்திக்குத் தடையாக இருப்பன மேற்குறித்தனவற்றின் சாதகமின்மைகளாகும். அவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

1. மூலதனப்பற்றுக்குறை:- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், கைத்தொழிலாக்கங்களில் முன்னேற்றமடையாமைக்கு முதல் காரணம் மூலதனப் பற்றுக்குறையாகும். முதலீட்டிற்கான மூலதனப் பற்றுக்குறை இந்த நாடுகளில் ஒரு பிரச்சனையாகும். வலு வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு மூலதனம் தேவை ஒரு நாட்டிலுள்ள இயற்கைவளங்களை அளவீடு செய்வதற்கு மூலதனம் தேவை. கைத்தொழில்களுக்குத் தேவையான யந்திர உபகரணங்களை வாங்கிப் பொருத்துவதற்கும் மூலதனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மூலதன உதவி வழங்கிவருகின்றன. உதாரணமாக, பிரித்தானியா, சோவியத் சமவுடைமைக்குடியரசு, ஜேர்மனி ஆகிய நாடுகளின் உதவியுடன் இந்தியாவில் இரும்புருக்கு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மூலப்பொருட்களின் பற்றுக்குறை:- நவீன உலகில் இரும்புருக்குக் கைத்தொழிலில் முன்னேறியுள்ள நாடுகள், விருத்தியடைந்த நாடுகளாகவுள்ளன. நிலக்கரி, இரும்புத்தாது ஆகிய இரு மூலவளங்களும், ஒருநாட்டில் காணப்படில் அந்த நாடு விரைவாக முன்னேற வாய்ப்புண்டு. ஐக்கிய அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் முன்னேற்றம் இரும்புத்தாது, நிலக்கரி ஆகிய இரு மூல வளங்களின் விளைவாகும். ஆசெந்தினு, பிறேசில் ஆகிய நாடுகளை உதாரணங்களாக எடுத்து நோக்கில், இவ்விரு நாடுகளிலும் நிலக்கரி கிடையாது; நீர்மின்வலுவும் விருத்திசெய்யக் கூடியளவிற்கு வாய்ப்பில்லை. இலங்கையிலும் மதிப்புமிக்க கனியப்பொருட்களான நிலக்கரி, இரும்புத்தாது, பெற்றோலியம் என்பன இல்லை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெரும்பாலானவற்றின் இருக்கின்ற இயற்கைவளங்கள் குறித்துப் பூரண ஆய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

3. தொழில்நுட்பம்வாய்ந்த தொழிலாளர் பற்றுக்குறை:- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில், மலிவான தொழிலாளர்கள் ஏராளமாகக் கிடைக்கின்றனர். ஆனால், பயிற்றப்பட்ட தொழிலாளர்கள், தொழில்நுட்பம்வாய்ந்த தொழிலாளர்கள் இந்நாடுகளில் போதிய அளவு இல்லை. கல்வியறிவு, விஞ்ஞான அறிவு என்பன இந்த நாடுகள் பலவற்றில், குறிப்பாக ஆபிரிக்கா நாடுகளில் வளர்ச்சியடையவில்லை.

4. சந்தைவசதியின்மை:- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்குகின்ற இன்னோர் பிரச்சினை, ஏற்றுமதிச்சந்தைவாய்ப்பின்மையாகும். சர்வதேச வர்த்தகத்தில் 20 சதவீதத்தையே இந்த நாடுகள் வகித்துவருகின்றன. அபிவிருத்தியடைந்தநாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உற்பத்திப்பொருள்களைத் தங்கள் நாட்டுச் சந்தைகளில் ஏற்றுக்கொள்ள முன்வருவது அரிதாகும். அளவுக்கு அதிகமான தீர்வை, கடுமையான ஏற்றுமதி, இறக்குமதிச் சட்டங்கள் என்பன மூலம் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகளைக்களைதல்

உலக சனத்தொகையில் ⅔ பங்கு மக்களைக் கொண்டுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை, அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றவழிகளில் ஒன்று, கைத்தொழிலாக்கமாகும். இவை பயிர்ச் செய்கை நாடுகளாகையால், அதிகரித்துவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு கைத்தொழிலாக்கங்களினூலேயே முடியும். மேலும் ஒரு நாடு பொருளாதாரப்பலம் வாய்ந்த நாடாக விளங்க வேண்டுமாயின் கைத்தொழில் நடவடிக்கைக ளில் விரைந்து முன்னேறவேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைக் கைத்தொழில்களில். விருத்தியடைய வைப்பதற்குப் பின்வரும் வழிவகைகள் கூறப்படு கின்றன:

அ) விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டே ஒரு நாட் டின் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் வேண்டும். முதலில் விவசாயத்தை அபிவிருத்தி செய்து, பின்னரே கைத் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டும், என்பது ஒரு சாராரின் கருத்தாகும்.

ஆ) இன்னொரு சாரார், முதலில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதுதான், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை விருத்தி யாக்க ஒரேவழி என்கின்றனர். அதிகரித்துவரும் மக்கள் தொகைக் குத் தொழில்வாய்ப்புகளைவழங்க கைத்தொழில்களால்தான் முடியும் என்பது அவர்களது கருத்தாகும்.

இ) இன்னொரு சாரார், கைத்தொழில், விவசாயம் ஆகிய இரண்டு துறைகளையுமே ஒரே நேரத்தில் அபிவிருத்தி செய்தல் வேண்டும், என்று கருதுகின்றனர்.

எவ்வாறாயினும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கைத் தொழிலாக்கங்களில், விருத்தியுறல் அவசியம் என்பது மறுப்பதற் கில்லை.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் அபி விருத்தி, எதிர் நோக்கும் தடைகளைக் களைதல் அவசியமாகும்.

(i) மூலதனப்பற்றுக்குறையே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை என்பது அறிந்ததே. இந்த வறிய நாடுகளின் மூலதனப்பற்றுக்குறையைத் தீர்ப்பதற் குப் பின்வரும் வழிவகைகள் இன்று கைக்கொள்ளப்பட்டுவருகின் றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) வெளிநாட்டு உதவிகளை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பெற்றுக்கொள்கின்றன. உலகவங்கி (IBRD), சர்வதேச நாணயநிதி (IMF), சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA), ஐக்கிய நாடுகளின் வேலைத்திட்ட அமைப்பு (UNDP) முதலிய சர்வதேச நிறுவனங்கள் கைத்தொழிலாக்கங்களுக்குத் தேவையான கடன்வசதிகளை வழங்கி வருகின்றன. அத்துடன் கொழும்புத்திட்டம், ஆசிய அபிவிருத்திவங்கி, போர்ட் நிதி ஏற்பாட்டு நிறுவனம் என்பனவும் மூலதன வசதிகளை வழங்கி வருகின்றன. இவற்றைவிட தனிப்பட்ட நாடுகள், தனிப்பட்ட முறையில அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு மூலதன உதவிகளைப்புரிந்து வருகின்றன. உதாரணமாக களனியில் அமைந்துள்ள டயர்த் தொழிற்சாலை சோவியத் சமவுடைமைக்குடியரசின் உதவியுடன் நிறுவப்பட்டது. துல்கிரியாவிலுள்ள நெசவு ஆலை, ஜேர்மன் சனநாயகக் குடியரசின் உதவியுடன் நிறுவப்பட்டதாகும்.

(ஆ) வெளிநாடுகளை, தம் நாடுகளில் முதலீடு செய்யவைத்துக் கைத்தொழிலாக்கங்களை உருவாக்குவதற்கும், அபிவிருத்தியடைந்துவரும நாடுகள் இன்று முயன்றுவருகின்றன. உதாரணமாக இலங்கையின் சுதந்திரவர்த்தக வலயத்தில அந்நியநாடுகள் பலவும தம் வேதனத்தை முதலிட்டுப் பல்வேறு கைத்தொழில்களை ஆரம்பித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(ii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறைந்த ஊதியத்துக்கு ஏராளமான தொழிலாளர் கிடைக்கின்றனர். அதனால தொழிலாளர்களைக் கூடுதலாகப்பயன்படுத்தக்கூடிய கைத்தொழில்களை விருத்திசெய்து கொள்வது அவசியமாகவுள்ளது. அதிக செலவு செய்து யந்திர உபகரணங்களைக் கூடுதலாகப் பயன்படுத்தாது, மனிதவலுவை பயன்கொள்ளத்தக்க தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். பழவகைகளைத் தகரத்திலடைத்தல், துணி நெசவுசெய்தல், தோற்பொருள் உற்பத்திசெய்தல, மின்சாரப் பொருள்களை உற்பத்திசெய்தல முதலான தொழில்களை ஆரம்பிப்பதன்மூலம் மனித வலுவைக் கூடுதலாகப் பயன்கொள்ளலாம். இவ்வகையில் கொங்கொங், தென் கொரியா, யப்பான் முதலிய நாடுகள் விருத்தியடைந்திருக்கின்றன. இந்தியாவில் பருத்தி நெசவுத்தொழில், மனித உழைப்பைக் கூடுதலாகப் பயன்படுத்தி விருத்தியுற்றிருக்கும் ஒரு தொழிலாகும். மேலும், அபிவிருத்தியடைந்துவரும நாடுகள், தம் நாட்டுத் தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்பப்பயிற்சி வழங்க வேண்டியது அவசியமாகும். மத்திய கிழக்கு நாடுகளான ஈரான், சவுதி அரேபியா என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியும், தொழில்நுட்பமும் வாய்ந்த தொழிலாளரை ஆசிய நாடுகளிலிருந்து ஏராளமாகப் பெற்றுக்கொள்கின்றன. காரணம், அந்நாடுகளில் பயிற்சிபெற்ற தொழிலாளருக்கு இருக்கும் பற்றாக் குறையேயாகும்.

(iii) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மூலவள ஆய்வு கள் பூரணமாக இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. மூலதனப் பற்றாக்குறையும், தொழில்நுட்பவியலாளர் பற்றாக்குறையும் தான், இதற்குக் காரணங்களாகவுள்ளன. இயற்கைவள ஆய்வு களுக்கு நவீன கருவிகள் தேவைப்படுகின்றன; விமானங்கள் தேவைப்படுகின்றன; விமானப்படங்கள் தேவைப்படுகின்றன. இன்று செய்மதிகள் மூலமும் இயற்கைவள ஆய்வுகள் மேற்கொள் ளப்படுகின்றன இலங்கையில் பெற்ரோலியம் பற்றிய ஆய்வுக ளுக்கு நாம் வெளிநாடுகளின் ஒத்துழைப்பையே நாடியுள்ளோம். மூலவள ஆய்வுகளுக்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உதவிகளைப் பெறவேண்டுவது அவசியமாகவுள்ளது.

(iv) சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வது அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் கைத்தொழிலாக்கங்களுக்கு அவசிய மாகவுள்ளது. இன்று உலக ஏற்றுமதி வியாபாரத்தில் 20 சத வீதத்திற்கும் குறைவாகவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் வகிக்கின்றன. அபிவிருத்தி யடைந்த நாடுகள் பரந்த, நிலையான சந்தைகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. அதனுல் பிரதேச அடிப்படையில் பிரதேச வாரியான ஒத்துழைப்புடன் சந்தைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அவசியமாக வுள்ளது. ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் அபிவிருத்தி ஆகியவற் றிற்குரிய ஆணைக்குழு எனப்படும் 'உங்டாட்' நிறுவனம் (UNCTAD) அத்தகையதொன்ருகும்.

## கைத்தொழிலாக்கத்தின் விளைவுகள்

கைத்தொழிலாக்கத்தின் பலாபலன்களாக உலகிற்கு பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன; அதேவேளை மனித குலத்திற் குப் பல தீமைகளும் ஏற்பட்டிருக்கின்றன. கைத்தொழிலாக்கத் திருல் மனித குலத்திற்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் வருமாறு.

### நன்மைகள்

(i) மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கின்றது. கைத் தொழில்களில் முன்னேறியுள்ள நாடுகளின் மக்கள் ஊட்டமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, போதிய உணவு, நல்ல வசிப்பிடங்கள், வசதியான ஊதியம் தரும் தொழில்கள், சமூகநலச் சேவைகள் (கல்வி, மருத்துவம், சுகாதாரம், போக்குவரத்து முதலியன) என்பவற்றைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். ஐக்கிய இராச்சியம், யப்பான் முதலிய அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவ்வாறு வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதைக் காணலாம்.

(ii) கைத்தொழிலாக்கங்கள் விருத்தியுறும்போது ஒரு நாட்டின் இயற்கை வளங்களில் இருந்து மிக உச்சப்பயன் பெற்றுக் கொள்ளப் படுகின்றது.

(iii) பெருகிவரும் சனத்தொகைக்கு வேலைவாய்ப்புகள், கைத்தொழிலாக்கங்களின் மூலமே கிடைத்துவருகின்றது.

(iv) கைத்தொழிலாக்கங்கள் விருத்தியடைவதனால் அந்த நாட்டின் பயிர்ச்செய்கையும் விருத்தியடைய வாய்ப்புண்டாகின்றது. அதனால், உணவுப் பொருட்களைப் பொறுத்தமட்டில் தன்னிறைவு தோன்றுகிறது.

(v) கைத்தொழிலாக்கத்தின் விளைவாக வெளிநாட்டு வர்த்தகம் விருத்தியடைந்திருக்கிறது. புதிய விவசாய உற்பத்திப் பொருட்களும் பரும்படியாக்கப்பொருட்களும் சர்வதேச வர்த்தகத்தில் அறிமுகமாகியிருக்கின்றன.

(vi) கைத்தொழிலாக்கத்தின் விளைவாக உலகில் நகரங்கள் தோன்றி வளர்ச்சியடைகின்றன. நகராக்கம் - கைத்தொழில் வளர்ச்சியின் விளைவாகவுள்ளது.

(vii) கைத்தொழிலாக்கத்தினால் உலகில் போக்குவரத்து வசதிகளும், கொண்டு செல்லற்சாதனங்களும், செய்தித் தொடர்பாடல்களும் விருத்தியுற்றிருக்கின்றன. அதனால், உலக மக்களிடையே கருத்துப் பரிமாறல்களும் சுமூகமான உறவுகளும் நிலவ வாய்ப்புண்டாகியுள்ளது.

## தீமைகள்

கைத்தொழிலாக்கங்களின் விளைவாக உலக சமூகம் எதிர்நோக்கும் தீமைகள் பலவாகும். அவை வருமாறு:

(i) சூழல்மாசடைதல்:- கைத்தொழில்களின் விருத்தியால் உண்டாகியுள்ள பெருந்தீமை சூழல் மாசடைதல் ஆகும். தொழிற்சாலைகள் கக்குகின்ற புகையினாலும், கழிவுகளினாலும் நிலம், நீர், வளி ஆகிய மூன்றும் மாசடைந்து போகின்றன. தொழில் நக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கள் புழுதிப்படலங்களினாலும், புகைமண்டலங்களினாலும் மூடப்பட்டுள்ளன மேற்கு ஜேர்மனியின் றூர்பள்ளத்தாக்கு புகை மண்டலத்தால் மூடப்பட்டுள்ளது. பிரான்சின் றைன் நதி, குப்பை கூழங்களின் சழிவிடமாக மாறிவருகின்றது. யப்பானின் டோக்கியோ நகர வீதிகளில் பிராணவாயுவின் அளவு குறைந்து வருகிறது. காங்கேசன்துறைச் சீமேந்துத் தொழிற்சாலைக்கு இரு மருங்கும் மக்கள் வாழமுடியாத சூழ்நிலையும், பயிர்செய்யமுடியாத சூழ்நிலையும் உருவாகிவிட்டன. இச்சுற்றுடல் தாவரங்கள் யாவும் சீமேந்துத்தூசுகளால் மூடப்பப்பட்டுள்ளன; காற்று மாசடைந்துள்ளது.

(ii) இயற்கைவளங்கள் அழிவுறுதல்:- கைத்தொழிலாக்கங்களின் விருத்தியாலும் நவீன தொழில் நுட்பவியல் விருத்தியாலும் உலகின் இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. கனிப்பொருள் வளம், நீர்வளம், தாவர விலங்குவளங்கள் என்பனவற்றை மனிதன் இன்று கூடுதலாகப் பயன்கொள்கிறான். பூமியில் மீளா வளங்கள் இருக்கின்றன. பெற்றோலியம், நிலக்கரி, செம்பு, தங்கம் முதலானவை ஒருதடவை பயன்படுத்தினால் மீண்டும் கிடைக்கப் போவதில்லை செம்பு, தகரம், ஈயம் முதலான கனிப்பொருள் உலோகங்கள் இன்று பெரும்பகுதி பயன்படுத்தப்பட்டு விட்டன: காட்டுமரங்கள் கணக்கின்றி அழிக்கப்பட்டு வருகின்றன, இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 9%- நிலமே அழிக்கப்படாத காட்டுப்பகுதியாக விளங்கிவருகின்றது. காடுகள் காணப்பட்ட பிரதேசங்கள் இன்று புற்கள் வளர்ந்து, தரிசு நிலமாகக் காணப்படுகின்றன. அதனால், காட்டு விலங்குகள் தங்க இடமின்றி அவதியுற ஏதுவாகின்றது.

(iii) வேலைவாய்ப்புக் குன்றுதல்:- நவீன கைத்தொழில்களில் பலவகையான யந்திரசாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் மனித வலுவின் உபயோகம் குறைந்துள்ளது. பல தொழிலாளர்கள் சேர்ந்து செய்து முடிக்கக்கூடிய வேலைகளை, இன்று யந்திரங்கள் செய்து வருகின்றன. மனித உழைப்பைக் கொண்டு ஆற்றக்கூடிய கருமங்களை யந்திரங்களைக் கொண்டு செய்வதால், பெருந்தொகையான மக்கள் வேலைவாய்ப்பின்றி விக்க நேருகின்றது.

(iv) அழிவுக்கருவிகள்:- தொழில் முறையியலின் வளர்ச்சியால், மனித குலத்தை அழிக்கும் போர்க்கருவிகள் அளவு கணக்கின்றி செய்யப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய மூலதனம், அழிவுநடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்குப் பயன்படுகிறது. யுத்த உபகரண உதவிகளுக்காக வருடாவருடம் 20000 கோடி அமெரிக்க டொலர், உலக வல்லரசுகளால் செலவிடப்பட்டு வருகின்றது. 1945-இல் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய யப்பானிய நகரங்களின் மீது வீசப்பட்ட அணுக் குண்டுகளுக்கு இரையாகிய மக்களின் எண்ணிக்கை $2^1/_4$ இலட்சங்களாகும். ஒருவகையில் உலக சமாதானத்திற்குப் போர்க்கருவிகளின் உற்பத்தித்தொழில் பெரும் தீமையாக இருக்கின்றது.

## நகராக்கம்

கைத்தொழிலாக்கத்தின் தவிர்க்கமுடியாத ஒரு விளைவாக நகராக்கம் காணப்படுகின்றது. அண்மைக்காலத்தில் உலகில் நகரங்கள் மிக வேகமாகப் பெருகி வருகின்றன. நகரங்களின் எண்ணிக்கையில் மாத்திரம் அதிகரிப்புக் காணப்படவில்லை. நகரங்களின் அளவுகளும் அதிகரித்துவருகின்றன. கைத்தொழிற் புரட்சியின் பின்னரே, உலகில் நகராக்கம் வேகமாக ஏற்பட்டது.

1760- ஆம் ஆண்டில், கைத்தொழிற் புரட்சியின் ஆரம்பத்தில், உலக சனத்தொகையில் 10 சத வீதத்தினரே நகரங்களில் வாழ்ந்தனர். 1960- ஆம் ஆண்டளவில் உலக மக்களில் 25 சத வீதத்தினர் நகர மக்களாக வாழ்ந்தனர். (சுமார் 70 கோடி மக்கள்). 1970- ஆம் ஆண்டில் 40 சத வீதமக்கள் நகரங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கைத்தொழிலாக்கங்கள் முன்னேறியுள்ள நாடுகளில், நகரங்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் 80 சத வீதத்தினரும், மேற்கு ஜேர்மனியில் 76 சத வீதத்தினரும், ஐக்கிய அமெரிக்காவில் 70 சத வீதத்தினரும் நகர மக்களாவர். சோவியத் சமவுடைமைக் குடியரசில் 58 சத வீதத்தினர் நகரமக்களவர். யப்பானில் 72 சத வீதத்தினர் நகரங்களில் வாழ்கின்றனர். தென்னாபிரிக்காவில் 48 சத வீதத்தினர் நகர மக்களாவர்.

நகரங்களின் தோற்றத்திற்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் கைத்தொழிற் புரட்சியே தலையாய காரணமாகும். கைத்தொழிற் புரட்சியின் விளைவாகத் தோன்றிய யந்திரசாதனங்கள், விவசாயத்திலும் பயன்படுத்தப்பட்டதால் ஆயிரக்கணக்கான விவசாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வேலையிழந்தனர். அதேவேளை சிறிய நகரங்களில் தோன்றி தொழிற்சாலைகளால் வேலைவாய்ப்புகள் அதிகரித்தன. அதனுல், சுற்றுடல் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் நகரங்களை நோக்கிக் குடிபெயர்ந்தனர். போக்குவரத்து வசதிகள் அதிகரித்தமையால், தொலை விடங்களில் இருந்தும் மக்கள் நகரங்களில் குடியேறினர். கிராமங்களில் போதிய விளை நிலம் இல்லாமை, விளைச்சல் குறைதல் காரணமாக வருவாய் குறைதல், குறைவான வாழ்க்கை வசதிகள் தாமும் கிராமங்களில் கிடையாமை, கிராமங்களைவிட நகரவாழ்க்கை செழிப்பானது என்ற எண்ணம் என்பன காரணமாகக் கிராம மக்கள், நகரங்களை நோக்கிக் குடியேறினர். இவை காரணமாக நகரங்கள் வளர்ச்சியுற்றன.

இலத்தின் அமெரிக்க நாடுகளின் நகராக்க வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. 1940-இல் இலத்தீன் அமெரிக்காவில் பத்திலட்சம் மக்களைக்கொண்ட நகரங்கள் நான்கு இருந்தன. ஆனுல், இன்று 12 உள்ளன. புவனஸ் அயர்ஸ், ரியோடி-ஜெனீரோ, சாவோலோ, மெக்சிக்கோநகர் என்பன பெரு நகரங்கள் ஆகும். ஆபிரிக்காக் கண்டத்தில் நகரமக்கள் வீதம் குறைவாகும். கெய்ரோ, அலெக்சாந்திரியா, கஸாபிளாங்கா, லாகோஸ், கின்ஷாஷா, ஜோகனஸ்பேர்க் என்பன குறிப்பிடத்தக்க நகரங்களாகும். தென்னுசியாவில் ஏறத்தாழ 18 சதவீத மக்களே நகர மக்களாவர். பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை, பெங்களுூர், ஹைதராபாத் என்பன குறிப்பிடத்தக்க நகர மையங்களாகும். சீனுவில் பீக்கிங், லூ-டா (LU-TA), சியான், லான்சௌ என்பன துரிதமாக வளர்ச்சியடைந்துள்ள நகரங்களாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நகர மக்கள் குறைவு. பாங்கொக், சிங்கப்பூர், ரங்கூன் என்பன குறிப்பிடத்தக்க நகரங்கள். சிங்கப்பூரில் 100 சத வீத மக்களும் நகரமக்களாவர், என்பது கவனிக்கத்தக்கது.

நகரங்களில் மக்கள் தொகை விரைவாகப் பெருகுகின்றது. ஆனுல் வதிவிடவசதிகள், தொழில்வாய்ப்புகள், சேவைவசதிகள் ஆகியன பெருகுவதில்லை. வேலையில்லாமை, குறைந்த வருவாய், வதிவிடவசதியின்மை என்பன காரணமாக நகரப்புறங்களில் சேரிகள் உருவாகின்றன. கல்விவசதி, சுகாதார, மருந்துவ வசதிகள் சரிவர யாவருக்கும் வழங்குவது சிரமமாகின்றது. நகரங்கள் அசுத்தமடைகின்றன. மக்களின் ஆரோக்கியம் பாதிப்படைகின்றது. எனவே, நகராக்கம் மனிதனின் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிப்பதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் மாசடைதல்

நமது சூழல் மாசடைந்து வருவதை நாம் முக்கியமாக மூன்று நிலைமைகளில் அவதானிக்கலாம். அவையாவன:

(அ) வளி மாசடைதல்
(ஆ) நிலம் மாசடைதல்
(இ) நீர் மாசடைதல்

### வளி மாசடைதல்

தொழில் நுட்பவியல் வளர்ச்சியால் உலகம் எதிர்நோக்குகின்ற மிகப் பிரதான பிரச்சினை, வளி மாசடைதலாகும். ஓரிடத்தில் வளி மாசடைந்தால், உலகமெங்கனும் மிக்க வேகமாக அது பரவி விடுகின்றது குடிசனம் அதிகரிக்க அதிகரிக்க, நாடுகள் கைத்தொழிலாக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இன்று இயங்கிவருகின்ற ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள், ஓயாது புகைமண்டலத்தை வளியுடன் கலக்கின்றன.

வானத்தில் பறக்கின்ற ஜெட் விமானங்கள், விமானங்கள் முதலிய வானூர்திகள் வானின் முகிற்கூட்டத்தின் இயற்கை நிலையைக் கலைத்து விடுகின்றன: அதனால் காலநிலை பாதிப்படைகின்றது. நகரங்களில் டீசல், பெற்ரோல் முதலான எரிபொருட்களை எரித்தபடி, புகையைக் கக்கியவாறு விரைகின்ற கோடிக் கணக்கான மோட்டார் வாகனங்களும் வளியை அழுக்கடைய வைக்கின்றன. உதாரணமாக, யப்பான், வீதிகளில் சுவாசிப்பதற்குப் போதிய சுத்தமான வளி இல்லை; அதனால், வீதிச் சந்திகளில் ஒட்சிசன் சிலிண்டர்க்களை மக்களுக்காக வைத்துள்ளார்கள்

தொழிற்சாலைப் புகையே வளி மாசடைவதற்கு மூலகாரணமாகும். வட இங்கிலாந்து, வட ஐரோப்பிய நாடுகள், யப்பான் என்பனவற்றில் தொழிற்சாலைகளினால் வளிமண்டலம் மாசடைந்திருப்பது மிக அதிகமாகும். பல தொழிற்சாலைகள் நஞ்சுத் தன்மைவாய்ந்த புகைகளையும், தடித்த புகைகளையும் வளிமண்டலத்துக்குப் புகைபோக்கிகள் மூலம் அனுப்புகின்றன. தொடர்ந்து இது நிகழ்வதால் அப்புகை இலகுவில் நீங்குவதில்லை; மேற்கு ஜேர்மனியின் றூர் பள்ளத்தாக்கு உதாரணமாகும். ஏராள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான தொழிற்சாலைகள் இருக்கின்ற பிரதேசங்களில் வளி, புகை நிறமாகவே மாறிவிடுகின்றது. அதனால் தாவரங்களும், மிருகங்களும் அதிகம் பாதிக்கப்படுகின்றன; மனிதனின் ஆரோக்கியமும் கெடுகின்றது. புகாருடன் புகையும் சேரும்போது சுவாசிப்பது கஷ்டமாகின்றது. வயோதிபர்களும் பலவீனமான நுரையீரலுடையவர்களும் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள். அசுத்தமான காற்றைச் சுவாசித்ததால் மரணமடைந்தோரும், நீண்டகாலம் நோய்வாய்ப்பட்டவர்களும் உலகில் அதிகமாவர்.

பெரிய நகரங்கள் உருவாகி வருகின்றன. தொழில்வாய்ப்புகள் அங்கு இருப்பதனால் மக்கள், அந்நகரங்களில் சென்று குவிகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் 70% மக்கள் நகர மக்களாவர். அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 2% நிலமே நகரங்களாகும். இதனால் இடநெருக்கடி, சுகாதாரக்கேடு முதலியன உருவாகின்றன. நகரச் சுற்றுடலில் தாவரங்கள் அழிவுற்று, 'கொங்கிறீற்' கட்டிடங்களே தோன்றுகின்றன. உயிர்ச்சூழலியல் பாதிப்புறுகின்றது.

வளியிலுள்ள அழுக்குகள் மழைநீருடன் கலந்து நீரையும், நிலத்தையும் மாசடைய வைக்கின்றன. மழைநீர் குடிநீர்த் தேக்கங்களில் இத்தகைய அழுக்குகளைச் சேர்த்துவிடுகின்றது வளி மாசடைதலால் மரங்கள் அழிவுறுகின்றன. மாசடைந்த புற்களைத் தின்ற பசுக்களின் பாலைக் குடிக்கும் மனிதன் பாதிக்கப்படுகின்றான். மாசடைந்த புற்களைத் தின்ற பூச்சிகளைத் தின்னும் பறவைகள் பாதிப்படைகின்றன. இங்கிலாந்தில் பெட்போட் நகரத்தில் தொழிற்சாலைகளிலிருந்து வந்த புகை வளியுடன் கலந்து சுற்றுடலிலுள்ள பசுபச்சைகளை முற்றாக அழித்துவிட்டது குறிப்பிடத்தக்கது. மேலும், மத்திய ஐரோப்பிய தொழிற்சாலைகளிலிருந்து காற்றினால் காவிச் செல்லப்படும் தொழிற்சாலைப் புகை, ஸ்கண்டிநேவியாவைப் பாதிக்கின்றது. அணுக்குண்டுகள் பரீட்சார்த்தமாக வெடிக்கப்படுவதனால் துளியில் ஏராளமான நசுப் பொருட்கள் கலக்கின்றன.

நாங்கள் உயிர்வாழ்வதற்கு வளி தேவை; அந்த வளி இயற்கையான சுத்த வளியாகவும், போதிய ஒட்சிசன் உடையதாகவும் இருக்கவேண்டும். புவியின் உயிர்வர்க்கம் யாவற்றிற்கும் வளி தேவை. அத்தகைய வளியை நாம் மாசடையச் செய்க்கில், புவியில் உயிரினங்கள் வாழமுடியாத சூழலை உருவாக்கிவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலம் மாசடைதல்

நிலமே எங்களது இயற்கை வளங்களில் முதன்மையானது. ஆண்டிற்காண்டு அதிகரிக்கின்ற மக்கள் தொகைக்கு உணவூட்டுவது நிலமேயாகும். அதனால் ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதற்காகப் பல்வேறுவகையான பசளைகளையும், கிருமி நாசினிகளையும் மனிதன் இன்று உபயோகிக்கத் தொடங்கியுள்ளான். இந்த இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் என்பன மண்ணிலுள்ள பூச்சி புழுக்களை அழித்துவிடுகின்றன. இப்பூச்சி புழுக்களைத் தின்று வாழ்ந்த மீன் கொத்திகள், நெற் குருவிகள், நாரைகள் முதலியன அதனால் பாதிப்படைந்துள்ளன. மண்ணில் புழுக்கள் புரள்வதால், வளி நிலத்துட்போக வசதி இருக்கிறது. மலர்களிலிருந்து தேனை உறிஞ்சும் தேனீக்கள் மூலம் மகரந்தச் சேர்க்கை ஏற்பட்டு மரஞ்செடிகளிற் காய்கனிகள் உண்டாகின்றன. கிருமிநாசினிகளால் தேனீக்களின் தொகையும் குறைகின்றது. இதனால் எதிர்காலத்தில் மரஞ்செடிகளில் இருந்து பெறக் கூடிய பயனும் குறையலாம்.

மண்ணைக் கூடுதலாகவும் அதிகமாகவும் நாங்கள் இன்று பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துகின்றோம். அதனால் மண்ணின் வளம் குறைந்து போகின்றது. காடுகள், புல்வெளிகள் என்பன மனிதரால் அழிக்கப்பட்டு வருகின்றன. அதனால் அவற்றில வாழ்கின்ற பூச்சிகள், பறவைகள், விலங்குகள் அழிவுறுகின்றன. மேலும், மண்ணின் இயற்கையான வளத்திறகுதவும் இலை மக்கு இல்லாது போகின்றது. தாவரப்போர்வை நீக்கப்பட்ட மண், விரைவில் மண்ணரிப்பிற்குள்ளாகி விடுகின்றது. அதனால், காலகதியில் அப்பிரதேசம் எதுவுமே வளரமுடியாத பாலைநிலமாகி விடுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில மத்திய பிரதேசம், வட இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் மனிதனால் ஆக்கப்பட்ட இத்தகைய பயனற்ற நிலங்களைக் காணலாம். இலங்கையின் சேனைப் பயிர்ச் செய்கையால், பல நிலங்கள் வளமற்றுப் போயிருக்கின்றன. அந்நிலங்கள் மண்ணரிப்பிற்குள்ளாகி, தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கிருமிநாசினி தெளித்தல் ஹெலிகொப்டர்கள் மூலம் நடைபெற்று வருகின்றது அதனால், ஏராளமான பூச்சியினங்கள் அழிவுறுவதுடன், இப்பூச்சிகளை இயற்கையாகவே அழிக்கின்ற பறவைகளும அழிந்துபோகின்றன. இந்த நச்சுக் கிருமிநாசினி தெளிக்கப்பட்ட பூச்சிகளைப் பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்கின்றன. தாவரங்களை மிருகங்கள் உண்கின்றன. அவற்றின் பயன் மனிதனால் நுகரப்படுகின்றது. அதனால் மனிதன் தனக்கே நஞ்சிட்டுக் கொள்வதாக இருக்கின்றது. டி. டி. ரி. என்ற கிருமி நாசினி கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால், இன்று இருபது ஆண்டுப்பின்னர், டி. டி. ரி. யைப் பயன் படுத்தக்கூடாது எனப் பல நாடுகள் தடைவிதித்துள்ளன. காரணம், சூழல் மாசடைதலேயாகும். வட அமெரிக்காவில் இக் கிருமிநாசினியால் பறவைகளின் முட்டைகள் குஞ்சு பொரிக்க வில்லை. மேலும், பயிர்களுக்குத் தெளிக்கப்படுகின்ற கிருமிநாசினி கள் அப்பிரதேசத்தில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. காற்றுடன் கலந்து ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுகின்றது. செயற்கை உரங் களும் நச்சுக் கிருமிநாசினிகளும் உபயோகித்து விளைந்த உணவு களையே நாங்களும் பயன்படுத்தி வருகின்றோம்.

நகரப்புறங்களில் குப்பை கூளங்கள், கழித்துவிட்ட பொருட் கள் என்பன குவிகின்றன. அவை வேறு சுகாதாரக் கேடுகளை உருவாக்குகின்றன.

## நீர் மாசடைதல்

புவியில் நீரின் அத்தியாவசியம் ஒவ்வொரு சிறு செயலிலும் உணரப்படுகின்றது. புவியின் உயிரினங்கள் யாவும் நீரின்றேல் உயிருடன் இருக்கா. நாங்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் யாவற்றிற்கும நீர் இன்றியமையாதது. கடலிலிருந்து நாம் அதிக உணவைப் பெறுகின்றோம். அசுத்த நீர் கடலில் சேர்வதால் கடல் நீர அசுத்தமாகின்றது. கடலோரத்தில அமைந்த தொழிற் சாலைகளினாலும் கடற் போக்குவரத்தின்போது கடலில் ஆழ்ந்து போகும் எண்ணெய்க் கப்பல்களினாலும் கடல நீர் அசுத்தமடை கின்றது. 1967-இல் ரோறே கன்யோன் என்ற எண்ணெய்க்கப் பல், கோன்வோல் அருகில் மூழ்கியதால். பரவிய எண்ணெயால் ஆயிரக்கணக்கான கடற்பறவைகள் அழிந்துபோயின. இன்று சமுத்திரங்களில் எண்ணெய்க்கிணறுகள் தோண்டப்பட்டு, பெற் றோலியம எடுக்கப்படுகின்றது. அதனால் இன்று ஏறத்தாழ 20,000 கலன எண்ணெய் கடல் நீருடன் ஒவ்வொரு நாளும் கலக்கின் றது. இந்த எண்ணெய் நீரோட்டங்களினால் எல்லா இடங்களுக் கும எடுத்துத் செல்லப்படுகின்றது. கடல் நீர் மாசடைவதால், டோலபின், சில போன்ற கடல உயிர்கள் ஏராளமாக அழிவுறு கின்றன. மீன் வர்க்கம் பாதிப்புறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் அசுத்தக் கழிவுகள் யாவும் நதிகளில் கலக்கவிடப்படுகின்றன. துப்புரவான நதிகளின் நீர், இந்த அசுத்தங்களினால் மாசடைகின்றது. ரைன் நதி இன்று குப்பை கூழங்களின் தொகுதியாகப் பாய்கின்றது. இன்று இத் தகைய நதிகளின் நீரை உபயோகிப்பது பல்வேறு ஆபத்துக்களை விளைவிக்கின்றது. மேலும், நிலத்தில் கலக்கப்படும் இரசாயன உரங்கள் ஏரிகளிலும், குப்பைகளிலும், நதிகளிலும், முடிவில் கடலிலும் கலந்துவிடுகின்றன. இதனால் நீர்வாழ் தாவரங்கள், மீன்கள் அழிகின்றன. பூச்சிக்கொல்லியாக டி. டி. ரி. பூச்சிகளை அழிப்பதோடல்லாமல் பெருமளவுக்கு மீன்களுக்கு ஊறுவிளைவிக் கின்றது. இந்த டி. டி. ரி. பயன்படுத்துமிடத்தில் இருந்து, வெகு தூரம் வரை பரவி விதைகளிலும் உயரமான இடங்களிலும், அந்தாட்டிக்காவில் வாழும் பென்குவின் பறவைகளிலும் இருக்கக் காணலாம். இவை நீர் மாசடைவதாலேயே ஏற்பட்ட கேடுகளா கும். யப்பானில் மினிமற்றுக்கோவில், பாதரசம் கலந்து நீர் மாசடைந்ததால், அதில் வாழ்ந்த மீன்களைத் தின்ற மக்களும் பூனைகளும் இறந்தனர்.

இவ்வாறு நவீன தொழில் நுட்பவளர்ச்சியால் வளி, நிலம், நீர் என்பன மாசடைந்து வருகின்றன. அதனால் உயிரினங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

எனவே சூழல் மாசுபடுவதால் மனித வர்க்கத்திற்கு வந்து றுகின்ற பாதகவிளைவுகள் பின்வருமாறு:

(அ) சூழல் மாசுபடுவதால் நீரியல் வட்டம், நைதரசன் வட் டம் என்பன பாதிக்கப்பட்டு வானிலை காலநிலைத் தோற்றப்பாடு கள் மாறுதலடைகின்றன. உதாரணமாக தொழிற்சாலைகளில் எரிக்கப்படுகின்ற எரிபொருட்களால் வளிமண்டலத்தில் காபன் டி ஒக்சைட்டின் அளவு அதிகரித்து வருகின்றது. இது வெப்ப நிலையைப் புவியில் அதிகரிக்க வைக்கும்.

(ஆ) மனித வர்க்கத்தின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. உதாரணமாக யப்பானிய நகரங்களில் ஒக்சியன் சிலிண்டர்கள் வீதிச்சந்திகளில் இருக்கின்றன. மோட்டார் வாகனங்களின் அதி கரிப்பினாலும் சனநெருக்கத்தினாலும் தாவர அழிவினாலும் மனி தர்கள் அங்கு மூச்சுமுட்டிக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இந்த ஒக்சியன் சிலிண்டர்கள் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பல்வகை நோய்கள் பரவுகின்றன. சூழலின் சமநிலை குலைவதால் புதிய நோய்கள் பல தோன்றுகின்றன. ஊனப்பிறவிகள் கருவில் உருவாக ஏதுவாகின்றது.

(ஈ) மனிதருக்கு உதவுகின்ற தாவர விலங்கினங்கள் அருகி வருகின்றன.

## இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

பூமியின் இயற்கைச் சூழலை நாம் மாற்ற முயன்று வருகின்றோம். வலிமையான மனித இனம், தொழில் நுட்பவியலின் துணையுடன், பூமியின் ஏனைய உயிரினங்கள் யாவற்றையும் ஆக்கிரமித்துள்ளது. நாம் இயற்கையின் சமநிலையைக் குலைத்து, ஏராளமான விலங்குகளை வேட்டையாடி அழித்து வருகின்றோம். காடுகளை அழித்து வருகின்றோம். இயற்கையின் தாவர விலங்கின உணவுச் சங்கிலித்தொடர்பை நாம் அழித்துவருகின்றோம். இந்த அழிவை நாம் தடுக்கவேண்டும். இயற்கையின் சூழலைப் பாதுகாக்கவேண்டும். அதற்கு முதல் வழி, மீளவனமாக்கலாகும். புகலரண்களில் விலங்குகளைப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

தொழிற்சாலைகள், புதிதாகத் தோன்றுவது கட்டுப்படுத்தப்படவேண்டும்; வளி அசுத்தமடையாது தடுப்பதற்கு விஞ்ஞானிகள் வழிகாண வேண்டும். தொழிற்சாலை அசுத்தங்களை நதிகளில் வடிய விடக்கூடாது. செயற்கை உரங்களையும் கிருமிநாசினிகளையும் திட்டமிட்ட முறையில் பயன்படுத்தவேண்டும். நிலத்தின் அடியில் இருந்து எடுக்கப்படும் கனிப்பொருட்களை அளவுகணக்கின்றி, கொள்ளையிட்டு முடித்துவிடக்கூடாது. மனிதனின் செயலாலே மனிதன் அழிவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. சூழல் அழுக்கடைதல் தற்கால மக்களையும் வருங்காலச் சந்ததியினரையும் பாதிக்கக்கூடிய பேராபத்துடையது. வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும்.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதென்று வருங்காலத்தவருக்கு நாம் செய்யும் முதலீட்டை ஒத்தது. இவ்வுலகில் ஒவ்வொரு 35 ஆண்டுகளில் மக்கள் தொகை இரட்டிப்பு நிலையை அடைகின்றது. இந்த நிலையில் வளங்களைப் பாதுகாத்தல் நீண்டகாலத்திற்குப் பெரும்பான்மையோருக்குப் பெரும் நன்மையைப் பயக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பூமியின் வளங்களால் இன்புறவும், அதனை வருங் காலச் சந்ததியினருக்காகப் பாதுகாத்தலும் மனிதனுடைய கடமையென்று புரிந்து ஒழுகுவது அவசியமாகும். இயற்கையின் அமைப்பில் உள்ள வளங்களை எவ்வாறு விருத்தியடையச்செய்தல், எந்தெந்தப் பயன்களின் அடிப்படையில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளல், எவ்வாறு அவற்றை அழிக்காமல் காப்பது என்பனவற்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: ஆறு

# உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல்

இன்றைய உலகில் எந்த ஒரு நாடும் தனித்து வாழவே முடியாது. மக்களிடையே பிரிவினை மனப்பான்மை அருகி வருகின்றது. மனித சமூகம் முழுவதும் ஒரே குறிக்கோளான 'நல்வாழ்வை' அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. வேறுபாடுகள் படிப்படியாக அருகி, ஒன்றுபட்டு வரும் ஒரு உலகிலேயே நாங்கள் இன்று வாழ்ந்துவருகிறோம்.

## பிரதேசவாதம்

பண்டைய மக்களின் தேவைகள் குறைவாக இருந்தன. அவர்கள் வேட்டையாடியும், காய்கனிதேடியும், மந்தைமேய்த்தும், மீன்பிடித்தும் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டார்கள். அவர்கள் சிறுசிறு சமூகங்களாகத் தனித்து வாழ்ந்தார்கள். அவர்களின் சமூக நலனே அவர்களுக்குப் பெரிதாக இருந்தது. போக்குவரத்துப் பாதைகளும் சாதனங்களும் குறைவான காலகட்டத்தில், சமூகங்களுக்கு இடையிலான தொடர்பு, கருத்துப்பரிமாறல் என்பன மிகவும் அரிதாக இருந்தது. சமூகக் குழுக்கள் எண்ணிக்கையில் பெருகி, நாடுகள் தோன்றின. அவ்வேளைகளிலும் ஏனைய நாடுகளுடன் தொடர்பு குறைவாக இருந்ததால், பிரதேச உணர்வே மேலோங்கி இருந்தது. 'நமது பிரதேசம், நமது நாடு, நமது மக்கள்' என்ற தனித்துவ சுய உணர்ச்சி மேலோங்கி விளங்கியது.

தேசிய உணர்ச்சி (Nationalism), பிரிவு உணர்ச்சி (Sectionalismn), குறுகிய உணர்ச்சி (Parochialism) என்பன யாவும் பிரதேச உணர்ச்சியை (Regionalism) உருவாக்குகின்றன. தாம் வாழ்கின்ற நாட்டின் மீது ஏற்படுகின்ற பற்றுதலும் அதன் விளைவாக ஏற்படுகின்ற பெருமிதமும் தேசிய உணர்ச்சியை ஏற்படுத்துகின்றன; நமக்கு இடையில் இருக்கின்ற இன, மொழி, மத வேறுபாடுகளை மறந்து, நாம் யாவரும் இலங்கையர் என்ற உணர்ச்சி தேசிய உணர்ச்சியாகும். இன அடிப்படையில் ஏற்படுவது பிரிவு உணர்ச்சியாகும். தமிழர், சிங்களவர், சீனர், வெள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையர், ஆபிரிக்கர் என்ற அடிப்படையில் மக்களை வகுப்பதும் உணர்வதும் பிரிவு உணர்ச்சியின் பாற்படும், நிற அடிப்படையில் வெள்ளையர்-கறுப்பர் என்று பாகுபடுத்துவதும்; மத அடிப்படையில் பௌத்தர், இந்துக்கள், கிறித்தவர், இஸ்லாமியர் என பாகுபடுத்துவதும்; மொழி அடிப்படையில் ஆங்கிலேயர், பிரான்சியர், சிங்களவர், தமிழர், மலையாளிகள் எனப்பாகுபடுத்துவதும்; அவ்வாறான உணர்ச்சியில் பெருமைப்படுவதும் குறுகிய உணர்ச்சிகளாகும். பிரிவு உணர்ச்சியும், குறுகிய உணர்ச்சியும் சகிப்புத் தன்மையற்ற போக்கு, தன் இடத்தைப்பற்றிய உயர்ந்த மனப்பான்மை, கடந்தகாலப்பெருமையில் திளைத்தல், உலகின் ஏனைய மக்கள்பற்றிய அறியாமை போன்றனவற்றால் ஏற்படுகின்றன.

'பிரதேச உணர்ச்சியானது பரந்த தேசிய ஒற்றுமை, தேசிய நலம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது.' என ஹின்ட்ஸ் (HINTZ) என்பவர் கூறியுள்ளார். பிரதேச உணர்ச்சியானது தேசிய ஒருமைப்பாட்டைக்காக்கின்றது. பிரதேச உணர்ச்சி கூட்டுறவை முக்கியமாகக் கொண்டது. ஆனால், பிரிவு உணர்ச்சி போட்டிக்கு முக்கியம் கொடுக்கிறது.

நவீன உலகின் சமூக, பொருளாதார அமைப்பில் பிரதேசவாதம் தன் முக்கியத்துவத்தைச் சிறிது இழந்து வருகின்றது. வளங்களும் இதர பொருள்களும் பூமியில் சமசீரற்றுப் பரவியுள்ளன. இதனால் தற்காலத்தில் உலகநாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. உலகில் வாழும் மக்கள் எத்தனை விதமானவராகக் காணப்படுகின்றனரோ அத்தனை விதமான வேறுபாடுகளை உலகம் கொண்டுள்ளது. ஆனால், இன்று ஒன்றையொன்று சார்ந்த நிலை உலகநாடுகளை இணைக்கும் சக்தியாக விளங்குகிறது. இதனால் தற்காலத்தில் ஓர் உலகக் கோட்பாடு உருப்பெற்றுள்ளது. உலக நாட்டுமக்கள் யாவரையும் சமமாகச் சீர்தூக்கி, ஒருநாட்டிற்கு ஒரு நாடு உதவி செய்து வாழ்ந்து உயரவேண்டும் என்ற மனப்பாங்கு இன்று தோன்றியுள்ளது.

## சர்வதேசவாதம்

இன்று உலகம் 'சுருங்கி'விட்டது. பண்டைநாளில் ஓரிடத்தில் இருந்து, இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு எடுத்த நாட்கணக்கான, சிரமமான, பிரயாணங்கள் இன்று, போக்குவரத்து வசதிகளாலும் சாதனங்களாலும் இலகுவானதாகிவிட்டன. வீதிகள், கப்பல்கள், விமானங்கள் என்பன இன்று உலகத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கிவிட்டன. அதனால், நாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் அதிகரித்துள்ளன; கருத்துப்பரிமாறல்களும் பரஸ்பர உதவிகளும் உருவாகியுள்ளன.

மக்களது தேவைகளும் இன்று அதிகரித்துள்ளன. அதனால், உலகநாடுகள் இடையே வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் வளர்ந்துள்ளன. உலகநாடுகள் யாவும் வர்த்தகமுறை ஒன்றினால் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு நாடு எளிதாகவும் இலகுவாகவும் பெருந்தொகையில் உற்பத்தி செய்யும் ஒரு பொருள், அப்பொருளைப்பெற விரும்பும் நாடுகளுக்கு விற்கப்படுகின்றது. சர்வதேசவர்த்தகத்தினால் உலகநாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல்புலனாகும்.

உலகநாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதற்கும், நல்லுறவுகளை வளர்த்துக்கொள்வதற்கும் பின்வரும் 'உலக ஒத்துழைப்புகள்' உதவிவருகின்றன.

1. உலக ஒத்துழைப்புக்கான சர்வதேச நிறுவனங்கள்.
2. பொருளாதார ஒத்துழைப்பிற்கான பிரதேசவாரியான நிறுவனங்கள்.
3. வெளிநாட்டு உதவிகள்

## சர்வதேச நிறுவனங்கள்
## ஐக்கிய நாடுகள் தாபனம்

உலகத்தில் போர் ஏற்படாமல் தடுத்து நாடுகளிடையே நட்புறவை வளர்ப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு சர்வதேச நிறுவனம் ஐக்கியநாடுகள் தாபனம் (UNO—UNITED NATIONS) ஆகும்: முதலாம் உலக மகாயுத்தத்தில் பல இலட்சம் மக்கள் மாண்டனர். இனிமேல் அத்தகைய ஒரு யுத்தம் வராமல் தடுக்க வேண்டுமென உலகநாடுகள் கருதின. தகராறுகளைச் சமரசமாகத் தீர்ப்பதே சிறந்த வழி என உணர்ந்தன. இந்த நாடுகள் ஒன்றுகூடி முதலில் சர்வதேச சங்கம் என்னும் ஓர் அமைப்பை நிறுவின. ஆனால், இந்தச் சங்கத்தில் அங்கம்வகித்த நாடுகள் அதனை மதிக்காமல் நடந்தன. அதனால் விரைவில் அச்சங்கம் செயலிழந்தது. மீண்டும் 1935—இல் இரண்டாம் உலகமகாயுத்தம் ஏற்பட்டு நாசம் விளைந்தது. இத்தகைய இன்னொரு யுத்தம் உலகில் ஏற்படக்கூடாது என உலகநாடுகள் விரும்பின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலகயுத்தம் முடிவடைவதைக்கண்ட உலகமக்கள் நிரந்தரமான அமைதி நாடுகளில் நிலவச் செய்யவேண்டும் என்பதற்காக, சர்வதேச சங்கம் போன்ற ஒரு தாபனத்தை நிறுவ வேண்டுமென 1944—1945—ஆம் ஆண்டுகளிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'பெருமூவர்' எனப் பெயர்பெற்ற ஜனாதிபதி பிராங்லின் றூஸ்வெல்ற், மார்ஷல் ஸ்டாலின், பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் ஆகியோர் இந்தத் தாபனத்தை நிறுவ அயராது உழைத்தவர்களாவர். இவர்கள் போர்கள் எழாது தடுக்கவும், தேசங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஏற்றதாக இத் தாபனத்தை அமைக்கும் அதே வேளை, எல்லா நாடுகளையும் இதில் அங்கத்துவ நாடுகளாக்க முற்பட்டார்கள். தூரகிழக்கில் போர்முடிவடையும் முன்னரே ஐக்கியநாட்டுச் சாசனம் எழுதப்பட்டு, 51 அங்கத்துவ நாடுகளின் கையொப்பத்தையும் பெற்றுவிட்டனர். 51 அங்கத்துவ நாடுகளுடன் 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ம் திகதி இந்தத் தாபனம் அமைக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது.

இது சர்வதேச சங்கத்தின் நோக்கங்களிலும் பார்க்கக்கூடியளவு பரந்த நோக்கம் கொண்ட புதிய சர்வதேச அமைப்பாகும் இது வெற்றியடைந்த நாடுகளின் ஆதரவுடன் நிறுவப்பட்டது. இதன் நோக்கங்கள வருமாறு:

1. சமாதானத்தை உலக நாடுகளிடையே பாதுகாப்பது மட்டுமன்றி வறுமையை உலகிலிருந்து அகற்றுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. போர்கள் நாடுகளிடையே எழுவதைத் தடுக்கும் அதேவேளை, போரினால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து மக்களைக் காப்பதும், சமாதானமும் பாதுகாப்பும் உலக நாடுகளிடையே நிலையாக நிலவ வழிவகுப்பதும், இதன் அரசியல் சம்பந்தப்பட்ட கொள்கையாகும்.

2. பொருளாதார முன்னேற்றம் காண்பது இதன் மற்றொரு நோக்கமாகும். உலக நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கும், உலக மக்களது வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் வேண்டிய உதவிகளைப் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் மூலம் ஆவன செய்தல், இதற்கென சர்வதேச நிறுவனங்களை நிறுவித் தனது நோக்கங்களை நிறைவேற்றுதல் இதன் நோக்கம்.

3. மனித அடிப்படை உரிமைகளை வரையறுத்து அவற்றை பிரகடனப்படுத்தி, உலக நாடுகளைக் கடைப்பிடிக்கச்செய்து, ஒவ்வொரு பிரஜையும் தனது உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிக்க செய்வதும், உலக நாடுகளிடையே நீதியை நிலைநாட்டுவதும் இதன் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல நாடுகளினதும் சம்பிரதாயங்களையும், சர்வதேச சட்டக் கோவையையும் அடிப்படையாகக் கொண்டு இத்தாபனத்தின் அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதனை ஐக்கிய நாடுகள் சாசனம் என வழங்குவர். இதன் அங்கத்துவ நாடுகள் இச் சாசனத்தையே கடைப்பிடிக்க வேண்டுமென்பதும் இதன் நோக்கமாகும் இச்சாசனத்தை உலக சட்டக்கோவை எனவும் கருதலாம்.

51 அங்கத்துவ நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சபையில் இன்று 140 அங்கத்துவ நாடுகள்வரை அங்கத்துவம் வகிக்கின்றன. இது பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூகநலக் கழகம், நம்பிக்கைப்பொறுப்புச் சபை, சர்வதேச நீதிமன்றம், தலைமைசெயலகம் என்ற பிரிவுகளைக் கொண்ட அமைப்பாகும்.

---

ஐக்கிய நாடுகள் தாபனத்திலுள்ள அங்கத்துவ நாடுகள்:

1. ஐக்கிய அமெரிக்கா.
2. ஐக்கிய இராச்சியம்.
3. சோவியத் சமவுடைமைக் குடியரசு.
4. ஆசெந்தினா.
5. அவுஸ்திரேலியா.
6. பெல்ஜியம்.
7. பொலிவியா.
8. பிரேசில்.
9. பைலோருசியா (S. S, R.) (Byelorussian)
10. கனடா.
11. சிலி.
12. கொலம்பியா.
13. கொஸ்ராறிக்கா.
14. கியூபா.
15. செக்கோசிலாவிக்கியா.
16. டென்மார்க்.
17. டொமினிக்கன்குடியரசு
18. ஈக்குவடோர்.
19. எகிப்து.
20. எல் சல்வடோர்.
21. எதியோப்பியா.
22. பிரான்ஸ்.
23. கிரீஸ்
24. குவாட்டமாலா.
25. ஹயிற்றி (Haiti)
26. இந்தியா.
27. ஈரான்.
28. ஈராக்.
29. லெபனன்.
30. லைபீரியா.
31. லக்சம்பேர்க்.
32. மெக்சிக்கோ.
33. நெதர்லாந்து.
34. நியூசிலாந்து.
35. நிக்காராகுவா.
36. நோர்வே.
37. பனமா.
38. பராகுவே.
39. பேரு.
40. பிலிப்பைன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. போலாந்து.
42. சவுதி அரேபியா.
43. தென் ஆபிரிக்கா.
44. சிரியா.
45. துருக்கி.
46. உக்கிரேன் (S. S. R.) (Ukaririan)
47. உருகுவே.
48. வெனெசுவெலா.
49. யூகோசிலாவியா.
50. கொண்டுறஸ்.
51. அப்கானிஸ்தான்(1946)
52. அல்பானியா(1955)
53. அல்ஜீரியா(1962)
54. அங்கோலா(1976)
55. ஆஸ்திரியா(1955)
56 பகாமாஸ்(1973)
57. பாறெயின்(1971)
58. வங்காளதேசம்(1974)
59. பார்படோஸ்(1966)
60 பெனின் (டகோமி) (1960) (Benin)
61. பூட்டான்(1971)
62 பொத்ஸ்வானா(1966)
63. புல்கேரியா(1955)
64. பர்மா(1948)
65 புருண்டி(1962)
66. சம்போடியா(1955)
67. காமரோன்(1960)
68. கேப்வேர்ட் தீவுகள்(1975)
69. மத்திய ஆபிரிக்க நாடுகள் (1960)
70. சாட்(1960)
71. சீனக்குடியரசு(1971)
72. கொமோரோ தீவுகள் (1975) (Comoro)
73. கொங்கோ(1960)
74. சைபிரஸ்(1960)
75. டிஜ்பவுற்றி (Djibouti) (1977)
76. கினி குடியரசு(1958)
77. பிஜி(1970)
78. பின்லாந்து(1955)
79. காபொன்(1960)
80. கம்பியா(1965)
81. ஜேர்மன் சனநாயகக்குடியரசு (1973)
82. ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு (1973)
83. கானு(1957)
84. கிறேனடா(1974) Grenada)
85. மத்தியகோட்டுக் கினியா (1958)
86 கினியா—பிஸ்சோ(1974)
87. கயானு(1966)
88. கங்கேரி(1955)
89. ஐஸ்லாந்து(1946)
90. இந்தோனேசியா (1950)
91. அயர்லாந்து(1955)
92. இஸ்றேல்(1949)
93. இத்தாலி(1955)
94. ஐவறி கோஸ்ற்(1960)
95. யமேக்கா(1962)
96. யப்பான்(1956)
97. ஜோர்டான்(1955)
98. கெனியா(1963)
99. குவைத்(1963)
100. லாவோஸ்(1955)
101. லெசேத்தோ(1966)
102 லிபியா(1955)
103. மலகாசி(1960)
104. மாலாவி(1964)
105 மலேசியா(1963)
106. மாலதீவுகள்(1965)
107. மாலி(1960)
108. மால்ரா(1964)
109. மொரிடானியா(1961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. மொரிஷியஸ்(1968) Mauritius)
111 மொங்கோலியா(1961)
112. மொரோக்கோ(1956)
113. மொசாம்பிக்கியூ(1975)
114 நேபாளம்(1955)
115 நைகர்(1960)
116. நைஜீரியா(1960)
117. ஓமான்(1971)
118. பாகிஸ்தான்(1947)
119. பப்புவா-நியூகினி(1975)
120 போர்த்துக்கல்(1955)
121. குவாற்றர்(1971) (Qatar)
122. ருமேனியா(1955)
123 ருவாண்டா(1962)
124. செனிகல்(1960)
125. ஸெஷெல்ஸ்(1976)
126. சியராலியோன்(1961)
127. சிங்கப்பூர்(1965)
128. சோமாலியா(1960)
129. ஸ்பெயின்(1955)
130. இலங்கை(1955)
131 சூடான்(1956)
132. சூரினம்(1975)
133. சுவாசிலாந்து(1968)
134. சுவீடன்(1946)
135. தன்சானியா(1964)
136. தாய்லாந்து(1946)
137. ரோகோ(1960)
138. திறினிடாட்(1962)
139. ரியூனிசியா(1956)
140. உகண்டா(1962)
141. ஐக்கிய அராபிய எமிற்றேஸ் (1971)
142. அப்பவொல்றா(1960)
143. வியட்நாம்(1977)
144. மேற்கு சமோயா(1976)
145. யேமன் (அடன்) (1967)
146. யேமன் (சானு) (1947)
147. சயர்(Zaire) (1960)
148. சாம்பியா(1964)

---

## பொதுச்சபை

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அங்கத்தவநாடுகளைக் கொண்டது. இச்சபை வருடத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அங்கத்துவ நாடு பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஐந்து பிரதிநிதிகளை அனுப்பிவைக்கலாம். பாதுகாப்புச்சபையின் தேவைகளுக்காக விசேட கூட்டங்களையும் இச்சபை கூட்டலாம். சமாதானத்தை பாதுகாத்தல், சர்வதேச பொருளாதாரம், கலாச்சாரம், கல்வி -ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பித்தல் இதன் முக்கிய கடமையாகும். பாதுகாப்புச்சபை, பொதுச் செயலகம், பொருளாதார சமுதாயசபை, சர்வதேச நீதிமன்றம், நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஆகியவற்றுக்குச் சில நியமனங்களைச் செய்தலும் இதன் நடவடிக்கைகளில் ஒன்றாகும். இச்சபை தனது தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு $\frac{2}{3}$ அங்கத்தவரின் சம்மதத்தை பெறவேண்டும். வாக்கெடுப்பு நடைபெறும் போது அங்கத்துவ நாடுகள் தமக்குரிய ஒரு வாக்கைப் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவர். இச்சபையின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக அங்கத்துவ நாடுகள் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு செயலாற்றுகின்றன.

## பாதுகாப்புச் சபை

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரான்ஸ், மக்கள் சீன ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் நிரந்தர அங்கத்துவமில்லாத 10 பிரதிநிதிகளையும் கொண்டது. இந்நிரந்தர அங்கத்துவமற்ற நாடுகளைப் பொதுச்சபை தெரிவு செய்யும். இவர்கள் இருவருடத்திற் கொருமுறை தெரிவு செய்யப்படுவர்.

உலக நாடுகளின் சமாதானத்தைப் பேணும் முக்கிய பொறுப்பு இச்சபைக்குரியது. நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 9 நாடுகளும் சாதகமாக வாக்களித்தால் தான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும். எல்லா முடிவுகளுக்கும் நிரந்தர அங்கத்துவ நாடுகளின் ஆதரவு வேண்டும். நிரந்தர அங்கத்துவ நாடு ஒன்று எதிர்த்தாலும் எந்த முடிவும் செல்லாமல் போய் விடும். நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே உள்ள இந்த அதிகாரத்திற்கு 'விட்டோ அதிகாரம்' (ரத்து அதிகாரம்) என்பர்.

## பொருளாதார சமூக நலச் சபை

உலக மக்களுக்கு ஏற்படக்கூடிய பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இதன் முக்கிய நோக்கம். இதற்கென 15 விசேஷ நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சர்வதேசங்களும் இதன் திட்டங்களைச் செயல்படுத்த இந்த நிறுவனம் ஊக்குவிக்கிறது.

பொருளாதார சமூக நலச் சபையின் கீழ் இயங்கும் 15 இணைப்பு நிறுவனங்கள் வருமாறு.

1. சர்வதேச அணுசக்தித்தாபனம்: (IAEA - International Atomic Energy Agency) அணு சக்தியைச் சமாதானத்தேவைகளுக்கு உபயோகிக்க வைப்பதற்காக 1957 - இல் இந்தச் சர்வதேச அணுசக்தித் தாபனம் நிறுவப்பட்டது. அணுசக்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி செய்வதற்கு ஏற்ற ஆராய்ச்சிகளுக்கு இந்த நிறுவனம் உதவி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

2. உலக உணவு - விவசாய நிறுவனம்: (FAO - Food and Agriculture Organisation) இந்த நிறுவனம் 1945 - இல் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனம், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வறுமை, ஊட்டமின்மை என்பனவற்றை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டது. விவசாயம், கடற்றொழில், காட்டியல், விலங்கு, வேளாண்மை போன்ற நடவடிக்கைகளின் விருத்திக்கு இந்த நிறுவனம் பல்வேறு வகைகளிலும் உதவி வருகின்றது. (பார்க்க பக்கம். 48).

3. சர்வதேச தொழில் தாபனம்: (ILO International Labour Onganisation) தொழிலாளர்களின் நிலையையும் வாழ்க்கைத் தரத்தையும்உயர்த்துவதற்காக அமைக்கப்பட்ட நிறுவனம் இதுவாகும். சர்வதேச தொழிலாளர் நலன் பேணும் சட்டமும் உள்ளது. இந்தத்தாபனம் 1919 - இல் ஆரம்பிக்கப்பட்டது; 1496 - இல் இருந்து ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கீழ் இது இயங்கிவருகிறது:

4. ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக கலாச்சாரத் தாபனம் (UNESCO - United Nations Economic. Social and Cultural Organisation) 'யுனெஸ்கோ' என்ற இந்நிறுவனம், 1946 - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது; இந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் பாரிஸ் நகரில் அமைந்துள்ளது. அங்கத்துவ நாடுகளாக 120 நாடுகள் இந்த நிறுவனத்தில் உள்ளன. அங்கத்துவ நாடுகளின்கல்வி நிலையை உயர்த்துதல், அதிகமானோர்க்குக் கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல், ஆசிரியர் பயிற்சி, பாடவிதான அபிவிருத்தி என்பனவற்றிற்கு வழிவகுத்தல் இந்த நிறுவனத்தின் நோக்கங்களாகும். அத்துடன் கலை ஆக்கங்களை உருவாக்குதல், பல்வேறு கலாச்சாரங்களைப் பரவலாக்குதல் என்பனவும் 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் நோக்கங்களாகும். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இந்த நிறுவனம் அதிக உதவிகளை வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உலக சுகாதாரத் தாபனம்: (WHO - World Health Organisation) உலக சுகாதாரத்தாபனம், 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்தாபனம், தொற்று நோய்கள் சம்பந்தமான தகவல்களைத் திரட்டி அவற்றை உலகெங்கும் அறியத் தருகின்றது. தொற்று நோய்களைப் பரவாமல் தடுத்தல், மூல காரணங்களை அறிந்து களைதல் என்பன இந்தத்தாபனத்தின் நோக்கங்களாகும். சுகாதாரப் பயிற்சி நெறிகள், பிரசவம், குழந்தை நலம் என்பனவற்றிலும் இத்தாபனம் கவனம் செலுத்தி வருகின்றது. சுத்தமான சூழலை ஏற்படுத்துதல், மக்கள் சுகாதாரத்தைப் பேணுதல், சுகாதார அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கு உலக சுகாதாரத் தாபனம் உதவியளிக்கின்றது.

6. சர்வதேச குடிசார்: (சிவில்) விமான சேவை நிறுவனம்: (ICAO - International Civil Aviation Organaisation) உலக நாடுகளுக்கு இடையில் வான் போக்குவரத்தை விருத்தி செய்வதற்காகவும், விமானத்தளங்கள், விமானப் போக்குவரத்து சாதனங்கள், பாதுகாப்பு முதலியவற்றை விருத்தி செய்வதற்காகவும் இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிறுவனம் 1947 - ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் கனடாவில் மொன்றியல் நகரில் உள்ளது.

7. புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி: (IBRD - International Bank for Reconstruction and Development) இவ்வங்கி 1945 - ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அபிவிருத்தி நாடுகளிடமிருந்து (அரசாங்கம், தனியார்) பெற்ற நிதியை இவ் வங்கி கடனாக வழங்குகிறது. இது ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இவ்வங்கியிலிருந்து தென் அமெரிக்காவும், ஆசியாவும் பெரும்பாலான கடன் பெற்ற நாடுகளாகும்.

8. சர்வதேச நாணய நிதி: (IMF - International Monetary Fund) இந்நிறுவனம் 1946 - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வட அத்திலாந்திக் பிரதேச நாடுகளின் இலாபம் கருதி இந்த நாடுகளின் சர்வதேசவர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்காக நிறுவப்பட்டது. கடன் அளிப்பதற்கு வேண்டிய நிதி, நிறுவனத்தின் அங்கத்துவ நாடுகளிடமிருந்து பெறப்படுகிறது. தென் அமெரிக்காவும், ஆசிய நாடுகளும் அபிவிருத்தியடையாத வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளும் குறுகிய காலக்கடனை இந்நிறுவனத்திடமிருந்து பெறலாம். இது நாடுகளின் இறக்குமதிக்கு வேண்டிய வெளிநாட்டு நாணய மாற்றை பெறுவதற்கே இக்கடன் வழங்கப்படுகிறது.

9. சர்வதேச அபிவிருத்திச் சங்கம்: (IDA - International Development Association) சர்வதேச அபிவிருத்திச சங்கம் 1961 - இல் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குக் கடன்வசதி வழங்கி வருகின்றது. சர்வதேச அமெரிக்க அபிவிருத்தி வங்கியை இச்சங்கம் ஒத்ததாகும். தென்அமெரிக்க நாடுகள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தில் அதிக கடன்களைப் பெற்றுள்ளன.

10. சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்: (*International Finance Corporation*) உலக வங்கியின் கீழ் இயங்கும் ஒரு தாபனம் சர்வதேச நிதி கூட்டுத்தாபனம் ஆகும் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் கைத்தொழில் விருத்திக்கு உதவியளிப்பதற்காக இந்தத் தாபனம் 1956 - ஆம ஆண்டு நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் அங்கத்துவ நாடுகளுக்கு கடன் உதவி அளிக்கும்;

11. அகில உலக அஞ்சல் ஒன்றியம்: (*UPU - Universal Postal Union*) சுவிற்சலாந்தில் அஞ்சல் சேவை அதிகாரிகளின் கீழ் சர்வதேச அஞ்சல் சேவையின் இயக்குனர்கள் இயங்கி வருகிறார்கள். இச்சேவை 1815 - ஆம் ஆடிணில் ஆரம்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு ஒரு உடன் பாடு ஏற்படுத்தப்பட்டு, இன்று ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கிவருகிறது உலகிலுள்ளசகல நாடுகளிடையே அஞ்சல் சேவையை ஏற்படுத்துவதும், அதை விஸ்தரிப்பதும், சேவையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதும் இதன் செயல்களாகும்.

12. சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம்: (*ITU - International Telecommunication Union*) ஜெனிவாவில் இதன் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ளது, இச்சேவை 1865 - ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1947 - ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு அளித்து வருகின்றது. உலக நாடுகள் அனைத்துக்கு மிடையே தொலைத் தொடர்புச் சேவையை விஸ்தரித்தும் வருகிறது. இது பல தொழில்நுட்ப ஆய்வுகளை நடாத்தி அவற்றை உலக நாடுகளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையே, செயல் முறையில் நடைபெற வழி வகுக்கிறது. தந்தி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி என்பவற்றை தொழில் நுட்பத்தில்மேலும் மேலும் உலக நாடுகளிடையே விஸ்தரித்து செயல்படுத்து கிறது. இதன் தலைமைக் காரியாலயத்தில் ஐந்து வருடத்திற் கொருமுறை கூட்டம் நடைபெறுகிறது.

13. உலக வளி மண்டலவியல் நிறுவனம்: *(WMO - World Meteorological Organisation)* இந்த நிறுவனம் வானிலை சம்பந்தமான விபரங்களை, உலக நாடுகளிடையே பரிமாறிக் கொள்வதற்காக நிறுவப்பட்டது. *1878* - ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் இயங்கி வருகிறது. *1951* - ஆம் ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கீழ் இயங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் தலைமைஅலுவலகம் ஜெனிவாவில் உள்ளது.

14. கடல் சார்ந்த நாடுகளின் சர்வதேச மகாநாட்டுத் தாபனம்: *(IMCO-International Maritime Consultative Organisation)* உலக நாடுகளின் கப்பல் போக்குவரத்துச் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்தத்தாபனம் நிறுவப்பட்டது; கப்பல் போக்குவரத்து, பாதுகாப்பு என்பன சம்பந்தமான ஒழுங்குகளை

இந்தத்தாபனம் நடைமுறைப்படுத்துகிறது. 1959 - ஆம் ஆண்டில் இருந்து இந்தத்தாபனம், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைமை அலுவலகம் லண்டனிலுள்ளது.

15. வர்த்தகம் தீர்வை சம்பந்தமான பொது உடன்படிக்கை: *(CATT - Genral Agreement on Trade and Tariffs)*

இந் நிறுவனம் *1948* - ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சர்வதேச வர்த்தகம், தீர்வை என்பன சம்பந்தமான சட்ட ஒழுங்குகளை இந்நிறுவனம் வகுத்துள்ளது. *1964* - ஆம் ஆண்டு சர்வதேச வர்த்தக மையங்களை (International Trade Centre) இந்த நிறுவனத்தின் கீழ் உருவாக்கியுள்ளது. இது உலக நாடுகளின் ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவாக்க உதவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைச் செயலகம்

ஐக்கிய அமெரிக்காவில் நியூயோர்க் நகரத்தில் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தலைமைச் செயலகம் அமைந்துள்ளது. கட்டிடமும் நிறுவப்பட்டிருக்கும் இடமும் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் உரிய பொது இடம். இத்தாபனத்தை செயல் படுத்துவதற்கு சகல அங்கத்துவ நாடுகளும் நிதியுதவியளிக்க வேண்டும். ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் பிரதிநிதியும் இத்தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்ற நிரந்தரமாக நியமிக்கப்படுவர். பொதுச் செயலாளரே பிரதான உத்தியோகஸ்தர். ஏனைய நிறுவனங்களுக்கு அதன் நடவடிக்கைகளைச் செயல்படுத்த இக்காரியாலயம் அவ்வப்போது கட்டளைகளைப் பிறப்பிக்கும்.

சமாதானத்தைப் பேணுவதற்காக இத்தாபனம் நிறைவேற்றும் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்கென பாதுகாப்புப்படையொன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கத்துவ நாடுகளால் அனுப்பப்படும் படைகள் இத்தாபனத்தின் ஆணைப்படி சமாதானத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

இத்தாபனத்திலும் இதனோடு தொடர்புடைய நிறுவனங்களாலும் நிறைவேற்றப்படும், தீர்மானங்களை செயல்படுத்துவதற்கு ஒரு நிர்வாக சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் அங்கத்துவ நாடுகளின் பிரஜைகள் இடம் பெறுவர். இதைத்தவிர பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற சிறப்பறிஞர்களும் இத்தாபனத்திலும் இதன் இணைப்பு நிறுவனங்களின் கிளைகளிலும் கடமையாற்றுகிறார்கள்.

## சர்வதேச நீதிமன்றம்

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சாசனத்திற்கு இணங்க, சர்வதேச நீதிமன்றம் ஒன்று இருக்கின்றது. ஹேக் நகரில் இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இந்த நீதிமன்றத்தையும் இதன் கொள்கைகளையும் சில அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினைகளை இம்மன்றம் தீர்த்து வைக்கும். ஆனால், சட்டத்தை மீறுபவர்களை விசாரணைக்கு அழைப்பதற்கு அதிகாரம் இல்லை. இரு சாரப்பினரும் விரும்பித் தமது பிரச்சினைகளை சமர்ப்பித்தால் மட்டுமே இம்மன்றம் விசாரித்துத் தீர்ப்பு வழங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய உரிமையற்ற நாடுகளை ஆட்சி செய்யும் நாடுகளின் அறிக்கைகளைப் பார்வையிடுவதுடன் அவை சுதந்திரம் பெறவும், மனிதாபிமானத்துடன் நடாத்தப்படவும் வழிவகைகளைக் கைக்கொள்வதற்காக தர்மகர்த்தா சபை (நம்பிக்கைப் பொறுப்புச் சபை) என்ற ஒரு சபை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தேசிய மத்திய நிலையமொன்று இலங்கையிலுண்டு. நமது நாட்டில் ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகள், இந்தத் தேசியமத்திய நிலையத்தினூடாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முன்னேற்ற நடை:

சமாதானத்தைப் பாதுகாப்பதும் வறுமையைப் போக்குவதும் முக்கிய குறிக்கோளாகக் கொண்டது இந்நிறுவனம். 1945 - ஆம் ஆண்டு இது நிறுவப்பட்டு 35 ஆண்டுகள் பூர்த்தியாகப்போகின்றது. உலக நாடுகள் பல்வேறு நோக்கங்கள், கொள்கைகள் உடையனவாக பிளவு பட்டிருந்தாலும் அந் நாடுகளனைத்தும் இத்தாபனத்தின் கீழ் சமாதான முறையில் கருமமாற்றுகின்றன. நாடுகளிடையே தோன்றிய பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து சமாதானத்தைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றியடைந்துள்ளது சில பிரச்சினைகளை தீர்க்க முடியாதபோது சபை கூடி போர் நிறுத்தம் செய்து உலக அமைதியைப் பாதுகாத்துள்ளது. நாடுகளிடையே முன்னைய காலங்களில் இருந்ததை விட நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. இத்தாபனத்தின் இணைப்பு நிறுவனங்கள் மூலம் உலக நாடுகளின் வறுமையை நீக்குவதற்குப் பெருமளவு சேவை செய்துள்ளது.

அணுசக்தி உற்பத்தியை குறைப்பதற்கென 1946 - ஆம் ஆண்டு அணுசக்தி ஆணைக்குழு அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அணுசக்தியைக் குறைக்கும் வேறொரு ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது ஆயினும் அமெரிக்கா, ருசியா ஆகிய இரு நாடுகளிடையே நிலவிய வேற்றுமையால் இக்குழு சிறந்த முறையில் செயற்படாது போக 1955 - ல் படைக்குறைப்பு ஆணைக்குழு என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் ருசியா தன்னுடைய படைக்கலன்களை ஏனைய நாடுகள் அறிந்து கொள்வதை விரும்பாது இக்குழுவிலிருந்து வெளியேறி விட்டது. பின்னர் 1958 - ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுசக்தி பரிசோதனையைத் தடுக்க ஜெனிவாவில் கூடி, 10 நாடு களின் குழு அமைக்கப்பட்டது. ஆயினும் அணுசக்திப் பரிசோதனை யையும், அணு ஆயுத உற்பத்தியையும் தடுக்க முடியவில்லை.

மத்திய கிழக்கில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. படையை ஈடுபடுத்தி, யுத்தங்களைத் தடுத்துள்ளது. அரபு யூத யுத்தங்கள் இவ்வாறு தடுக்கப்பட்டன. இந்தியாவும் பாகிஸ்தா னும் காஷ்மீரில் யுத்தம் செய்வதை தடுத்துள்ளது. கொரியாவில் நடைபெற்ற சண்டையை நிறுத்தியதுடன் லெபனன், சிரியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் கொடுத்தது. லெபனன் பகுதிகளிலிருந்து இஸ்ரவேலின் படைகளை வெளியேற்ற ஐ. நா. படைகளை அனுப்பி உதவியது.

ஐக்கிய நாடுகள் தாபனம் உலகில் சாமாதானத்தை ஏற்படுத் துவதுடன் உலக நாடுகளின் வறுமையைப் போக்கிப் பொருளா தார சமூக, கலாச்சார வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டுள் ளது. இலங்கை இத்தாபனத்தினால் அடைந்துவரும் நன்மைகளை ஆராய்வோம். இத்தாபனத்தின் தேசிய மத்திய நிலையம் இலங் கையிலுள்ளது. இம் மத்திய நிலையத்தினூடாகவே எமக்கு உதவி கள் கிடைக்கின்றன. யுனெஸ்கோ, உலக சுகாதார நிறுவனம் போன்ற இணைப்பு நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்களும், நிபு ணர்களும் இங்கு கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் முன் னேற்றத்திற்கு உதவிகள் பல செய்து வருகிறார்கள்.

ஐக்கிய நாடுக தாபனத்தின் இணைப்பு நிறுவனங்கள் சகல அங்கத்துவ நாடுகளிலும் இருக்கின்றன. இவை அந்தந்த நாடுகளின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றன. இந் நிறுவனங்கள் சாதி, மத வேற்றுமையின்றி நாட்டு மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமான முறையில் தீர்த்து வைப்பதுடன் உலக நாடுகளில் செல்வம் நிறைந்த நாடு, வறுமை மிக்க நாடு என்ற பேதத்தை நீக்குவதையும் தமது குறிக்கோளாகக் கொண் டுள்ளன. அபிவிருத்தியடையாத நாடுகளுக்கு உதவுவதன் மூலம் பல நாடுகளை முன்னேற்ற மடைய வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் தாபனத்தில் சில குறைகள் உள்ளன. எனினும் இதுவே மனித குலத்தை அழியாமல் காக்கும் ஒரே அரண்: உலக சமாதானத்தின் காவலன் என்று இது எல்லாராலும் கருதப்படுகிறது.

## வேறு சர்வதேச அமைப்புகள்

போர்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உலக நாடுகள், பல தாபனங்களைத் தோற்றுவித்துள்ளன; பொருளாதார ஒத்துழைப்புகளுக்காகவும் பல சர்வதேச அமைப்புகள் இன்று இயங்கி வருகின்றன. அவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

1. நேட்டோ (வட அத்திலாந்திக் ஒப்பந்தத்தாபனம்)- ருஷியாவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் படையெடுப்புகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் 'நேட்டோ' தாபனத்தை நிறுவினர்.

1939-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் செய்து கொண்ட வட அத்திலாந்திக் உடன்படிக்கையின்படி போர் ஆயுதங்களை பெருமளவில் உற்பத்தி செய்தன. இதன் பயனாக வட அத்திலாந்திக் தாபனம் (நேட்டோ) என்ற அமைப்பை நிறுவின. இதன் தலைவர் அமெரிக்கத் தளபதி. முதல் முதல் இப் பதவியை வகித்தவர் ஜெனரல் ஐசன் ஹோவர், இந்த ஸ்தாபனத்தின் இராணுவத் தலைமையகம் பாரிஸ் நகரில் அமைந்திருந்தது. இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் யாதெனில் இந்த அமைப்பிலுள்ள நாடுகளை ருஷியாவின் படையெடுப்பிலிருந்து பாதுகாப்பதாகும். இதில் அங்கம் வகித்த நாடுகள் அனைத்தும் ருஷியாவிற்குப் பயந்து பாதுகாப்பை நாடியே இவ்வமைப்பில் சேர்ந்தன. பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, போத்துக்கல், பெல்ஜியம், நோர்வே, ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு என்பன முதலில் இதில் அங்கம் வகித்தன. பல நாடுகளின் வீரர்கள் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய முறையில் இந்தத் தாபனம் அமைக்கப்பட்டிருந்தது. ஒரு நாட்டின் மீது வேறொரு நாடு போர் தொடுத்தால் ஏனைய நாடுகள் தம்மீது ஏற்படுத்தப்பட்ட போராகக் கொண்டு அந் நாட்டுக்கு உதவவேண்டும். அங்கத்துவ நாடுகளும் பாதுகாக்க வேண்டுமென்பது இதன் முக்கியமான கொள்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வார்சோ ஒப்பந்தத்தாபனம்- வார்சோ ஒப்பந்தம் வட அத்திலாந்திக் தாபனத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டது இதனை ரூஷியா, ஐரோப்பிய கம்யூனிஸ் நாடுகளைச் சேர்த்து உருவாக்கியது. ரூஷியா, கிழக்குஜேர்மனி, போலந்து, ருமேனியா, ஹங்கேரி, செக்கோசிலோவாக்கியா ஆகிய நாடுகள் இதில் அங்கம் வகித்தன. இந் நாடுகள் தமது இராணுவப் படைகளைப் பெருக்குவதற்கு ரூஷியா ஆதரவளித்தது. அங்கத்துவ நாடுகளையும் ரூஷியாவின் சேனைகளையும் வார்சோ ஒப்பந்தம் ரூஷியாவின் தலைமையின் கீழ் இயங்கும் மிகப்பெரிய இராணுவ அமைப்பாக இயங்கக்கூடிய முறையில் ஒன்று சேர்ந்தது. யூகோசிலாவியா இதில் சேர மறுத்துவிட்டது இந்த ஒப்பந்தத்தின்படி இதன் அங்கத்துவ நாடுகளின் சுதந்திரம் பாதுகாப்பு, அமைதி என்பனவற்றை எல்லா அங்கத்துவ நாடுகளும் சேர்ந்து பேணுவதுடன் ஒரு நாடு தாக்கப்படுமாகில் ஏனைய நாடுகள் உதவி செய்து அந்நாட்டைக் காப்பதும் ஆகும்.

3. அரபு நாடுகளின் சம்மேளனம்-ஐரோப்பிய நாடுகள் தமது பாதுகாப்பிற்காக தாபனங்களை அமைத்துத் தமது பாதுகாப்பை பெற்றது போல ஆசிய நாடுகளும் பாதுகாப்பிற்காக சில உடன்படிக்கைகளைச் செய்துள்ளன. சோவியத் ஐக்கிய நாட்டிற்கு அருகிலிருந்த துருக்கி, ஈராக், ஈரான், பாகிஸ்தான் ஆகியன சோவியத் வல்லரசிற்கு அஞ்சி (ரூஷியா), பிரித்தானியாவிடம் தமக்குப் பாதுகாப்புக்கோரி பாக்டாட் உடன்படிக்கையைச் செய்துகொண்டனர்.

4. சியாட்டோ தாபனம்- கொம்யூனிஸ்ட் தேசங்கள் தம்மைத் தாக்கும் என அஞ்சி அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் பசுபிக் கிழக்குத் தெற்கு எல்லைகளிலுள்ள சில தேசங்களும் பரஸ்பர உதவி அளிக்கும் நோக்குடன் ('தென்கிழக்காசிய உடன்படிக்கை ஸ்தாபனம்') சியாட்டோ என்னும் ஸ்தாபனத்தை நிறுவினர்.

எஞ்சிய ஆசிய நாடுகள் நடுநிலைமை வகித்தன. இவை நேரு வழிகாட்டிய 'பஞ்சசீலக் கொள்கையைப் பின்பற்றின. இவ்வாறு ஆசிய நாடுகளும் போர்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக ஸ்தாபனங்களை தோற்றுவித்து தமக்கு வேண்டிய பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தன. இத்தாபனங்கள் எதிரியைக் கூட்டாக எதிர்ப்பதையே முக்கிய நோக்கமாக கொண்டிருந்ததுடன் பொருளாதாரத் தேவைகளுக்கும் ஒத்துழைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ஒத்துழைப்புக்கான பிரதேசவாரியான நிறுவனங்கள்: பொருளாதார ஒத்துழைப்புக்கான பிரதேச வாரியான நிறுவனங்கள் பல இன்று உலகநாடுகளிடையே இயங்கிவருகின்றன. உலகின் குறித்த சில நாடுகள் தமக்குள் ஒன்றிணைந்து, பொருளாதார ஒத்துழைப்புக்கான நிறுவனங்களை நிறுவியுள்ளன. அதனால், உலகத்தின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் உள்ள நாடுகள் பிரதேசவாரியான உதவியைப் பெற்றுத்தந்தமைக்குப் பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றன. மார்ஷல் நிட்டம், சிவ்கொன்திட்டம், கொழும்புத் திட்டம், ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், உங்டாட் நிறுவனம், ஒபெக் நிறுவனம். என்பன இவ்வாறான பொருளாதார ஒத்துழைப்புக்கான நிறுவனங்களாகும்.

## (1) மார்ஷல் திட்டம்

இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் இப் போரினால் சீரழிந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுவதற்கு அமெரிக்கா முன்னின்றது. அமெரிக்க இராச்சியச் செயலாளர் (Secretary of State) ஜோர்ஜ் காட்லெட் மார்ஷல் ஐரோப்பிய மீட்சித்திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இத் திட்டத்தை இவர் தயாரித்தமையால் இவரது பெயரால் மார்ஷல் திட்டம் எனப்படுகின்றது. இத்திட்டமூலம் சுதந்திர ஸ்தாபனங்களை வளர்க்க எண்ணி 1947ம் ஆண்டு ஐரோப்பிய பொருளாதார அமைப்பைப் பாரிஸில் கூடிய 16 நாடுகளின் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டார்கள். இத் திட்டத்தின் பெரும்பகுதியை நிறைவேற்றும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. இத் திட்டத்தின் நிதி பல்வேறு சிறந்த திட்டங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டது. இத் திட்டத்தில் சேர்ந்து கொண்ட 16 நாடுகளுக்கும் அளிக்கப்பட்ட நிவாரணங்களுக்காகச் செலவிட்ட தொகையின் 80% இனமாகக் கொடுத்து மிகுதியைக் கடனாகக் கொடுத்துதவியது.

## (2) சிவ்கொன் திட்டம் (நான்கு அம்சத்திட்டம்

1948-ம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற றூமன் என்பவர் மார்ஷல் திட்டம் உலகின் தேவைகள் முழுவதையும் பூர்த்தி செய்யக்கூடிய திட்டமல்லவென அபிப்பிராயம் கொண்டு சிவ்கொன் திட்டத்தை வெளியிட்டார். குறிப்பிட்ட 16 நாடுகளுக்கு மட்டுமன்றி பொருளாதாரத்தில் பின்தங்கிய உலகிலிருக்கும் நாடுகள் அனைத்திற்கும் அமெரிக்க அரசாங்கமும் தனியார் நிறுவனங்களும், நிதி உதவியையும், தொழில் நுட்பம் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு உதவிகளையும் வழங்குவதுடன் அந்நாடுகளின் அபிவி ருத்தி நடவடிக்கைகளுக்கு ஊக்கமும் அளிக்க வேண்டுமென அத் திட்டத்தை வகுத்தார். இத்திட்டம் உலக நாடுகளிடையே ஏற் பட்டுள்ள பஞ்சத்தைப் போக்கவும் உதவுமென இவர் அபிப்பிரா யப்பட்டார். மார்ஷலுடைய திட்டத்திலும் பார்க்க இத்திட் டம் பரந்தளவு உதவும் நோக்குடன் வரையறுக்கப்பட்டது. இத் திட்டத்தை அமெரிக்க அரசாங்கமும், ஐக்கிய நாடுகள் சபையும் வரவேற்றது. இவற்றைத்தவிர அமெரிக்கா பல முன்னேற்றமடை யாத நாடுகளின் இராணுவ உதவிக்காகவும் பல கோடி ரூபா வைச் செலவு செய்துள்ளது.

அமெரிக்கா இத்திட்டத்தின் பின்னர் ஐக்கிய நாடுகளின் கிளை தாபனங்களின் மூலம் உலக நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், உலக நாடுகளின் அமைதிக்காகவும் பல உதவிகளைச் செய்துள்ளது.

## (3) கொழும்புத் திட்டம்

இத் திட்டத்தை பிரித்தானிய பொதுநலவமைப்பு நாடுகளின் ஆலோசனைக் குழுவினர் 1950-ம் ஆண்டு சிட்னி, கொழும்பு லண்டன் ஆகிய இடங்களில் கூடித் தெற்கு, தென்கிழக்கு ஆசி யாவின் பொருளாதார முன்னேற்றத்திற்காக வகுத்தனர். ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவதுடன் இதன் அங்கத்துவ நாடுகளின் தொழில் நுட்பத்துறையை இந்நாடுகள் ஒன்றுசேர்த்து வளர்ச்சியடையச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

தொழில் நுட்ப உதவியளித்த நாடுகளின் கூடியளவு உதவி யளித்த நாடு அமெரிக்காவாகும். தொழில் துறையில் பின்தங்கி யிருந்த அங்கத்துவ நாடுகளுக்கு இத் தொழில் நுட்ப உதவியால் பெரும் பயன் விளைந்துள்ளது. 1964—65 ஆம் ஆண்டுவரை இத் திட்டத்தின் கீழ் பெருமளவு தொகையினர் தொழில் வல்லுநர்க ளிடம் பயிற்சி பெற்றதுடன் 4920 இடங்களில் தொழில் நுட் பப் பயிற்சிக்கான வசதிகள் செய்யப்பட்டு உறுப்பு நாடுகளுக்குப் பலகோடி பவுண் பெறுமதியான தொழில் நுட்பக் கருவிகள் வழங்கப்பட்டது. இத் திட்டத்தினால் மருத்துவம், சுகாதாரக் கல்வி, தொழில் வணிகம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், தபால் தந்தி, உணவுற்பத்தி, விவசாயம் என்பன போன்ற துறைகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டதுடன் தொழில்நுட்ப உதவிகளும் அளிக்கப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி பெருகவும், பொருளாதாரம் வளர்ச்சியடையவும் கொழும்புத்திட்டம் அங்கத்துவ நாடுகளுக்குப் பெரிதும் உதவியுள்ளது. தெற்கு, தென்கிழக்காசிய நாட்டுமக்கள் வறுமையிலும் தாழ்ந்த வாழ்க்கைத் தரத்திலும் இன்று இருக்கிறார்கள். இத்திட்டத்தின் நோக்கம் முழுமையாக வெற்றியடைவில்லை. ஆயினும் பல நாடுகள் இத்திட்டத்தால் தொழில் நுட்பக்கல்வி, பொருளாதாரம் என்பனவற்றில் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளன.

தெற்காசியா, தென்கிழக்காசிய நாடுகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் 1951-ம் ஆண்டு ஏழு பொதுநல நாடுகள் சேர்ந்து ஏற்படுத்திய கொழும்புத் திட்டத்தில இன்று ஈரான், கொரியா, பிஜி, மாலைதிவு ஆகிய நாடுகளுட்பட மற்றும் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

## (4) ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம்

ஐரோப்பிய நாடுகள் பல நூற்றுண்டுகளாகப் போரிட்டு வந்தமையால், இப்பொருளாதாரச் சமூகத்தையமைக்க முடியவில்லை. பல அறிஞர்கள் ஐக்கிய ஐரோப்பாவை உருவாக்க முயன்று தோல்வி கண்டார்கள். இரண்டாம் உலகப்போரின் பின் உலக நாடுகளிடையே அமெரிக்காவும், ருஷியாவும் வல்லரசாக வளர்ந்து நின்ற அதேவேளை ஐரோப்பிய நாடுகள் சீரழிந்த நிலையில் இருந்தன. அரசியல், பொருளாதாரத்துறையில் தம்மிடையே ஒற்றுமையேற்பட்டால்தான் மீண்டும் தாம் சிறந்த நிலைமையடையலாமென உணர்ந்தன, இவ்வுணர்ச்சியே ஓர் இயக்கமாக உருவானது.

இவ்வாறுன ஒரு பொருளாதாரச் சமூகம் உருவாவதற்கு முன்னேடியாகப் பிரான்ஸ் நின்றது. 1950-ஆம் ஆண்டு இரண்டு முக்கிய தொழில்களான நிலக்கரி, எஃகு உற்பத்தித்துறைகளில் பிரான்ஸ், மேற்கு ஜேர்மனி, பெல்ஜியம், லக்செம்பர்க்கு, நெதர்லாந்து, இத்தாலி ஆகிய ஆறு ஐரோப்பிய நாடுகளும் பாரீஸில் கூடி தாம் ஒன்றிணைந்து இத்துறைகளில் செயல்படுவதென ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இது ஷுமான் (Schuman) திட்டம் எனப்படும். இத்திட்டத்தில் ஓரளவு வெற்றி பெற்றதால் இத்திட்டத்தின் பயனுக 1950-ம் ஆண்டு ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் என்ற நிறுவனம் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகத்தின் நோக்கம் பொருளாதார ஒருமைப்பாட்டின் மூலம் அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்குவதுமாகும். இந்நிறுவனத்தின் நிர்வாகத்தில் உறுப்பு நாடுகளின் பாராளுமன்றங்களினால் நியமிக்கப்பட்ட 132 அங்கத்தவர் கொண்ட சபை, நீதிமன்றம் என்பன இடம்பெற்றன. இந்நிறுவனத்தைப்போல் ஐரோப்பியப் பொதுச் சந்தையும் ஐரோப்பியப் பொருளாதாரத்தைச் சீர்படுத்தியது.

இப்பொருளாதாரச் சமூகத்தின் உறுப்பு நாடுகள் ஆறும் ஒருவர்மீது ஒருவர் விதித்து வந்த சுங்க வரிகளை நீக்கித் தடையற்ற வர்த்தகச் சட்டத்தை ஏற்படுத்தியதுடன் இச்சமூகத்தில் அங்கம் வகிக்காத ஏனைய நாடுகள் மீது இந்த ஆறு நாடுகளும் ஒரே விதமான சுங்கவரி விதிக்கும் வர்த்தகக் கொள்கையைக் கைக்கொண்டன. அத்தோடு இநத ஆறு நாட்டுத் தொழிலாளர்களும் இந்த ஆறு நாடுகளுக்குள்ளும் தடையின்றிச் சென்று வேலைவாய்ப்புகள் பெறலாமென்றும் தொழிலதிபர்கள் உறுப்பு நாடுகளுள் விரும்பிய நாட்டில் மூதலீடு செய்யவும் உரிமையளிக்கபபட்டது. நாணயச் செலவாணி, வங்கி நடைமுறை, போக்குவரத்துத்துறை, வரிவிதிப்புமுறை என்பனவற்றில் உறுப்பு நாடுகள் யாவறறிலும் ஒரேமுறை கைக்கொள்ளப்பட்டது. விவசாயத் துறையிலும் ஒரே வகையான விலைக்கொள்கை கைக்கொள்ளப்பட்டது.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட ஐக்கியம் அரசியல் பிரச்சனைகளைத் தோற்றுவிக்க ஏதுவாக அமைந்தது. அமெரிக்கா, ருஷியா போல் இந்நிறுவனமும் மூன்றும் அரசியல் சக்தியாக இடம்பெற உறுப்பு நாடுகள் விருமபின. பிரித்தானியா இதில் முதலில் சேர மறுத்தது. இப்பொழுது சேர்ந்துள்ளது. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுகம் 6 நாடுகளின் அமைப்பாக இருந்தாலும் இந்த உறுப்பு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் முன்பிருந்த ஆபிரிக்க நாடுகளுக்கு இணைப்பு உறுப்பு நாடுகள் என்ற தகுதி வழங்கி அவற்றுடனும் பல பொருளாதார ஒப்பந்தங்கள் செய்திருக்கின்றன. இந்நாடுகளுக்கெல்லாம் பல பொருளாதார உதவிகள் வழங்கியது. துருக்கி, கிறீஸ், ஈரான், இஸ்ரவேல் என்பன, இவ்வாறான உதவிகள் பெற்றுப் பயனடைந்த நாடுகளில் குறிப்பிடத்தக்கனவாகும்.

சுங்கவரிகளை நீக்கித் தடையற்ற வர்த்தகத்தை தமக்குள் வளர்த்துக் கொண்டதால் இப்பொழுது ஆறு நாடுகளினதும் பொருளாதாரம் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம், பண்பாடு என்பன ஒற்றுமைக்குத் தடையல்ல என்பதை ஐரோப்பிய பொருளாதார சமூகம் என்னும் நிறுவன ஒருமைப்பாடு உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது.

## (5) உங்டாட் தாபனம்

பொருளாதார வளம்மிக்க நாடுகள், பொருளாதாரத்தில் சீரழிந்திருக்கும் நாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்காகப் பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே 'உங்டாட் தாபனம்' (UNCTAD) ஆகும். உலகநாடுகளில் பின்தங்கிய நிலையிலிருக்கும், நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை விரைவில் நிறைவேற்றுவதற்கு, வர்த்தகத்தை ஊக்குவித்தல் அவசியம் என்பதனை உங்க்டாட் நிறுவனம் நிறுவப்பட்டது. இதனை 'ஐக்கிய நாடுகளின் வர்த்தகம், அபிவிருத்தி ஆகியவற்றிற்குரிய ஆணைக்குழு எனலாம். நாடுகளுக்கு இடையிலாலான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை விரிவாக்குவதற்கு இந்நிறுவனம் நடவடிக்கைகள் எடுக்கின்றது இந்நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பாகத் திகழ்கிறது.

ஜெனிவாவில் 1964 - ம் ஆண்டு நிறுவனம் கூட்டப்பட்டது. உலக நாடுகளுக்கு இடையேயான சர்வதேச வர்த்தகம் தொடர்பாக அபிவிருத்தியடையும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு வழி முறையாகவே இம் மகாநாடு கூட்டப்பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உலக சனத்தொகையில் $^2/_3$ பங்கினைக் கொண்டிருந்தும் முழு உலக வர்த்தகத்தில் மிகச்சிறு பகுதியையே அவை கொண்டுள்ளன. இந்நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஏறத்தாழ $\frac{1}{6}$ பங்கினையே வகிக்கின்றன. அத்துடன் இந்நாடுகளின் வெளிநாட்டுக் கடனும் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்துச் செல்கின்றது. அதனால் அவற்றில் அபிவிருத்தி பிரச்சினைக்குரியதாகியது. இந்நிலையில் இந்நாடுகளைக் கைதூக்கி விடுவதற்கும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குமாக 'உங்க்டாட்' நிறுவப்பட்டது.

'உங்க்டாட்' நிறுவனத்தில் 150 அங்கத்துவ நாடுகள் இருக்கின்றன. அங்கத்துவ நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய வகையில் அந்நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தை விரிவடையச் செய்ய இந் நிறுவனம் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தீர்வைவரி அறவிடுதல், ஒரு சில நாடுகளுக்குக் கூடிய சலுகை காட்டுதல் என்பனகாரணமாக, உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்து கொள்ள முடியாத நிலையில் அபி விருத்தியடைந்து வரும் நாடுகள் உள்ளன. அதனால் வர்த்தகத் திற்குத் தடையான தீர்வை வரிகளைக் குறைப்பதன் மூலமோ அல்லது முற்றாக நீக்குவதன் மூலமோ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு, அபிவிருத்தியடைந்த நாடு களின் சந்தைகளைப் பெற்றுக் கொடுத்தல் உங்டாட் நிறுவனத் தின் பிரதான செயற்றிட்டமாகும்

2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமக்குத்தேவையான உணவுப் பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் அபிவிருத்தி யடைந்த நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து வருகின்றன. இந்த இறக்குமதிகளுக்கான விலைகள் காலத்திற்குக் காலம் மாற் றப்பட்டு வருகின்றன. அதனால் இறக்குமதி நாடுகள் பொருளா தாரப் பிரச்சினைகளுக்கு தள்ளப்படுகின்றன. எனவே இறக்குமதி களுக்கான விலைகள் தளும்பாமல் பார்த்துக் கொள்வதுடன் அவற் றிற்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுப்பதற்கு உத்தர வாதமளித்தலும் இந் நிறுவனத்தின் இன்னோர் செயற்றிட்டமா கும்.

3. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வருமானம் ஒரு சில ஏற்றுமதிப் பொருட்களில் தங்கியிருப்பதால் அவை பொரு ளாதார நெருக்கடிக்குத் தள்ளப்படுதல் சுலபமாகிறது. உதாரண மாக இலங்கையின் ஏற்றுமதி தேயிலை, தென்னை, றப்பர் முதலிய பொருட்களில் மட்டும் தங்கியிருக்கின்றது. இத்தகைய நிலையைத் தடுத்து அந் நாடுகளின் உற்பத்தித் துறையைப் பன்முகப்படுத்து வதற்கு உற்சாகம் அளிக்கவும் 'உங்டாட்' முயல்கின்றது.

4. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இன்று கைத்தொ ழில் உற்பத்திகள் அதிகரித்து வருகின்றன. ஆனால் அந்த உற் பத்திப் பொருட்களை விற்பதற்குப் பெரும் சிரமம் தோன்றியுள் ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் உற்பத்திப் பொருட் களுடன் ஏற்படும் போட்டியும், அப்பொருட்கள் வகிக்கின்ற ஏக போக உரிமையும் இந்நாடுகளின் உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தை வசதியை ஏற்படுத்த இடமளிப்பனவாகவில்லை. அதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை விற்பதற்குப் புதிய வழிமுறைகளைக் கண்டு பிடிப்ப தற்கு உங்க்டாட் நிறுவனம் முயல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அத்துடன் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி செய்யும் மூலப்பொருட்களுக்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் அறவிடும் கூடுதலான தீர்வையைக் குறைத்து அப்பொருட்களின் ஏற்றுமதி மூலம் பெறப்படும் வருமானத்தை அதிகரிக்கவும் உங்க்டாட் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தேயிலை, றப்பர் போன்ற மூன்றும் உலகத்தின் (அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள்) உற்பத்திப் பொருட்களை மலிவாக வாங்குவதன் மூலமும் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை மூன்றும் உலகில் உயர் விலைகளில் விற்பதன் மூலமும் இந்தச் செல்வ நாடுகள் செல்வத்தைத் திரட்டின. இத்தகைய சுரண்டலுக்கு எதிராக மூன்றும் உலகத்தை ஐக்கியப்படுத்துவதே உங்க்டாட்டின் பிரதான முயற்சிகளாயிருந்து வருகிறது.

உலகின் சுமார் 150 நாடுகளின் இறைமையையும் சுதந்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சர்வதேச ரீதியிலான ஒரு புதிய பொருளாதாரக் கட்டுக்கோப்பை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளைச் செய்வதற்கு உங்க்டாட் பெரிதும் உதவியது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உகந்த வகையில் ஒரு சாதகமான புதிய சர்வதேச பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதில் உங்க்டாட் ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளது.

கடந்த காலங்களில் ஒவ்வொரு நாடும் தனக்கென வர்த்தகச் சட்டங்களைக் கொண்டிருந்தது. தற்போது இது சர்வதேச ரீதியில் அமைய வேண்டும் என்பது உணரப்பட்டு விட்டது. அதனால் புதியதொரு பொருளாதாரப் பாங்கை உருவாக்குவதில் உங்க்டாட் நிறுவனம் முயன்று வருகின்றது. பழைய பொருளாதார அமைப்பால் நன்மையடைந்தவை உலகின் ஒருசில நாடுகளே. புதிய பொருளாதார அமைப்பில் அந்தகைய பெறுபேறுகள் பகிரப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைச் செயற்படுத்த உங்க்டாட் முயல்கின்றது.

## (6) ஒபெக் நிறுவனம்

அரபு நாடுகளிலுள்ள பெற்றோலியம் உற்பத்தி செய்யும் எல்லா எண்ணெய் நிறுவனங்களும் வெளிநாட்டினர் கட்டுப்பாட்டில் இருந்தன. எனவே, அரபுநாடுகள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய வருவாய் மிகக்குறைவாக வருவதாக உணர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் விளைவாக 1960 - ஆம் ஆண்டு ஈரான், வெனசுவெலா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு இணைப்பு நிறுவனத்தை நிறுவின. அதுதான் பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் நிறுவனம் (OPEC - Organisation of Petroleum Exporting Countries) ஆகும். அதனை 'ஒபெக் நிறுவனம் என்பர், இன்று இந்த நிறுவனத்தில் குவைற், ஈராக், லிபியா ஆகிய நாடுகளும் இருக்கின்றன. வெனசுவெலா அரபுநாடல்ல, எனினும் அரபுநாடுகளில் நிலவிய நிலைமையே அந்நாட்டிலும் நிலவியதால் ஒபெக் நிறுவனத்தில் சேர்ந்துள்ளது இந்நிறுவனம் 1970 - 71 - இல் ஒரு பீப்பா எண்ணெயின் விலையை 72% உயர்த்தியது. இந்த விலையுயர்வு காலத்திற்குக்காலம் அதிகரித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனத்தின் விளைவாக மத்திய கிழக்கு நாடுகள் இன்று உலகின் செல்வம்மிக்க சில நாடுகளாக மாறி வருகின்றன.

ஒபெக் நிறுவனமும் அதனால் உருவாகிய பெற்றோலிய விலை ஏற்றமும் உலகநாடுகளில் பெரும் பொருளாதாரச் சிக்கலைத் தோற்றுவித்திருக்கின்றது வர்த்தகரீதியான பொருட்களின் விலையேற்றம் பெரும் பாதிப்பினைத் தோற்றுவித்திருக்கின்றது. பயிர்ச் செய்கைத்துறை, கைத்தொழிற்றுறை என்பன பாதிப்புற்றுள்ளன. கொண்டுசெல்லற் செலவு அதிகரித்துள்ளது. அதனால் ஒவ்வொரு நாடுகளிலும் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. உலகநாடுகள் தமது வருமானத்தில் பெரும்பகுதியைப் பெற்றோலியத்துக்காகச் செலவிட நேர்ந்துள்ளது. உலக எண்ணெய்த் தேவையில பெரும் பகுதி அராபிய நாடுகளிடம் இருப்பதால்தான், அரபு நாடுகள் தம் விருப்பப்படி விலையை உயர்த்துவது சாத்தியமாயிற்று. ஒபெக் நாடுகள் தம்நாடுகளில் இருக்கின்ற மீளாவளமாகிய பெற்றோலியத்தை உரியவிலையில் விற்றுத் தமது நாட்டைச் செழிப்பாக்கிவிட முயல்கின்றன. 1950 - இல் ஐந்தரைக்கோடி டொலரை வருவாயாகப் பெற்ற சவுதி அரேபியா இன்று 256 கோடி டொலரை வருவாயாகப் பெறுகின்றது நான்காம் உலகநாடுகளாக பெற்றோலிய உற்பத்திநாடுகள் உருவாகி வருகின்றன.

## 3. வெளிநாட்டு உதவிகள்

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர் நோக்குகின்ற மூலதனப் பற்றுக்குறை, தொழில்நுட்ப உதவி என்பனவற்றை, அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து உதவிகளாகப் பெறல் அவசியம் என்பது இன்று உணரப்பட்டிருக்கின்றது. உலகில் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு நாடும் தனித்து வாழமுடியாது. அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி குன்றிய நாடுகளின் விருத்திக்கு உதவிகள் வழங்க வேண்டியது இரண்டு நிலைமைகளில் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. அவை;

1. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஒருகாலகட்டத்தில், அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஆதிக்கத்தின்கீழ் குடியேற்ற நாடுகளாக இருந்திருக்கின்றன; அதனால், இந்த நாடுகள் அடைந்த பொருளாதாரச் சீர்குலைவிற்கு, அபிவிருத்தியடைந்த நாடுகள் காரணமாகவுள்ளன. அதனால், விருத்தி குன்றிய அந்தநாடுகளை அபிவிருத்தியடையவைப்பதற்குப் பல்துறைசார்ந்த உதவிகளை வழங்க வேண்டியது, அபிவிருத்தியடைந்த நாடுகளின் கடமையாகும்.

2. நவீன உலகில் சகல நாடுகளும் பொருளாதாரத்துறையில் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய பிணைப்பினைக் கொண்டிருக்கின்றன. விருத்தியடைந்த நாடுகளின் பொருளாதார உறுதிநிலை, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விருத்தியிலும் விருத்தியின்மையிலும் தங்கியுள்ளது:

(அ) விருத்தியடைந்த நாடுகள் தமது உற்பத்திப்பொருட்களை விற்பனை செய்வதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை நம்பியுள்ளன. (ஆ) விருத்தியடைந்த நாடுகள் தமது கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் பலவற்றிற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை நம்பியுள்ளன. இவை காரணமாக, விருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பல வேறு உதவிகளை வழங்குவது அத்தியாவசியமாகவுள்ளது.

வெளிநாட்டு உதவி வழங்கல் பல்வேறு வழிகளில் செயல்படுகின்றது. அவை:

(அ) அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு நன்கொடைகளை வழங்குகின்றன. நன்கொடைத் திட்டத்தின் கீழ், உபகரணங்கள், பொருட்கள் மூலதனம் முதலியன வழங்கப்படுகின்றன.

(ஆ) அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன. கடன்கள் வட்டியுடைய கடன்களாக அல்லது வட்டியில்லாத கடன்களாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் விருத்திக்குப் பயிற்றுவிக்கும் வசதிகளை வழங்கியும், தொழில் நுட்பவியலாளரைத்தந்தும் உதவி வருகின்றன.

வெளிநாட்டு உதவிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது, மார்ஷல் திட்டமாகும். மார்ஷல் திட்டம் குறித்து நாம் ஏற்கவே அறிந்துள்ளோம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளின் விருத்திக்காக மார்ஷல் திட்டம் உருவாக்கப்பட்டது; ஆனால், இன்று அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விருத்திக்காக வெளிநாட்டு உதவிகளை வழங்கும் பல நிறுவனங்கள் உருவாக்கப் பட்டு இயங்கிவருகின்றன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உதவிகளை அளிப்ப தற்காக அமைக்கப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்கள் எனப்பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

1. புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி (உலக வங்கி) (IBRD) :- ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பு நிறுவனங்களில் ஒன்றான உலக வங்கி 1945-ஆம் ஆண்டு நிறுவப் பட்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு உலக வங்கி கடன் வசதிகளை வழங்கிவருகின்றது. அத்துடன் தொழில் நுட்ப உதவிகளையும் ஏற்படுத்திக்கொடுத்து வருகின்றது. அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளின் விருத்திக்காக அபிவிருத்தித் திட்டங் களையும் இந்த நிறுவனம் வழங்கிவருகின்றது. ஆசிய நாடுகளும் லத்தின் அமெரிக்க நாடுகளும் உலக வங்கியிலிருந்து அதிக கடன் வசதிகளைப் பெற்றுள்ளன.

2. சர்வதேச நாணய நிதி (IMF) :- (முன் விபரிக்கப்பட் டுள்ளது)

3. சர்வதேச அமெரிக்க அபிவிருத்தி வங்கி (IADB- International American Development Bank) :- உலக வங்கியை ஒத்த ஒரு நிறுவனமாக இது செயற்படவில்லை. கரீபி யன் கடலில் அமைந்துள்ள நாடுகளுக்குக் கடன் அளிப்பதற்கா கவே இந்த அமெரிக்க அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டதா கும். இந்த வங்கி தனக்குத் தேவையான நிதியை ஐசகிய அமெரிக்க அரசிடமிருந்தும், தனியபட்ட நிற்வனங்களிடமிருந் தும் பெற்றுக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)- இதுகுறித்து ஏற்கனவே விபரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனல், இச் சங்கம், சர்வதேச அபிவிருத்தி வங்கியைப் போன்று ஏஸ்பியன் கடல் நாடுகளுக்கு மாத்திரமன்றி, வேறுபல நாடுகளுக்கும் கடன் வசதி வழங்கி வருகின்றது.

5. சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம் (AID—Agency for International Development) : இந்த நிறுவனம் 1966-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. உலகவங்கியிடமிருந்தும் நாடுகளிடமிருந்தும் பெற்ற நிதியை இந்த முகவர் நிலையம், நிவாரணம் கோரும் நாடுகளுக்குக் குறைந்த வட்டிக்கு நீண்டகாலக் கடனுக வழங்கி வருகின்றது.

6. ஐரோப்பிய அபிவிருத்திப் பகுதி (EDF—European Development Fund) :- மேற்கு ஐரோப்பிய நாடுகளின் குடியேற்ற நாடுகளுக்கு நிதி உதவி அளிப்பதற்காக ஐரோப்பிய அபிவிருத்தி நிதி ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமாக ஆபிக்க நாடுகளுக்கு இந்த நிறுவனம் அதிக கடன்வசதிகளை வழங்கியுள்ளது.

7. கொழும்புத்திட்டம்:- முன் விபரிக்கப்பட்டிருக்கின்றது.

8. ஆசிய அபிவிருத்தி வங்கி:- ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்காக 1966-இல் இந்த வங்கி அமைக்கப்பட்டது. இது ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் இயங்குகிறது.

இவ்வாறுன வெளிநாட்டு உதவிகளின் காரணமாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உடனடிப்பயனைப் பெறுகின்றன. எதிர்கால விருத்திக்காக நல்லபல திட்டங்களை உருவாக்கிக் கொள்கின்றன. ஆனல், அவை கடன்சுமைக்குள் தள்ளப்படுகின்றன என்பதை மறந்துவிடலாகாது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது ஏற்றுமதிமூலம் பெறுகின்ற அந்நியச் செலாவணியில் பெரும் பங்கை, வெளிநாட்டுக்கடன்களை அடைக்க பயன்படுத்த நேரிடுகிறது.

## இலங்கை பெறும் வெளிநாட்டுதவிகள்

இலங்கை பல்வேறு வகைகளில் உலக நாடுகளிடமிருந்தும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் வெளிநாட்டுதவியைப் பெற்று வருகின்றது, பெறப்படும் இந்த வெளிநாட்டுதவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்களான டொலர், மவுன் ஆகியவையாகவும், பண்டங்க ளாகவும், தொழில் நுட்ப கைத்தொழில் துறையில் கிடைக்கும் நிவாரணங்களாகவும் அமைந்துள்ளன. வெளிநாட்டு நாணய மாகப் பெறப்படுவது நீண்டகாலக் கடன்களாகும். நமது நாணய மாகிய ரூபாவைக் கொண்டு அடைக்கக் கூடியதாகக் குறுகிய காலக் கடன்களும் பெறப்படுகின்றன.

இலங்கை பின்வரும் நிறுவனங்களிடமிருந்தும், நாடுகளிலிருந் தும் உதவிகளைப் பெற்று வருகின்றது. அவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்

1. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்ப் பெறப் படும் உதவிகள்: போக்குவரத்து, திட்டமிடல், நீர் வளத்தைப் பயன்படுத்தல், நிலவளவை போன்ற நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படும் அடிப்படைச சேவைகளுக்கு இந்த உதவிகள் உதவுகின்றன. அத்துடன் விலங்கு வேளாண்மை, பாற்பண்ணைகள் நடத்துதல். மீன்பிடி அபிவிருத்தி, உப உணவுப் பயிர்களின் அபிவிருத்தி முதலான விவசாய நடவடிக்கைகளுக்கும் இந்த உதவிகள் பெறப்படுகின்றன. மேலும் கல்வி, சுகாதார சேவை, பலவகைக் கைத்தொழில அபிவிருத்திகள் என்பனவற் றிக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உதவி களை இலங்கை பெற்று வருகின்றது.

2. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் இணைப்பு நிறுவனங்களிலி ருந்து பெறப்படும் உதவிகள்: உணவு விவசாயத்தாபனம், உலக சுகாதாரத் தாபனம், ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாச் சாரத்தாபனம், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் குழந்தைகளுக் கான அவசரகாலநிதி நிறுவனம் என்பன ஐக்கிய நாடுகள் தாப னத்தின் இணைப்பு நிறுவனங்களாகும். இவற்றில் இருந்து விவ சாய, கல்வி, சுகாதார விடயங்களை விருத்தி செய்வதற்காக உதவிகள் பெறப்படுகின்றன. அத்துடன் உலகவங்கியிலிருந்தும் கடன்களும் உதவிகளும் பெறப்படுகின்றன.

3. ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் தொடர்பில்லாத வேறு சர்வதேச நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் உதவிகள்: கொழும்பு திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி, போர்ட் நிதி ஏற்பாட்டு நிறு வனம் முதலியன இத்தகைய சர்வதேச நிறுவனங்களாகும். கொழும்புத்திட்டம் 1950-இல் ஆரம்பிக்கப்பட்டது. பொதுநல அமைப்பில் அங்கம் வகிக்கும் ஆசிய நாடுகளது அபிவிருத்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் நோக்கமாகவே கொழும்புத்திட்டம் உருவாக்கப்பட்டது. 1966-இல் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் தனியார் தாபனமான போர்ட் வியாபாரத் தலத்தினல் ஏற்படுத்தப்பட்டதே போர்ட் நிதி ஏற்பாடாகும். ஜேர்மனியிலுள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டதே இலங்கை நிதி ஏற்பாடாகும். இந்நிறுவனங்களிடம் இருந்து இலங்கை உதவிகளைப் பெறுகின்றது.

4. உலக நாடுகளிலிருந்து பெறப்படும் உதவிகள்: இலங்கை உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றது. முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முறை நிலவும் நாடுகளான அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், இந்தியா, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியஇராச்சியம், கனடா, மேற்கு ஜேர்மனி, சுவீடன் என்பன இலங்கைக்குப் பல வகையில் உதவுகின்றன. அத்துடன் சமதர்மப் பொருளாதார அமைப்புமுறை நிலவும் நாடுகளான சோவியத் ஒன்றியம், சீனு, யூகோசிலாவியா, போலந்து, ஜேர்மன் சனநாயகக் குடியரசு என்பனவும் பல வகைகளில் உதவி வருகின்றன. உதாரணமாக சோவியத் ஒன்றியத்தின் உதவியுடனேயே களனிடயர்த் தொழிற்சாலையும், முகத்துவார மா ஆலையும் நிறுவப்பட்டன. சீனுவின் உதவியுடனேயே பூகொடையில் புடைவைத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. ஜேர்மன் சனநாயகக் குடியரசின் உதவியுடனேயே துல்கிரியாவில் நெசவுத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் நாம் வெளிநாட்டுதவியைப் பெற்று வருகின்றோம். வெளிநாட்டுதவி நமது பொருளாதார விருத்திக்கு அத்தியாவசியமானது. எனினும், நமது அந்நியச் செலவாணியில் ஒரு பகுதி நமது கடன்களை அடைக்கச் செலவாகின்றது; நாம் நமது ஏற்றுமதி வருவாயாகப் பெறும் வெளிநாட்டு வருவாயில் ஒவ்வொரு 100 ரூபாவிலும் 30 ரூபாவை வட்டியாகவும் கடன் மீட்சித் தொகையாகவும் செலவிட நேர்ந்துள்ளது.

இதுவரை நாம் கற்ற விபரங்களின்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் பலதரப்பட்ட பொருளாதார அமைப்புகளை அறிந்தோம். ஐக்கிய நாடுகள் தாபனம் முதலான உலக நாட்டு அமைப்புகள் மூலம் நாடுகளிடையே ஏற்படும் உறவுகளையும், உதவிகளையும் அறிந்தோம். வளங்களும், இதர பொருள்களும் பூமியில் சமச்சீரற்றுப் பரவியுள்ளன. இதனால் தற்காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டியநிலை காணப்படுகின்றது. உலகில் வாழும் மக்கள் எத்தனை விதமானவராகக் காணப்படுகின்றனரோ அத்தனை விதமான வேறுபாடுகளை உலகம் கொண்டுள்ளது. ஒன்றையொன்று சார்ந்த நிலை உலகநாடுகளை இணைக்கும் சக்தியாக விளங்குகின்றது. இதனால் தற்காலத்தில் ஓர் உலகக்கோட்பாடு உருப்பெற்றுள்ளது. உலகநாட்டு மக்கள் யாவரையும் சமமாகச் சிர்தூக்கி, ஒரு நாட்டிற்கு ஒரு நாடு உதவி செய்து வாழ்ந்து உயரவேண்டும் என்ற மனப்பாங்கு இன்று தோன்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R.R

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

க. பொ. த. உயர்தர வகுப்பு
புதிய பாடத்திட்டத்திற்குரிய

# புவியியல் நூல்கள்

1. பெளதிகச்சூழல் - நிலவுருவங்கள்
2. பெளதிகச்சூழல் - காலநிலையியல்
3. அபிவிருத்திப்புவியியல் 1 (உலகப்பாங்குகள்)
4. அபிவிருத்திப்புவியியல்-2 (தனி ஆய்வுகள்) அச்சில்
5. புவியியல் புள்ளி விபரவியல்.
6. படம் வரை கலை
7. எறியங்கள்
8. வரைப்படங்கள்
9. புவியியல் தேசப்படத்தொகுதி.
10. மனிதத்துலக்கங்கள். (அச்சில்)

ஸ்ரீலங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

CHITRA ACHCHAKAM
310, Clock Tower Road, Jaffna

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org